கல்லூரி சிறப்பிதழ்

கல்கி


KALKI 18-10-09



''ஒரு மாறுதலுக்கு ஸாரி கட்டிக்கலாம்னு உடம்பெல்லாம் மூடிக்கிட்டு காலேஜுக்குப் போறது ரொம்ப வெட்கமாயிருக்குப்பா!''

"நான் ஒரு குடும்பப்பெண்
எனவே நான் உடுத்தும் உடைகள் குடும்பப் பாங்காக இருக்க வேண்டும்."






MF-18 TAM

உங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி

மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்

மஃபத்லால் இண்டஸ்ட்ரீஸ்
மஃபத்லால் ஃபைன்





இவர்கள் வித்தியாசமானவர்கள்



1. முதல்வர் பி. எஸ். மணி சுந்தரம்
2. திருச்சி ரீஜனல் என்ஜினீர்க் கல்லூரி முகப்புத் தோற்றம்.
3. பாடம் சம்பந்தப்பட்டதான ஒரு கருத்தரங்கில் மாணவர்கள்.

"சுமார் பதினாறு ஆண்டுகளாக இயங்கி வரும் ஒரு கல்லூரியில், கல்லூரி ஆரம்பித்த நாளிலிருந்து ஒரே முதல்வர் தொடர்ந்து பதவியில் இருந்து வருகிறார். இந்தப் பதினாறு ஆண்டுகளில் எந்த வித மாணவர் பிரச்னையும் கிடையாது. போராட்டம், கிளர்ச்சி, ஸ்ட்ரைக் என்ற சொற்களுக்கும் இக்கல்லூரிக்கும் சம்பந்தமே கிடையாது. மாணவர்களும் கல்லூரி முதல்வரும் இன்னுயிர் நண்பர்கள் போல்பழகி வருகிறார்கள்" என்றெல்லாம் கேள்விப்பட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் திருச்சி ரீஜனல் என்ஜினிரிங் கல்லூரிக்குள் நுழைந்து பார்த்தபோதுதான் அவ்வளவும் உண்மை என்று புலனாயிற்று. இந்தப் பிராந்தியப் பொறியியல் கல்லூரி தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல; பாரதத்திற்கே பெருமை கூட்டுகிறது.

மத்திய, தமிழக அரசின் கூட்டுறவில் இயங்கி வரும் இக்கல்லூரி, நிர்வாக விஷயத்தில் தனித்தியங்கும் உரிமை பெற்றுள்ளது. பொறியியல் பட்டப் படிப்பு சென்னை சர்வகலாசாலையின் மேற்பார்வையில் இருந்தாலும் அதற்கு மேற்பட்ட போஸ்ட் கிராஜுவேட் படிப்பு விஷயத்தில் சுய நிர்ணய அதிகாரம் பெற்றுள்ளது.



மொத்த இடங்களில் ஐம்பது சதவீதம் தமிழக மாணவர்களுக்கும் மீதமுள்ள இடங்கள் வெளி மாநில மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய வகுப்பினருக்கான இடங்கள் தவிர மீதமுள்ள இடங்கள் தகுதி அடிப்படையில்தான் வழங்கப்படுகின்றன. மாணவர்கள் விடுதியில் கட்டாயமாகத் தங்கிப் படித்தாக வேண்டும்.

சாந்தமான முகம். உணர்ச்சி வயப்படாத நிதானப் பேச்சு. அழுத்தமான கருத்துக்கள். தன்னம்பிக்கை — இவைகளின் இருப்பிடம் தான் கல்லூரி முதல்வர் திரு மணி சுந்தரம்.

பொறியியலில் உயர் நிலைப் பட்டப் படிப்பை மேல் நாட்டுக் கல்லூரிகளில் முடித்தவர். பொறியியல் துறை சம்பந்தப்பட்ட பல முக்கிய பொறுப்புக்களை அனைத்திந்திய ரீதியில் நம் நாட்டில் வகித்து வருபவர் திரு மணி சுந்தரம். ரீஜனல் என்ஜினியரிங் கல்லூரியின் முதல்வர் பதவியை விட மனமில்லாமல் 1975ம் ஆண்டு அன்று

✱ இதுபோன்ற நூலகம் காண்பது அபூர்வம்.

மலை சர்வகலாசாலையின் துணைவேந்தர் பதவி இவரைத் தேடி வந்தபோது ஏற்காமல் விட்டுவிட்டார். தற்போது புதிதாகத் தோற்றுவிக்கப்படவிருக்கும் திருச்சி சர்வ கலாசாலையின் துணை வேந்தர் பதவி இவரைத்தான் நாடி வரும் என்பது பலருடைய கருத்து. ஏற்றுக்கொள்வாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

''இந்தக் கல்லூரியின் தனிச் சிறப்புக்கள் என்ன?'' என்று திரு மணி சுந்தரத்திடம் கேட்டபோது புன்னகை பூத்துவிட்டு அடுக்கினார்:

''இங்கு பொறியியலில் 12 பாடத் திட்டங்களில் பட்டப் படிப்புக்களையும், பதினாறு பாடத் திட்டங்களில் மேல் நிலைப் பட்டப் படிப்பையும் அளிக்கிறோம். இந்தியாவில் வேறு எந்தப் பொறியியல் கல்லூரியிலும் இல்லாத பாடத் திட்டங்கள் சிலவற்றில் நாங்கள் மேல் நிலைப் பட்டப் படிப்பு வழங்குகிறோம். சுற்றுப்புறத்தில் உள்ள பல தொழிலகங்களுக்குச் சென்று பொறியியல் துறையில் அவர்களது தேவைகளை மனத்தில் கொண்டு அதற்கேற்பமாணவர்களைப் பயிற்சிக்கிறோம். படிப்பு முடித்ததும் பட்டதாரிகள் உடனடியாக வேலை வாய்ப்பு பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு ஒரு தனி இலாகாவை நிறுவியுள்ளோம். இங்கு பட்டம் பெற்ற பிறகு வேலை கிடைக்கவில்லை என்ற சொல்லே பொதுவாக இருக்காது.

''படிக்கும் நாட்களில் எந்த மாணவனும் எந்த நேரத்திலும் எவ்வித உதவியையும் நாடி என்னிடம் வரலாம்.


''இங்குள்ள விடுதிகளில் குறைந்த செலவில் சிறப்பான வசதிகள் உண்டு. இக் கல்லூரியில் இருக்கும் நூலகத்திற்கு ஈடாகப் பெரும்பாலானபல்கலைக் கழகங்களில் கூடக் காண முடியாது!''

மணி சுந்தரம் கல்லூரி முழுவதையும் எனக்கு அழைத்துச் சென்று காட்டினார். சுற்றிப் பார்க்கும்போதே தமது கல்லூரி பற்றி மட்டுமின்றிப் பொதுவாகக் கல்வித் துறையில் சில அம்சங்கள் பற்றியும் கருத்துக்களை வெளியிட்டார்.

''செமஸ்டர் முறை எனக்குச் சரியானதாகப்படவில்லை. படிக்கும் நாட்களை விட தேர்வு எழுதும் நாட்கள் அதிகமாக இருப்பது போன்று மயக்கத்தைத் தருகிறது. இன்டர்னல் அஸெஸ்மென்ட் என்பதில் வேறு பல சந்தேகங்களும் எழுகின்றன. என் அபிப்பிராயத்தில் இறுதி ஆண்டின் இறுதியில் மட்டும் தேர்வுக்கான சகல விதி முறைகளையும் சரியாக அனுசரித்து மாணவர்களுக்கு ஒரு தேர்வு நடத்தினால் போதும். கல்வி முறை மாணவர்களுக்கு அறிவாற்றலைப் பெறத் தூண்டும் கருவியாக இருக்க வேண்டுமே தவிர தேர்வுகளையே குறிக்கோளாகக் கொண்டதாக இருக்கக் கூடாது.

''ஒவ்வொரு கல்லூரியையும் நன்கு வளர்த்து அது வளர்ந்தபின் அக்கல்லூரிக்குத் தனித்தியங்கு அதிகாரம்(Autonomous Status) வழங்குவது கல்வித் துறையின் வளர்ச்சிக்கு உதவும்.''

இவ்விதம் மணி சுந்தரம் கூறிவரும் போது, 'கல்வித் துறையில் நாமும் மாறுதல் செய்தோம்' என்று அடுத்தடுத்துப் பதவிக்கு வருபவர்கள் கிளறிக் குளறுகிற போக்கு என்று மாறுமோ என்றுதான் ஒரு நிலையான நல்ல கோட்பாடு உருவாகுமோ என்ற ஏக்கம் தான் பிறந்தது.





1980 அக்டோபர் 12
ரௌத்திரி புரட்டாசி 26
மலர்: 39 இதழ்: 11



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

பல்லாண்டு வாழ்க!

முதல்வர் திரு எம். ஜி. ஆர். செல்ல இருந்த ரயில் பாதையில் எட்டு வெடி குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன என்ற செய்தி அறிந்து அதிர்ச்சி அடையாதவர் இல்லை. இறையருளால் முதலமைச்சர் பேராபத்திலிருந்து தப்பினார். 'அவர் பல்லாண்டு வாழ்க' என்று பிரார்த்திக்கிறோம்.

குண்டு இருப்பதைக் கண்டு பிடித்து உடனே போலீஸுக்குத் தகவல் தெரிவித்த ஷோலிங்கூர் ரயில் ஊழியரையும் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்த போலீஸாரையும் ரயில்வே அதிகாரிகளையும் வாழ்த்துகிறோம்.

சாலை வழியே செல்லலாம் என்ற யோசனையை ஏற்காமல் அதே ரயிலில் பயணத்தைத் தொடர்ந்த எம். ஜி. ஆர்.; அசாதாரண வீரத்தையும் அந்த ரயிலில் பயணமாகும் நூற்றுக்கணக்கானவரிடம் மனிதாபிமானத்தையும் காண்பித்திருக்கிறார். ஆயினும் இவ்விதம் தம்மை ஆபத்துக்கு உள்ளாக்கிக் கொள்ளக் கூடாது என்றும் கூற விரும்புகிறோம்; தாம் எம். ஜி. ஆர். மட்டுமல்ல, தமிழக முதல்வர், தமிழ் மக்களின் பொதுச் சொத்தானவர் என்பதை அவர் மறப்பதற்கில்லை.

குண்டுகள் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமானதோ, அல்லவோ, எவ்வாறாயினும் அவை ரயில் பாதையருகே வர வேண்டிய அவசியமென்ன? நக்ஸல் பாரிகளின் வேலை என்று சந்தேகப்படுகிறது. புலன் விசாரணையிலும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும் போலீஸ் கருகருப்பு காண்பிக்கட்டும்.

❋ தமிழகத்துக்கு விஜயம் செய்த மொரார்ஜி மதுரை வந்தபோது மேடையில் அவர் பக்கத்தில் இருந்து புகைப்பட மெடுக்க வேண்டும் என்ற ஆவலில் குட்டித் தலைவர்கள் ஒருவரை ஒருவர் பிடித்துத் தள்ளியுள்ளனர். இந்த அமளியில் தேசாயே தலை குப்புற விழுந்து விடுவோமோ என்று அஞ்சுமளவில் தடுமாறியிருக்கிறார்.

''இப்படி தலைவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளப் போகத்தான் ஜனதா கட்சியே சிதறுண்டது; மறுபடி அதே தவறைச் செய்யாதீர்கள்'' என்று கேட்டுக் கொண்டார் தேசாய். தொடர்ந்து, ''கட்சித் தேர்தல்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் ஜனநாயக மரபுப்படி நடக்கும். அவற்றைத் தர்ம நியாயமான முறையில் நடத்தியும் போட்டியிட்டும் படிப்படியாக முன்னேறி வாருங்கள்'' என்றும் கூறினார். மொரார்ஜியின் இந்த அறிவுரைகள் நம் தேசத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்குமே பொருந்தும். ஜனநாயகம் தழைக்க நல்ல அறிவுரை வழங்கி வழி முறையும் சொல்லித்தந்த மொரார்ஜி தேசாய் பல்லாண்டு வாழ்க!

❋ ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி இந்த வருஷம் எம். ஏ. சி. அறக்கட்டளை, வழக்கமான பரிசு தவிர சிறப்புப் பரிசினையும் அளித்துள்ளது. ரூ. 10,000 வழக்கமான பரிசினை ''சிற்பச் செந்நூல்'' ஆசிரியர் கணபதி ஸ்தபதி பெற்றுள்ளார். சிறப்புப் பரிசு ரூ. 10,000 கண்ணதாசன் அடைந்திருக்கிறார். தவிர டாக்டர் பத்ரிநாத் தலைமையில் இயங்கும் சங்கர நேத்ராலயா என்ற கண் மருத்துவ மனை ரூபாய் ஒரு லட்சம் நன்கொடை பெற்றுள்ளது. பரிசு அளித்தோரையும் பரிசு பெற்றோரையும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறோம்.

❋ கல்கி, கல்லூரிச் சிறப்பிதழின் தயாரிப்பில் முழுமூச்சுடன் ஈடுபட்டு ஒத்துழைத்தவர், நாயகன், ரங்கா, பி. ரங்கநாயகி என்ற பெயர்களில் எழுதும் திரு எல். வி. பார்த்தசாரதி. அவருடன் இணைந்து செயல்பட்ட நண்பர் மன்னை மூர்த்தி புகைப்படங்கள் பல எடுத்தளித்திருக்கிறார். திரு எல். வி. பார்த்தசாரதி நல்லதொரு உத்தியோகத்தில் இருந்த போதிலும் எழுத்துத் துறையிலும் பத்திரிகைத் துறையிலும் உள்ள ஈடுபாடு காரணமாக இவற்றுக்குத் தமது ஓய்வு நேரத்தையெல்லாம் அர்ப்பணித்து வருகிறார். வளர்க அவர் பணி.

இன்றைய மாணவ மணிகள் ஆசிரிய ரத்தினங்கள் மட்டுமின்றி எதிர்கால மாணவர் — ஆசிரியர் சமுதாயமும் பல்லாண்டு வாழட்டும்; பாரதம் வளம் பெறட்டும்.



✽ சாந்தி - ஜெயசிங்

கல்லூரிக் காதல்



✽ கமலா - சக்திவேல்



✽ லலிதா - மோகன்

நாங்கள் இருவரும் சட்டரீதியாக இந்தியப் பிரஜைகளான போதும், பிறந்து, வளர்ந்ததெல்லாம் இலங்கையில்.

1971ம் ஆண்டு நான் இலங்கைப் பல்கலைக் கழக பேராதனை வளாகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் பட்டத்துக்காகப் படித்துக்கொண்டிருந்தபொழுது சாந்தி தேவி (எனது மனைவி) கம்பளை நகரில் புனித ஜோசப் மகளிர் கல்லூரியில் புகுமுக வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். நாங்கள் இந்தியப் பிரஜைகளாகவும் என் காதலியின் குடும்பத்தவர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும் இருந்தமையால், எங்களது புனிதமான காதல் பெரும் பிரச்னையை எதிர்நோக்கியது.

1978ல் பாரத ஸ்டேட் வங்கியின் கோவில் பட்டிக் கிளையில் காசாளராக நியமிக்கப்பட்டேன்.

காலச் சுழற்சியில் தமிழர்களைப் பொறுத்தவரையில் இலங்கையை விடத் தமிழகமே தக்க பாதுகாப்பானது எனக் காதலியின் பெற்றோர் உணர்ந்தமையால் மனம் திருந்தி, பெண்ணை மகிழ்ச்சியுடன் தமிழகம் அனுப்ப முன்வந்தனர். இரு தரப்பினரின் ஆசியுடன் கடந்த பெப்ரவரியில் இனிதே திருமணம் நடந்தேறியது. தேனிலவுக்கு இலங்கைக்குச் சென்றிருந்தோம்.

எஸ்.இளட் ஜெயசிங் பி.ஏ. (ஆனர்ஸ்)

● நான் 1969ம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரி என்ற இப்புவியுலக சுவர்க்கத்தில் கால் எடுத்து வைத்தேன். கல்லூரி மாணவர் பேரவைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுகையில், அந்த எழில் முகத்தைக் கண்டேன்.

1973ம் ஆண்டு இருவருக்கும் படிப்பு முடிந்தது. எங்கள் காதலை அறிந்த எங்களது பெற்றோர் கோடை வெயிலைக் காட்டிலும் கொடிய தணலைக் கொட்டினர். அவளது தந்தை என்னைப் பலவாறு ஏசி, அவளை மறந்துவிடுமாறு கூறினார்.

பெற்றோர்களை நம்பிப் பயனில்லை என்று தீர்மானித்து இருவரும் வேலைகளைத் தேடிக் கொண்டோம். நண்பர்கள் ஏற்பாடு செய்ய 1976ம் ஆண்டு ஏப்ரல் 26ம் தேதி கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோவிலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணம் முடித்த நாங்கள் எந்த வித எதிர்ப்புக்கும் தயாராக நின்றோம். என் பெற்றோர்கள் எங்களை மன்னித்து ஏற்றுக் கொண்டனர். ஆனால் இது நாள்வரை அவளது பெற்றோர் என்னை மருமகனாக ஏற்றுக் கொள்ளவில்லை. இடையில் பிறந்தகத்து நினைவு வந்து அவளை வாட்டினாலும் எங்களது மகனை நோக்கும் போது அவளுக்கு யாவும் மறந்து விடும்.

இரா. மோகன் ஜவாஹர், பி.எஸ்ஸி.,

● இது ஒன்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. அப்போது இருவரும் திருச்சி கல்லூரிகளில் படித்துக் கொண்டிருந்தோம். அவருக்குப் பெற்றோர் இல்லாமையால் எந்தவித வரதட்சிணைப் பிரச்னைகளும் இல்லை.


''இதெல்லாம் வயதுக் கோளாறு, இளமைத் துடிப்பு.. நீ அவனைக் கல்யாணம் செய்துகொண்டால் நாசமாய்ப் போய்விடுவே!'' என்று என் அப்பாவும் அம்மாவும் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தார்கள். சொத்தும் கிடையாது என்ற மிரட்டல் வேறு.


அன்றிரவே அவரோடு புறப்பட்டு, அதே மாதம் 25ம் தேதி ரிஜிஸ்டர் ஆபீசில் மாலை மாற்றிக் கொண்டோம். நண்பர்களுக்கு எளிமையான விருந்து.

பிறகு என் பெற்றோர் இறந்துவிட்டதாகவும் தம் உயிலில் தம் சொத்துக்களை அனாதை ஆசிரமங்களுக்கு எழுதி விட்டதாகவும் என் தோழியின் வாயிலாக அறிந்தேன்.

இதுநாள்வரையில் எங்களுக்குக் குழந்தை இல்லை. பெற்றோரைத் தெய்வமாக வணங்கிய பின் நான் தற்போது 7 மாத கர்ப்பிணியாக உள்ளேன். அன்பான ஒரு தாயின் அரவணைப்பையும் பராமரிப்பையும் எதிர்பார்த்து ஏங்குகிறேன்.

திருமதி கமலா சக்திவேல்









✖ த. கி. நீலகண்டன்

COLLEGE CAMPUS மாநிலக் கல்லூரி

உறக்கம் கலையாத அந்த அதிகாலை நேரத்தில் அரை குறை நினைவுடன் படுத்திருக்கையில் ஜன்னல் அருகே தாழ்ந்திருக்கும் கிளையின் மீது உட்கார்ந்த காக்காய் ''க்ரா க்ரா'' என்று கரைந்து எரிச்சல் ஊட்டியது. எழுந்துவிரட்டு முன் பறந்துவிட்டது. அதற்கு எத்தனை வேலையோ? இவ்வளவு சீக்கிரம் எழுந்துகொள்ள மனம் வரவில்லை எனக்கு. எழுந்து ஆகக்கூடிய வேலையும் இல்லை. விடியற்காலைத் தூக்கம் வெல்லம் போல.

பரீட்சை முடிவுகள் வெளியாகி எதிர்காலத்தைப் பற்றிய கேள்விக் குறியுடன் மார்க் ஷீட்டை நேராகக் கொண்டுபோய் எம்ப்ளாயின்ட்மெண்ட் எக்சேஞ்ஜ் ஆபீஸில் பதிவு செய்து மூன்று வருடமாகிறது.

அதிகாலைச் சந்தடிகள் ஒவ்வொன்றாகக் கேட்க ஆரம்பித்தன. கீரைக்காரியும் பூக்காரியும் வந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். எழுந்து பல் தேய்க்கும்பொழுது கடகடவென்று கட்டைவண்டியைத் தள்ளிக் கொண்டு கறிகாய் விற்பவன் கூவிக்கொண்டு போகிறான். இடையிடையே தராசுத் தட்டு, எடைக் கல்லோடு மோதும் சத்தம். பேப்பருக்காக வாசலில் வந்து நிற்கையில் இடியாப்பம் விற்றுக்கொண்டு ஒரு கிழவி வாசலைக் கடந்து போகிறாள். ஒரு நாள் இவளிடம் இடியாப்பம் வாங்கிச் சாப்பிட வேண்டும்.

பேப்பர் போடும் சிறுவன் வழக்கமாக லேட்டாக வந்து அவசர அவசரமாகத் தாழ்வாரத்தில் எறிந்துவிட்டு அடுத்த வீட்டுக்குச் சைக்கிளைக் குரங்குப் பெடல் அடித்தான். நான் ஏன் லேட் என்று கேட்கவில்லை. அவனுக்கு இருக்கும் வேலைகூட எனக்கு இல்லையே!

மணி ஒன்பதாகிறது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வேலைக்குச் செல்பவர்கள் கிளம்பி எங்கள் வீட்டைக் கடந்து கொண்டிருக்கிறார்கள். நான் இன்னமும் பேப்பரிலேயே மூழ்கி இருக்கிறேன். வேலை விளம்பரங்களில் என் கண்களை ஓட்டி முடிக்கும்போது வீட்ட வெறிச்சோடி விட்டிருந்தது. 'டங்கிங்' என்று கொளவின் வண்டியைத் தள்ளிக் கொண்டு பரட்டைத் தலையன் ஒருவன் நடந்து கொண்டிருந்தான். இவனுக்குத் தான் எத்தனை ''கிராக்கி'' நிறைந்த வியாபாரம் நடக்கிறது!

சாப்பிட்டுவிட்டுத் தெருப் பக்க ஜன்னலைத் திறந்துவிட்டு உட்காருகிறேன். ''நுங்கு வாங்கலியோ நுங்கு'' என்று இராகத்தோடு இழுத்துக் கொண்டு சிறு வயதிலிருந்தே பழக்கப்பட்ட குரல் பழைய பாணி சற்றும் மாறாமல் பாடுகிறான். மழைக்காலத்தில் இவன் வேறு எதையோ விற்பான். சிலருக்கு சிலன் ஒரு வேலை. பின்னாலேயே ஒரு கிழவன் ''துடைப்போ, துடைப்போ'' என்று யாரையோ விரட்டுவது போல் துடைப்பம் விற்கிறான். அடுத்துக் குடை ரிப்பேர்க்காரன்



விடியும்

வருகிறான். மழைக்காலத்தில் இவனைப் பிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. இவனே செருப்புத் தைப்பதும் உண்டு.

ஒரு அரை மணி நிசப்தத்திற்குப் பிறகு பழ வகைகளைச் சுமந்துகொண்டு போகும் கிழவன். எவர்சில்வர், பிளாஸ்டிக், அலுமினிய சாமான்களைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு இரண்டு சிறுவர்கள். அப்புறம் உடைந்த பாட்டில்களையும் பளபளக்கும் மருந்துக் காகிதங்களையும் பொறுக்கிக் கொள்ள அனுமதி கேட்டு நிற்கும் சட்டையில்லாச் சிறுவர்கள். அவர்களிடம் பேச்சுக் கொடுத்ததில் கிலோவுக்குப் பதினைந்து பைசாக் கணக்கில் அவற்றை விற்பார்கள் என்றும், கிடைக்கும் சில்லறைக்கு 'டிபன்' பண்ணிவிட்டு இரயில்வே பிளாட்பாரத்தில் சயனம் என்றும் தெரிந்து கொண்டேன்.

உச்சி வெயில் தாண்டிய சில நேரத்துக்கெல்லாம் ''போஸ்ட்'' என்ற குரலை உன்னித்துக் கேட்டு ஓடினால் எங்கள் வீட்டு வாசலில் நிற்காமல் சைக்கிளை மிதித்தான் போஸ்ட்மேன். இரண்டு மணிக்கு ஐஸ் வண்டி. பிறகு பால் கவர் வியாபாரி. மூன்று மணிக்கு எருமை மாட்டின் கொம்பில் தவிடு பக்கெட்டை மாட்டிவிட்டுச் சவாரி செய்யும் பால்காரச் சிறுவன். பின்னால் சோம்பேறி நடைக் கன்றுக்குட்டி. மாலை மங்கும் நேரத்தில் வெளியே போனவர்கள் ஒவ்வொருவராகத் திரும்பத் தொடங்கினார்கள்.

ஆறு மணிக்குக் கோவில் பக்கம் நடையைக் கட்டினேன். வழியில் வேலையில்லாப் பட்டதாரிகள் நடத்தும் டீக்கடையில் ஒரு சிங்கிள் டீ. கோவில் மணலில் விளையாடிக் கொண்டிருந்த அரை நிஜார்கள் என் செருப்பைப் பார்த்துக் கொள்வதாக சொன்னார்கள். அவர்களிடம் செருப்பை விட்டுவிட்டு கோவிலைச் சுற்றி வரும்பொழுது வெளியில் சிதறு தேங்காய் ஒலியும் பிள்ளைகளின் போட்டிக் கூச்சலும் கேட்டது. வெளியே வந்து செருப்பை மாட்டிக் கொண்டு அரை நிஜாரிடம் ஒரு பத்துப் பைசாவைக் கொடுத்து விட்டு நடந்தேன்.

நூலகத்துக்குப் போய் வீடு திரும்புகையில் மணி எட்டு. குறை வைக்காமல் வயிறு நிறையப் போட்டுவிட்டுக் கண்ணைச் சுழற்றும்வரை நாவல். இமைகளின் மேல் தூக்கம் வந்து உட்கார்ந்து அழுத்துகிறது. அன்றைய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக மனத்தில் ஓடின. ஒரு நாள் ஓட்டிவிட்டேன். நான் மட்டுமா ஒரு நாளை ஓட்டினேன்? நன்றாக உடுத்தி வேலைக்குச் சென்றுத் திரும்பியவர்கள் முதல் செருப்புத் தைப்பவன் வரை அன்று நான் சந்தித்த அத்தனை பேர்களும் ஒரே ஒரு நாளைத்தான் ஓட்டியிருக்கிறார்கள். நமக்கென்று ஒரு வழி இல்லாமலா போய் விடும்? படிக்காத பலர் கைத்தொழில் கொண்டு பிழைக்கும்போது நமக்கென்ன குறை? விடிந்து முடியும் நாட்களின் ஓட்டத்தில் எனக்கென்று ஒரு நாள் விடியாமலா போய்விடும் என்று ஒரு சித்தனை என்னுள் நம்பிக்கையை ஊட்டியது. நல்ல சகுனமாக ''டாண் டாண்'' என்று மணியடித்துக் சோன் பப்டி வண்டியைத் தள்ளிக் கொண்டு ஒருவன் போகிறான்.

சமுதாய மேடையிலே...

வெள்ளிப் பாத்திரம் கையிலே
நேற்றைய சாதங்கள் அதிலே
வெளிறிய துண்டு தரையிலே,
வெள்ளைக் காசுகள் அதிலே.
கால் எரியும் வெயில்,
வறண்டு கிடக்கும் தலை,
தாகத்திற்கு தவிக்கும் நாக்கு,
மெலிந்து வளைந்த கால்கள்,
வானம் போல் உள்வயிறு.
எலும்பின் மேல் தோல்
தொங்க விட்ட உடம்பு.
பல நாள் பசி காட்டும்
வாடிக் கிடக்கும் முகம்.
ஏக்கத்தோடு காணும் கண்கள்
பணமிலா மனமுள கட்டைகள்
பணமிருந்து போடா மட்டைகள்.
ஏங்கும் உள்ளங்கள்,
பாதையிலே —
வயிற்றுக்காகக் கதறும் வாய்கள்,
மேடையில் —
பதவிக்காக அலறும் நாய்கள்!

- க. சி. இரமேச





வானம்

இயற்கை தேவன்
வானமெனும்
நீல நிற
டிடெர்ஜெண்ட் சோப்பால்
எந்தத் துணியினை
துவைக்கின்றான்?
வெண்மையான
முகில் நுரைகள்
வந்த வண்ணமாய்
இருக்கின்றனவே!

- ஜி. மணிமொழி





ஓவியக் கல்லூரியில் சிவகுமார்

''வணக்கம். சௌக்யமா?''

''என்னப்பா தலையெல்லாம் நரைச்சிருக்கு?''

''எவ்வளவு நாளாச்சு உங்களைப் பார்த்து!''

இந்த உபசாரப் பரிமாற்றங்கள் ஓவியக் கல்லூரியில் நடைபெற்றது. ஒரு காலத்தில் மாணவராக ஓவியம் பயின்று இன்று நடிகராகிப் புகழுடன் விளங்கும் சிவகுமாரின் திடீர் வரவுதான் அங்கு அவரது பழைய ஆசிரியர்களுக்கும் ஓவியக் கல்லூரியில் பணி புரிவோருக்கும் ஓர் இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தது. எங்களை அழைத்துச் சென்று கல்லூரி முதல்வரின் அறையில் அமரச் செய்தவர் ஓவியக் கல்லூரியின் ஆசிரியர் சுரேந்திரநாத்.

''ஆசிரியர் சுரேந்திரநாத்தான் நான் திரைப்பட உலகுக்கு வருவதற்குக் காரண கர்த்தர்களில் ஒருவர். அதுவே வளமான வாழ்வுக்கு ஒரு சரியான வழி. அதனால் வாய்ப்புக்கள் வந்தால் விடாதே பிடித்துக்கொள் முன்னேறு'' என்றார். இதைச் சிவகுமார் சொல்லி முடிக்கவும், நாங்கள் மற்றோர் அறைக்குள் நுழைந்தோம். அங்கு எல்லோருமே கையில் களிமண்ணை வைத்துக் கொண்டிருந்தார்கள். முதலில் களிமண்ணால் உருவத்தை வடித்துப் பிறகு மோல்ட் செய்வார்களாம். ''கொஞ்ச காலம் நானும் இங்கு பயிற்சி பெற்றேனுக்கும்!'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் சிவகுமார். அந்த அறையை மேலும் சிறுமாகப் பார்த்துக் கொண்டு நின்றார் சிவகுமார்.

''நான் உங்கள் படம் கடைசியாகப் பார்த்தது 'ரோஜாப்பூ ரவிக்கைக்காரி'. நீங்க நடக்கிற மாதிரியே எங்க வீட்டுப் பக்கத்திலுள்ள பால்காரரும் நடப்பாரு!'' என்று அதிசயித்தார் அந்தோணி தாஸ்.

''நானே அந்தப் படத்தில் அப்படி நடந்து நடிச்சதுக்குக் காரணம் எண்ணெய் தூக்கறவங்க நிலைதான்! இரண்டு பக்கமும் எண்ணெய் சமமாக இருந்தாலொழிய அவங்களாலே ஒழுங்கா நடக்க முடியாது. எண்ணெய் தூக்காதபோது அந்த நடை பழகிப்போய் விடும். அதைத்தான் நான் அப்படியே செய்தேன்!'' என்றார் சிவகுமார்.

நாங்கள் உள்ளே செல்லவும் எல்லா மாணவ மாணவிகளும் ஒரு சிறு பரஸ்பர அறிமுகங்கள் நடைபெற்றன. ''இவர் நடிகை ஊர்மிளாவின் தங்கை பத்மினி. இவர் வர்ணத்தின் மகன் சீனிவாசன்'' என்று அறிமுகமாயிற்று.

''எனக்கு நான்கு ஆசிரியர்கள் நெருக்கமாகத் தெரிந்தவர்கள். கற்றிக் காட்டிய அந்தோணி தாஸ், முருகேசன், சுரேந்திரநாத், சந்தானராஜ் ஆகியோர். இதில் சந்தானராஜ் கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் முதல்வராக இருக்கிறார். சென்ற வாரம் சென்னை வந்த அவருக்கு 'ராமன் பரசுராமன்' படத்தைத் தனிக் கண்காட்சியில் காண்பித்து வீட்டிலேயே தங்க வைத்து மறுநாள் அனுப்பினேன். இரவு நேரத்தில் படம் முடிந்து வந்தால் கல்லூரிக் கதவை யாருமே திறக்கவில்லை. நான் விரும்பியது போலவே அவர் என் வீட்டிலேயே தங்கினார்.

விடைபெறும் கட்டம் வந்தபோது ''நீங்கள் ஏன் உங்கள் ஓவியங்களைக் கண்காட்சியாக வைக்கவில்லை?'' ''என்ற போது,'' வசதிகள் வரட்டும். வீட்டின் ஒரு பக்கம் முழுவதும் இந்த ஓவியங்களை நிரந்தரக் கண்காட்சியாக வைப்பதற்கு எண்ணமிருக்கிறது. அது நிறைவேறும்பொழுது கண்டிப்பாக இவை எல்லாமே இடம் பெறும்'' என்றார் சிவகுமார்.

அந்தக் காலத்திலேயே நல்ல மாணவர் என்ற பெயர் பெற்றவர் பழனிச்சாமி. (சிவகுமார்) சிவகுமாரைப் பழனிச்சாமி என்றுதான் ஆசிரியர்கள் எல்லோருமே இன்றும் அழைக்கிறார்கள்!

காரில் வரும்பொழுது, ''அந்த நாட்கள் இனிக் கிடைக்காது. என்னைப் பொறுத்த வரையில் கல்லூரி நாட்கள் எனக்குக் கரும்பு!'' என்று நினைவலைகளை அசை போட்டபடி கூறினார் சிவகுமார்.

பேட்டி: **சலன்**

படங்கள்: **யோகா**

அத்தியாயம் 11

அம்மணி துவண்டு போனுள்; பெரிய சாமியின் மரணம் அவளைப் பாதிக்கவில்லே. அவன் வந்து ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்த அன்றே 'இது போகக் கூடிய கேஸ்தான்' என்று மனம் நிர்ணயம் செய்திருந்த தால், உயிர் நீக்கம் எதிர்பாராத நிகழ்ச்சி யாகப் படவில்லே. ஆனுல் பெரியசாமி செய்து விட்டுப் போன காரியம் அவளேச் சிந்திக்கத் தூண்டியது.

அவன் யார்?

அவன் யார்?

என்றே ஒரு நாள் ஒரு பாலக்காட்டுக்காரி மதி இழந்து கண் அயர்ந்து கிடக்கையில் அவளுடைய வயிற்றில் உதித்துவிட்ட ஒரு ஜீவனுக்கும், சித்தூரில் மனைவியால் ஒதுக் கப்பட்டு, உயிரோடு எரிக்கப்பட்டு, கடைசி யில் பிணக் கிடங்கில் கண்கள் தோண்டி எடுக்கப்பட்டுக் கிடக்கும் ஒருவனுடைய அலேந்து கொண்டிருக்கும் ஜீவனுக்கும் என்ன சம்பந்தம்? அவன் ஏன் அவளே ஒரு தங் கையாகப் பாவித்துத் தன் அம்மாவின் நகைகளே யெல்லாம் மரண வாயிலில் நிற்கும் போது அளிக்க வேண்டும்? பெரியசாமி யைப் பற்றி மனத்தில் புலம்பிப் புலம்பித் தவித்த அவள் அறையில் ஒரு புத்த கத்தில் தன்னேயே பறிகொடுத்துக்கொண் டிருந்த லில்லி தாமஸைப் பார்த்தாள். தலே தலேயணையில் அழுந்திக் கிடக்க, அவள் பக்கவாட்டில் படுத்திருந்தாள். வலது கையில் புத்தகம். இடது கை புடவைத் தலேப்பையும் இழுத்துக் கொண்டு கட்டி லுக்கு வெளியே தொங்கியது.

''ஊஸி! உன் புடவைத் தலேப்பைச் சரிசெய்துகொள்.... இல்லாவிட்டால் நான் ஒரு பெட்ஷீட்டால் போர்த்துவேன்.''

''இது என்னடி எழவாப் போச்சு... இந்த ரூம்லே எந்த ஆண்பிள்ளேயடி வேடிக்கை பார்க்கிறுன்... அது சரி இதுக்குதான் ஊஸி ஊஸின்னு உளறிஞயா?''

''எனக்கு ஒரே குழப்பமா இருக்குடி லில்லி...''

''குழம்பாதே. புடவைத் தலேப்பைச் சரிசெய்து கொண்டாகி விட்டது.''

''உனக்கு எல்லாமே விளேயாட்டுத் தான்.''

''விஷயத்துக்கு வர்றியா, நான் என் புக்குக்குப் போகட்டுமா?''

''பெரியசாமியைப் பற்றி என்ன நினேக்கிறே?''

போன வருஷம் GHலே 56,508 பேர் அட்மிட் ஆனு. இந்த வருஷம் கணக்கும் தெரியல்லே. அவர் களிலே பெரியசாமி ஒருவன். ஆனு தவறுதலா வந்தவன்.''

''என்னடி சொல்றே?....''

''மீம்பாக்கம் கேஸ்... டாக்ஸி டிரைவர் சரியாப் புரிஞ்சுக்காம ஜீ. எச்லே தள்ளிட்டுப் போயிட் டான்....''

''டோண்ட் பி சில்லி.''

''ஓ.கே.''

லில்லி மீண்டும் புத்தகத்துக்குத் திரும் பினுள்.'

''லில்லி! அந்த டர்ட்டி புத்தகத்தைத் தூக்கி எறி.''

''டர்ட்டின்னு சொல்லாதே... மரியோ பூஸா காதிலே விழுந்தா உன்னேத் தீர்த்துக் கட்டிடுவான்.''

''ஒவ்வொரு பக்கமும் அழுகி நார்றது.... சரி, நீ உண்மையா பெரியசாமியைப் பற்றி என்ன நினேக்கிறே?''

''உன் மேலே ஒரு 'இது' இருந்திருக்கு. அது சரி. எல்லாமாச் சேர்ந்து என்ன




மதிப்பு இருக்கும்? சிவப்புக் கல் தோட்டைக் கணக்கில் எடுக்காதே. ரொம்பப் பழகு, மங்கல்.....''

''நான் நகைகளை மதிப்புப் போடலை லில்லி.... அவனைத்தான் போடறேன். அவன் எதுக்கு இதையெல்லாம் எனக்குக் கொடுக்கணும்!''

''அதுதான் 'இது'ன்னு சொன்னேனே?''

''நீ பாவம்... தங்கைன்னு பாவிச்சிருக்கான்....''



''உன்னை விட எனக்கு இந்த ஆண் வர்க்கத்தைப் பற்றி நன்றாகத் தெரியும் டீ... ஸிஸ்டர்னு கூப்பிடற அத்தனைபேரும், உள்ளூற நம்மை உரிச்சு வச்சுப் பார்க்கிற ரௌடிகள். கோடம்பாக்கத்திலே தங்கச்சி, ஜி. எச். ஸிலே ஸிஸ்டர்... பாவப்பட்ட பெண்கள் நன்றாகத்தான் மாட்டிக் கொள்கிறார்கள்.''

''நான்சென்ஸ்... உன்கூடப் பழகி உன்னை ஓட்டலுக்கும் சினிமாவுக்கும் அழைச்சுக் கிட்டுப் போன ரௌடிகளை மனசிலே வைச்சுக்கிட்டு எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக எடை போடாதே....''

''என்னை அழைச்சுக்கிட்டுப் போன அத்தனை பேரும் ஜென்டில்மேன் தெரியுமா... ஒருத்தன்கூட என்னை ஏமாத்தவில்லை. ஆனா ஒண்ணு, நான் ஒருத்தன் கூட ரெண்டாம் தடவை வெளியே போனதில்லை....''

''நான் பெரியசாமியைப் பத்திக் கேட்கிறேன்.... நீ உன் சாக்கடையைப் பத்திப் பேசறே...''

''நீதான் பன்னீர் மாதிரி மணக்கிறியே... ஏன் சாக்கடைக்கு வர்றே?'' என்றாள் லில்லி.

அம்மணி எழுந்தாள்.

கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். எட்டு. புடவையைச் சரிசெய்து கொண்டு முன்னுச்சியை லேசாக வாரி விட்டாள். குங்குமம் கலையாமல் இருந்தது.

செருப்பைப் போட்டுக் கொண்டாள்.

''எங்கேடி போறே அம்மணி?''

லில்லி, கேட்டவள் புத்தகத்தை மூடி விட்டு உட்கார்ந்தாள்.

பதில் பேசாமல் அம்மணி வெளியே வந்தாள்.

''டாக்டர்!''

நல்லசிவம் திடுக்கிட்டுப் பார்த்தான்.

''அம்மணி!''

''டாக்டர்,..என் மைண்ட் சரியா இல்லே.''

''என்ன நடந்தது அம்மணி?''

நல்லசிவம் பயந்து போனான்.

''பெரியசாமி.''

''இன்னமும் அவனைப் பற்றியா நினைச்சுக்கிட்டிருக்கே, அம்மணி... ட்ரீட் ஹிம் ஆஸ் எ பேஷண்ட்... ஜஸ்ட் எ பேஷண்ட்!''

''முடியலே டாக்டர். அவன் ஏன் இப்படிச் செய்திருக்கணும்? மேலும் என் வாழ்க்கையில் ஒரு சம்பவம் நடந்தது.... அது என் பர்ஸனல் லைஃப் பற்றியது....''

''இந்த ரூம்லே இப்ப யாரும் இல்லையே... சும்மா சொல்லு.''

''ஓ.கே. டாக்டர்... சொல்றேன்... மோகன்னு ஒருத்தன் என் வாழ்க்கையில் சில வருஷம் முன்னாலே இடர்ப்பட்டான்.''

''இடர்ப்பட்டான்னு என்ன அர்த்தம்!''

''லவ்....''

''யார்? நீயா.. அல்லது அவனா? அவனாகத்தான் இருக்கும். சரி, சொல்லு.''

''நான்தான் அவனை விரும்பினேன் டாக்டர்!''

நல்லசிவம் ஒரு கணம் சிலையானான்.

அம்மணி ஏற்கனவே ஒருத்தனைக் காதலித்திருக்கிறாளா? காதல் வாழ்க்கையில் என்னென்ன நடந்தது? அவனை அவன் தீண்டியிருப்பானா? நிச்சயமாக... இதுவரையில் ஐயோ....அம்மணி ஏற்கனவே கடிக்கப் பட்ட....சீ.... ஏன் இந்த அசிங்கமான எண்ணம்?

நல்ல சிவம் திடீரென்று எழுந்தான். ''ஸாரி அம்மணி. நான் வார்டுக்குப் போகணும்.....''

''ஒன் மினிட் டாக்டர்!''

''ஸாரி. யு கேன் கோ!''

நல்லசிவம் திடீரென்று பதவி வகிக்கும் டாக்டராக மாறினான். அவன் ஒரு FRCS அவள் ஒரு சாதாரண நர்ஸ்.

அம்மணிக்குக் கோபம் தலைக்கு மேல் வந்தது.

''டாக்டர், இத்தனை மாசமா நீங்களும் நானும் நம்முடைய மனத்தின் தாபங்களைப் பரிமாறிக் கொண்டிருக்கிறோம்.... ஆனா இது வரையில், எனக்கு ஒரு லவ்வர் இருந்திருக்கிறான்னு நான் உங்ககிட்டே சொன்னதில்லே. இப்பச் சொன்னதும் உங்க முகம் கத்தரிக்கா மாதிரி கன்னிப் போயிட்டது.... உங்க குரல்லே எரிச்சல் தொனிச்சுட்டது.... 'யூ கான் கோ'ன்னு சொன்னதன் 'தாத்பர்யம்' என்ன தெரியுமா, டாக்டர்? இந்த ரூமை விட்டு மட்டுமல்ல... என் நட்பை விட்டுத் தான் என்று அர்த்தம்... ஆம் ஐ கரெக்ட்?''

''யெஸ்!''

''தாங்க் காட்... ஐ ஆம் ஸேவ்ட்... ஸேவ்ட் இன் டைம்!''

''என்ன சொன்னே?''

''உங்களை மாதிரி பொறுமை அரக்கர்களிடமிருந்து தப்பி விட்டேன்னு சொன்னேன்.... என்னிக்கோ ஒரு நாள் யாரோ ஒருவனை 'லவ்' பண்ணினேன்னு சொன்னதுக்கே, உங்க மனசு இப்படிப் புழுங்கிச் செத்தா, உங்க உடம்பிலே எத்தனை வண்டி பொறுமை இருக்குன்னு புரியறது... நான் உங்க கிட்டேருந்து பிழைத்துக்கொண்டேன். அந்த மோகன் அன்னிக்கு....''

திடீரென்று ஓர் ஆள் ஓடோடி வந்தான். அவனுடைய ஆவேசப் பதற்றம் அம்மணியின் பேச்சுச் சங்கிலியை அறுத்து எறிந்தது.

''யார்ப்பா நீ?''

''டாக்டர் சீக்கிரம் வாங்க..எமர்ஜன்ஸி''

''என்ன கேஸ்?''

''தற்கொலை முயற்சி...''

''ஊமத்தைக் காயா? பொம்பளைதானே''

''இல்லீங்க...ஆம்பிள்ளை...என் சொந்தக் காரப் பிள்ளை....''

''இதோ வரேன்... சாதாரணமா இந்த வேளையிலே யாராவது ஒரு பொம்பளைதான் படுக்கையில் இடம் கொடுத்துவிட்டு அப்புறம் வயிற்றில் முளைச்சதை அழிக்க முடியாம, தன்னையே அழிச்சுக்கப் பார்ப்பாள்... நீ போ வரேன்.''

அம்மணியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. கண்ணியத்துக்கும் கடமை உணர்ச்சிக்கும் இலக்கணமாகத் திகழும் நல்லசிவமா இப்படியெல்லாம் பேசுகிறான்? அவன் அவளை — அவளுடைய அம்மாவை மனத்தில் வைத்துக்கொண்டுதான் அவசியம் இல்லாத வேளையில் பேசுகிறான். குத்திக் காட்டுகிறான்.

ஆனால் அதே வார்த்தைகள் அவனுக்கும் அவனுடைய அம்மாவுக்கும்தான் பொருந்துமே! அதைச் சுட்டிக் காட்டுவதா?

நல்லசிவம் வெளியேறினான். அம்மணி பக்கமே திரும்பவில்லை.

மறுநாள் காலையில் நர்ஸின் உடை அணிந்து அவள் ஜி. எச்.ல் பிரவேசித்த போது, அர்ஜுன் போர்ட்டிகோ அருகே நின்று கொண்டிருந்தான். ஏற்கனவே 'மாப்பிள்ளை'யைக் கவனிக்கும்போது அவனுடன் பேசியிருக்கிறாள்.

அவளைக் கண்டதும் ''குட் மார்னிங் ஸிஸ்டர்!'' என்றான் அர்ஜுன்.

''குட்மார்னிங், மிஸ்டர் அர்ஜுன். அப்பா எப்படி இருக்கிறார்?''

''குஷியா இருக்கிறார்.''

''அப்படியா?''

''எங்க ஊர்ப் பெண் ஒருத்தி தற்செயலா ஜி.எச்.க்குவந்தா. அவளை மடக்கிப்போட்டு அவரைக் கவனிக்கச் சொல்லி யிருக்கேன்.''

''பார்த்தேன் அந்தப் பெண்ணை.''

''நன்னா இருக்கா இல்லே, ஸிஸ்டர்?''

''உறவா?''

''இனிமேத்தான் ஏற்படணும், ஸிஸ்டர்!''

''தயவு பண்ணி என்னை ஸிஸ்டர்னு கூப்பிடாதீங்க... ஒருத்தர் உண்மையாகவே ஸிஸ்டர்னு பாவிச்சுப் பதினைந்தாயிரம் ரூபாய் நகையைக் கொடுத்துட்டுப் போயிட்டார்!''

''சஸ் இட்? ஆச்சரியமா இருக்கே.''

பெரியசாமியின் கதையைச் சுருக்கமாகச் சொன்னாள்.

''ஒண்டர்ஃபுல்!'' என்றான் அர்ஜுன்.

''என் அம்மா எனக்கு வைச்சுட்டுப்போன நகைகளையெல்லாம் ஒருத்தன் சில வருஷங்கள் முன்னாலே திருடிட்டுப் போனான். ஸாரி, என்னை ஏமாத்தி எடுத்திட்டுப் போனான்... இப்ப அதெல்லாம் திரும்பி வந்த மாதிரி இருக்கு, மிஸ்டர் அர்ஜுன்...''

''பாலன்ஸ் ஷீட் சரியாப் போயிட்டுது.''

''உங்களுடன் நான் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. உங்க அட்வைஸ் தேவை''

''என்கிட்டே ஏதாவது நிறைய இருக்குன்னா அது அட்வைஸ்தான். அள்ளி அள்ளிக் கொடுக்கிறது என் பரம்பரைக் குணம்.''

''விளையாட்டு இல்லை, மிஸ்டர் அர்ஜுன்!''

''நானும் மல்லிகாவும் இன்னிக்குக் கரெக்டாப் பன்னிரண்டு மணிக்கு உட்லண்ட்ஸுக்குச் சாப்பிடப் போறோம். நீயும் வாயேன் அம்மணி!''

''இடைஞ்சலா....''

''ஏன் தயங்கறே விஸ்டர்... அது சரி, உங்க புதூட்டி?''

போட்டு விடுகிறேன்... புடவை கொண்டு வெளியே போய்க் கொண்டிறது.''

''இதையே காரணமா வைச்சுண்டு லீவ் கேட்காதே... பொறுமையில் தர மாட்டார்கள்!''

''பொறுமை ஒரு ராட்சசன் ராட்சசன்.''

''ராட்சசியாகவும் இருக்கலாம் அம்மா! அதோ மல்லிகா வருகிறாள்! நீ இதே இடத்துக்குப் பதினொன்னே முக்காலுக்கு வா. நாங்கள் பிக்-அப் பண்ணிக்கிறோம்!''

அம்மணி நகர்ந்தாள். (தொடரும்)

வைர விழா காணும் தேசியக் கல்லூரி

'தேசியம்' என்று குரலெழுப்பினால் ஏதோ கொலைக் குற்றம் செய்தது போன்று சீறிய அந்நியரது ஆட்சிக் காலத்தில், பெயரிலேயே தேசியத்தைக் கொண்டு, தேச பக்தி உடையவர்களுக்குத் தார்மீக பலமாய் விளங்கி, தொடர்ந்து இன்றும் கல்விப் பணி ஆற்றி வரும் திருச்சி தேசியக் கல்லூரி தனது வைர விழாவை இவ்வாண்டு கொண்டாடியுள்ளது.

கல்வியோடு தேசபக்தி, பண்பாடு, தார்மீக ஒழுக்கங்களையும் போதிக்கும் இக்கல்லூரியின் பாரம்பரியம் பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்கதாகும்.

கல்லூரியின் வளர்ச்சிதான் தனது வாழ்க்கை என்று வாழ்ந்ததோடு தமது சொத்துக்களை இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகவே எழுதி வைத்த முன்னாள் முதல்வர் சாரநாதனுக்கு வைர விழா சமயம் சிலை எழுப்பியுள்ளனர். அதனை இக்கல்லூரியின் முன்னாள் மாணவரும், இந்நாள் மத்திய நிதி அமைச்சருமான திரு ஆர். வெங்கட்ராமன் திறந்து வைத்தார்.

இன்றைய முதல்வர் திரு கிருஷ்ணமூர்த்தி '' 'டொனேஷன்' போன்ற எந்த வித நிபந்தனையும் இல்லாமல் கல்வித் தகுதி ஒன்றை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு மாணவர்களை நாங்கள் சேர்த்துக் கொள்கிறோம்'' என்றார்.

வைர விழா ஆண்டின் நினைவாக ஒரு புதிய கட்டடம் விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

திரு கிருஷ்ணமூர்த்தியின் ஒரு அபிலாஷையை அவரே கூறட்டும்:

''தமிழகத்திலிருந்து மத்திய நிர்வாகப் பொறுப்புகளுக்குத் தேர்வு செய்யப்படுவோரின் எண்ணிக்கை சமீப காலத்தில் மிகமிகக் குறைந்து விட்டது. ஐ. ஏ. எஸ்., ஐ. எஃப் எஸ். போன்றவற்றுக்குத் தயார் செய்து கொள்ளும் மாணவர்களுக்கு அத்தேர்வுகளை நோக்காகக் கொண்டு இக்கல்லூரியில் இலவசமாகப் பாடம் கற்பிக்க வசதி செய்ய வேண்டும்.''

கிருஷ்ணமூர்த்தியின் பொன்னான எண்ணம் வைர விழா ஆண்டில் நிறைவேறட்டும்! வாழ்த்துவோம்.





⌘ திரு என். சாரநாதன் ⌘ முதல்வர் திரு என். கிருஷ்ணமூர்த்தி

⌘ முதல்வர் சாரநாதன் பெயரால் அமைய இருக்கும் கட்டிட கால்கோள் விழா. அமைச்சருடன் கல்லூரி நிர்வாகச் செயலர் திரு கே. சந்தானம்.





FDS KSDC 3022A TAM

கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யலாமா?

உரையாடலில் பங்கு பெறுவோர்:

1. பேராசிரியர் டி. ஆர். ராமச்சந்திரன் (உதவி முதல்வர், சரித்திரத் துறைப் பேராசிரியர், சென்னை பச்சையப்பர் கல்லூரி.)
2. பேராசிரியர் எஸ். ஜெகதீசன் (ஆங்கிலத் துறைப் பேராசிரியர் சென்னை மாநிலக் கல்லூரி)
3. திருமதி சுமித்ரா கல்யாணராமன் (ரிசர்வ் வங்கி அதிகாரி)
4. ஜி. முத்துகிருஷ்ணன் (ரயில்வே ஊழியர்)
5. குமாரி எஸ். எஸ். உஷா (பட்டதாரி)

சுமித்ரா: ஜெகதீசன் சார்! ஆசிரியர்களைச் சமுதாயம் ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்களாக நோக்குகிறது. அப்படியிருக்க கல்லூரி ஆசிரியர்கள் சமீப காலத்தில் போராட்டம், கிளர்ச்சி, வேலை நிறுத்தம் என்று ஈடுபடுவதை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவர்களே இப்படி நடக்கலாமா?

ஜெகதீசன்: மற்ற எல்லாத் துறையைச் சேர்ந்தவர்களும் தங்களது ஒற்றுமையால் உத்தியோக ரீதியில் பல சௌகரியங்களைப் பெறும்போது கல்லூரி ஆசிரியர்கள் பேசாமல் இருக்க முடியுமா?

ராமச்சந்திரன்: கல்லூரி ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து ஓர் அமைப்பின் கீழ் தங்களது பிரச்னைகளை வெளியிட ஆரம்பித்த பிறகுதான் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பது எவராலும் மறுக்க முடியாத விஷயம்... சில வருடங்களுக்கு முன் நாங்கள் கனவுகூடக் காண முடியாத சில உரிமைகளைத் தற்போது பெற்றுள்ளோம்.

ஜெகதீசன்: எதையுமே போராட்டம், கிளர்ச்சி, வேலை நிறுத்தம் செய்துதான் பெற வேண்டும் என்கிற கொள்கையை நான் ஆதரிக்கிறவன் இல்லைதான்...

சுமித்ரா: வேலை நிறுத்தம் கடைசியான ஓர் ஆயுதமாக இருக்க வேண்டும்.

ராமசந்திரன்: ஒப்புக்கொள்கிறேன். தற்போதும் கல்லூரி ஆசிரியர்கள் அம்மாதிரிதான் நடந்து கொள்கிறார்கள்.

முத்துகிருஷ்ணன்: பெற்றவர்கள் ஏராளமாகப் பணத்தைக் கொட்டி, எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பிள்ளைகளைப் படிக்க அனுப்புகிறார்கள். ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது மாணவ மாணவியரின் படிப்பு வீணாகிவிடுகிறதே!

ராமசந்திரன்: ஆசிரியர் போராட்டத்தால் வீணாகும் நாட்களைச் சரிக்கட்ட நாங்கள் விசேஷ வகுப்புகள் ஏற்பாடு செய்து குறிப்பிட்ட பாடத் திட்டங்களை நடத்தி முடிக்காமல் விடுவதில்லை.

ஜகதீசன்: திடீரென்று சில மாணவர்கள் வகுப்பு வெளியே வந்து கோஷம் எழுப்பி, மற்றவர்களை வெளியே வரச் சொல்லி அழைப்பார்கள். இந்நிலையில் கிளர்ச்சியில் பங்கேற்க விரும்பாத மாணவர்களும் பங்கேற்கும் சூழ்நிலை ஏற்படும்.


உமா: மாணவ, மாணவியருக்கும், ஆசிரியர்களைப் போல் மறுக்கப்பட்ட உரிமைகள் இருக்கலாம் அல்லவா? அதற்காக அவர்களும் போராடுகிறார்கள்.


ஜெகதீசன்: எடுத்த எடுப்பிலேயே சின்னச் சின்ன விஷயங்களுக்காக, அதிலும் பெரும்பான்மையான மாணவ மாணவியர் விரும்பாத நிலையில், மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்வதை என்னால் ஏற்க முடியவில்லை.

சுமித்ரா: ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஒரு பிணைப்பும் கருத்துப் பரிமாற்றமும் இருக்ுமானால் இத்தகைய போராட்டங்களைத் தவிர்க்க முடியும்.

உமா: அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரில்தான் மாணவர்கள் போராட்டங்களில் பல உண்டாகின்றன என்று கூறப்படுகிறதே?

இடமிருந்து வலம்: G. முத்துகிருஷ்ணன், S. S. உஷா, பேராசியர் ராமச்சந்திரன், திருமதி சுமித்ரா கல்யாணராமன், பேராசியர் ஜெகதீசன்





கல்கி மாதாந்திரப் பரிசுத்திட்டம் (அக்டோபர்)

ஒரு படத்தைப் பொருத்தமட்டில் அது ஒரு குதிரைப் பந்தயம் மாதிரிதான். ஆனால் கல்கி அறிவிக்கும் இந்தப் போட்டியில் குதிரைப் பந்தயத்தின் தீமைகள் ஏதும் இடையாது. டைரக்டர், இசையமைப்பாளர், கதை வசனகர்த்தா, நடிகர்கள், ஒளிப் பதிவாளர் என்று பலதரப்பட்ட குதிரைகள் ஓடுகின்றன. எல்லாக் குதிரைகளும் வென்றால் படத் தயாரிப்பாளர்களுக்கு பாக்ஸ் ஆபீஸ் படமாகிறது. துரதிர்ஷ்ட வசமாக சில குதிரைகள் மட்டும் சில ரேஸில் முன்னால் மூக்கை நீட்டிவிடுகின்றன. மற்றவை பின் வாங்கிவிடுகின்றன. திரைப்பட ரேஸின் முக்கிய குதிரைகளுக்குப் பின்வருமாறு நெம்பர்கள் தரப்பட்டுள்ளன: 1—டைரக்டர் 2—ஒளிப் பதிவு; 3—ஒலிப்பதிவு: 4—இசை அமைப்பு; 5—நடிப்பு; 6—கதை வசனம்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்: வாரம் ஒரு படம் வீதம் நாலு வாரத்துக்கு நாலு படங்கள் குறிப்பிடுவோம். அந்தப் படத்தைப் பார்த்து வெற்றி பெறும் குதிரை நெம்பரை அதற்கான கூப்பனில் குறித்துக் கொள்ளவும். நாலு வார முடிவில் நாலு கூப்பன்களையும் ஒன்றாகச் சேர்த்து உறையி லிட்டு, கல்கி, மாதாந்திர பரிசுத் திட்டம், தபால் பெட்டி எண் 3159; சென்னை—32 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். முடிவு தேதி நவம்பர் 20. நாலு ரேஸ்களிலும் சரியான குதிரையைத் தேர்ந்தெடுத்தவருக்குப் பரிசு ரூ. 1000. சரியான விடையை ஒன்றுக்கு மேற்பட்டவர் எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

(யோசனை: நளினி சாஸ்திரி)



இரண்டாம் படம்: எல்லாம் உன் கைராசி

ஜெயிக்கும் குதிரை எண்:

என் பெயர்

விலாசம்

கையெழுத்து

ராமசந்திரன்: பொதுவாக மாணவர் போராட்டங்கள் அவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை மையமாகக் கொண்டே நடத்தப்படுகின்றன. இவற்றில் அரசியல் கட்சிகளின் தூண்டுதல்களோ, அரசியல் கலப்போ இருப்பதாக நான் கருதவில்லை.

முத்துகிருஷ்ணன்: மாணவர்கள் விரும்பும் துறைகளில் அவர்கள் படிக்க இடம் கிடைக்காமல் கல்லூரி முதல்வர்கள் அளிக்கும் பாடத் திட்டங்களில் படித்தாக வேண்டிய நிலை உருவாகியுள்ளதே!

ராமசந்திரன்: மாணவர்கள் கேட்கும் துறையில் இடம் இல்லாவிட்டால் இடம் இருக்கும் துறைகள் பற்றி நாங்கள் குறிப்பிடுகிறோமே தவிர அத்துறையில் மாணவன் படித்தாக வேண்டிய கட்டாயம் இல்லையே...

ஜெகதீசன்: தற்போது மாலை நேர வகுப்புகள் தபால் வழி படிப்புகள் போன்ற வசதிகள் ஏற்பட்டுவிட்டன. குறிப்பிட்ட பாடத்தில்தான் ஒரு மாணவன் படிக்க வேண்டும் என்று விரும்பினால் இவற்றில் சேரலாமே?

சுமித்ரா: மாலை நேரக் கல்லூரியும், தபால் வழிப் படிப்பும் முறையான பகல் நேர கல்லூரிப் படிப்புக்கு ஈடாகாதே!

ராமசந்திரன்: நிறைய மதிப்பெண்களையும் பெற மாட்டேன்... குறிப்பிட்ட கல்லூரியில்தான் படிப்பேன்.. பகல் நேரக் கல்லூரியில்தான் படிப்பேன்... குறிப்பிட்ட பாடத் திட்டம்தான் வேண்டும் என்று நிபந்தனைகள் போட்டால் தற்போதைய சூழ்நிலையில் முடியுமா என்ன... எதிலாவது சமரசம் செய்து கொள்ளத்தான் வேண்டும்.

சுமித்ரா: மாணவர்களை விட மாணவிகள் அதிக பொறுப்போடும், திறமையோடும் படிக்கிறார்கள் என்பது என் கருத்து.

ஜெகதீசன்: புற அம்சங்களில் அதிக ஈர்ப்புக்கான வாய்ப்புக்கள் குறைவானதால் மாணவிகள் அதிக ஈடுபாட்டுடன் படிப்பதாகத் தோன்றலாம். ஆனால் படிப்பு விஷயத்தில் இரு பாலாருக்கும் இடையே இடைவெளி இருப்பதாக நான் கருதவில்லை.


புதியது! DUNLOP
G.18C
NYLON
அதிக பட்ச கேஸிங்
பயனை உறுதியாக
அளிக்கும் மிகவும் நம்பக்கூடிய
தன்மையுள்ள கேஸிங்
உன்னத இயக்கத்திற்கு அசல் டன்லப் புதிய ட்யூபுகள் மற்றும் ஃப்ளாபுகளை உபயோகியுங்கள். அத்துடன் குறைந்த பட்ச நீளும்தன்மை அதிகபட்ச ஆயுளுக்கு டன்லப் மாக்ஸ் லைஃப் பாலிபெஸ்டர் கார்ட் ஃபான் பெல்ட் உபயோகியுங்கள்.
DUNLOP
சிறந்ததை வாங்கிறீர், வாங்கிறீர் டன்லப் டயர்ஸ்
DT/CAS-3/80 TAM

ஜலதோஷமும் ஃப்ளூவும்— சில முக்கிய தகவல்களும் முறியடிக்கும் முறைகளும்

"ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவின் துன்பங்களிலிருந்து விரைவில் நிவாரணம் பெற அனாஸின் பெரிதும் உதவுகிறது" என்கிறார் நர்ஸ் நாட்டாலியா டிசௌஸா.



ஜலதோஷமும் ஃப்ளூவும் வரக் காரணம் என்ன?
பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து காற்றில் வரும் விஷ அணுக்கள் ஜலதோஷத்தையும் ஃப்ளூவையும் பரப்புகின்றன. இந்த விஷ அணுக்களை சாதாரணமாக உடல் எதிர்க்கிறது. ஆனால் அளவுக்கு மீறிய உழைப்போ, சத்துக்குறைவோ உடலைப் பலவீனப் படுத்தி, நோய் எதிர்ப்பாற்றலைக் குறைக்கிறது.

அறிகுறிகள் யாவை?
உடல் வலி, தலைகனம், தும்மல், மூக்கிலே ஒழுக்கு இவற்றுடன் ஜலதோஷம் தொடங்கும். குளிர், அமைதியின்மை, வியர்வை தோன்றும். இருமல், தொண்டைப் புண், பசியின்மை, உடல் சோர்வு தொடரலாம்.

சிக்கல்கள் தோன்றுமா?
புறக்கணித்தால் நிமோனியாவிலும், சுவாச கோசம் மற்றும் மேல் மூச்சுக் குழாயின் நோய்த் தொற்றிலும் முடியலாம்.

அனாஸின் எப்படி உதவுகிறது?
இது ஜலதோஷம், ஃப்ளூவினால் ஏற்படும் வேதனையைப் போக்குகிறது. உலகெங்கும் டாக்டர்கள் சிபாரிசு செய்யும் வலி-நிவாரணியை அதிக அளவில் கொண்ட அனாஸின் சக்தி வாய்ந்தது. டாக்டரின் நம்பகமான மருந்துக் கலவை போன்றது. ஜலதோஷம் ஃப்ளூவின் முதல் அறிகுறி தோன்றியதுமே, அனாஸின் சாப்பிடுங்கள். ஒரு நாளைக்கு 4 தடவை.

நீங்கள் வேறென்ன செய்யவேண்டும்?
- நிறைய திரவ பதார்த்தங்கள், கொதிக்க வைத்த நீர், ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாறு பருகுங்கள்.
- சத்துணவு புசியுங்கள்.
- போதிய ஓய்வெடுங்கள்.
- ஆன்டிசெப்டிக் மருந்து அல்லது உப்புக் கரைத்த நீரால் கொப்புளியுங்கள்.
- அறைகள் காற்றோட்டமாக இருக்கட்டும்.



இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி

அளிப்பவர்கள்: ஜெ.ஃப்ரி மேனர்ஸின் அனாஸின் பிரிவினர்.

* Regd. TM

A24-6/79.

ரம்யா காரிலிருந்து இறங்கும்போதே முதல் மணி அடித்திருந்தது. வேகமாக ஓடி 'எக்ஸ்யூஸ்மி சார்' என்று மூச்சிரைக்கச் சொல்லிவிட்டு, ஆங்கிலப் பொது வகுப்பில் காலரியில் ஏறி அமரும்போது 'அப்பாடா' என்றிருந்தது.

தலையை நிமிர்த்தியபோது, வழக்கம் போல் அவன் — நந்தகோபால் முதல் வரிசையில் அமர்ந்து, ஆசிரியர் முகத்திலிருந்து கண்ணெடுக்காமல்... எப்படி எந்தவிதச் சலனமும் இல்லாமல் இப்படிப் படிப்பில் ஈடுபடுவது சாத்தியமாகிறது? என்ன சீரியஸாக இருந்தாலும், 'ப்ரொஃபைலிலேயே' எவ்வளவு அழகு... ரோமாபுரிச் சிலை மாதிரி மூக்கு, பளபளவென்ற முகம், தினம் ஷேவ் செய்துகொள்ளுவானோ? கமல் போலப் படிப்படியாய் அடர்ந்த மயிர்... ரியலி ஹேண்ட்ஸம்... தினமும் பள்ளிச் சீருடை மாதிரி காக்கி பாண்ட், வெள்ளை ஷர்ட் அணியாமல், வித விதமாக உடையணிந்தால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்? எப்போது பார்த்தாலும் படிப்பு, படிப்பு என்று உயிரை விடாமல், கொஞ்சம் சிரித்து, கலாட்டாச் செய்து, ப்ராக்ஸி கொடுத்து 'ஜாலி'யாக இருந்தால்?...

அப்பாடி... நந்தகோபால்தான் ஆசிரியரின் விரைவுக்கு ஈடாக எப்படி வேக, வேகமாக நோட்ஸ் எழுதுகிறான். அவன் முகத்தில் குறும்பு படிந்தது!.

வகுப்பு முடிந்து வெளியேறும்போது, ''மிஸ்டர் நந்தகோபால், நான் க்ளாசுக்கு லேட். உங்க நோட்டைத் தர முடியுமா?.. ஐ வில் காப்பி இட்...'' என்றாள்.

''நா....ன் சரியாக எழுதவில்லை. ரப் ஸ்கெட்ச்தான். நாளைக்கு நன்றாக எழுதிக் கொண்டு வரேன்.''

''அப்போ... லஞ்ச்அவரில் எக்ஸ்ப்ளெயின் செய்வீங்களா?'' அவன் பதில் கூறுமுன் ''ஐ வில் வெயிட் ஃபார் யூ'' என்று அடுத்த வகுப்பில் நுழைந்தாள்.

நந்தகோபால் விளக்க ஆரம்பித்தபோது ரம்யாவைத் தவிரவும் பலர் கூடினர். ஆங்கிலமே வராத பலர் அவன் நிதானமாகப் பொருள் கூறுவதை வியப்புடன் பார்த்தனர்.

''ஹெவ் நந்தா யூ ஆர் க்ரேட் யார்...''

''தேங்க் யூ மிஸ்டர் நநதகோபால்... ரொம்ப அழகாக எக்ஸ்பிளெய்ன் செய்தீர்கள். என் ட்ரீட்டாக வாருங்கள் கான்டீனுக்குப் போகலாம்.''

''நோ, தேங்க்ஸ்... நான் டிபன் பாக்ஸ் கொண்டு வந்திருக்கேன்.''

''நந்தகோபால், லாங்பெல்லோ கப்பல் கட்ட மாத்திரம் கவிதை எழுதவில்லை' அவருடைய இந்தப் பாடல் படித்திருக்கீங்களோ?

Youth perpetual dwells in fountain...
Not in flasks and Carks and Cellars.

இளமை நீரூற்று அது பாத்திரத்துக்குள் அடைபடக் கூடாது என்று. நீங்களானால் டிபன்பாக்ஸுக்குள் அடைத்துவிடப் பார்க்கிறீர்களே? கம் ஆன்... ஃபார் எ கப் ஆஃப் காபி.''

''நான் காப்பியே குடிக்கிறதில்லையே.''


''பின்னே என்ன குடிப்பீங்க, விஸ்கி, ஜின்னு? என்னதான் பெங்களூரானாலும் காலேஜ் கான்டீன்லே கிடைக்காதே.''

நந்தகோபால் உதட்டு நுனியில் புன்னகை கீற்றாகத் தோன்றியது. ஆனாலும் அவள் விளையாட்டை ரசிப்பதே ஒரு குற்றம் போல் முகத்தை சீரியஸாக்கிக் கொண்டு ''தேங்க் யூ ஃபார் த ஆபர்...'' என்று விறுவிறுவென்று நகர்ந்தான்.

படுக்கையில் படுத்தவாறு ரம்யா யோசித்துக்கொண்டிருந்தாள். இந்த ஆண்டுடன் டட்டப் படிப்பு முடிந்துவிடும். மேலே படிப்பதும் படிக்காததும் உன் இஷ்டம் என்று அப்பா எப்போதோ சொல்லியிருந்தார். பி.ஏ. படித்துச் சாதிக்காத எதை அவள் எம். ஏ. படித்துச் சாதித்துவிடப் போகிறாள்? பிள்ளை இல்லா வீட்டின் ஒரே செல்லப்பெண்ணான அவள் பிஸினஸில் மட்டும் ஆர்வம் காட்ட வேண்டும் என்று அப்பா விரும்புகிறார். பிஸினஸ் என்றால், மாலேஜிங்

முற்றுப் பெறாத முதல் காதல்கள்

உஷா சுப்ரமணியன்



டைரக்டராக ஏ.ஸி.யில் அமர்ந்து பேப்பர்களில் கையெழுத்துச் செய்வதானால் சரி. அப்பா மாதிரி இரவு பகலென்று நேரம் காலமில்லாமல் தொழிற்சாலைக்கு ஓடிக் கொண்டு, வீட்டிலும் ஆபீஸைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு சுகமாக வாழ வேண்டிய வாழ்க்கையைப் பாரமாக்கிக் கொள்ள அவன் தயாராக இல்லை.

அம்மா ஆசைப்படுவது போல் நல்ல இடத்துச் சம்பந்தமாகச் செய்து கொண்டு வசதியான சுகவாழ்க்கை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அம்மா கூறும் பெரிய இடத்துச் சம்பந்தங்கள் பெரும்பாலும் பணக்காரக் குடும்பத்துக் கூட்டு வாழ்க்கை... புல் ஷிட்.. ஷி ஹேட்ஸ் லிவிங் வித் ஓல்ட் பீபீல். சுதந்திரமே இல்லாத வாழ்வு என்ன வாழ்க்கை?

நந்தா... என்ன நிறம்... என்ன கம்பீரம் என்ன அழகு... என்ன புத்திசாலித்தனம்... சம வயதானால் என்ன... ப்ராமின்... ஸோ வாட்? இத்தனை பணத்துடன் அழகுடன் ஒரே பெண்ணான நானே வரும்போது, அவர் பெற்றோர் ஜாதியைக் காட்டியா மறுத்துவிடுவார்கள்? அப்பாவின் வியாபார சாம்ராஜ்யத்தின் முடிசூடிய சக்கரவர்த்தியாக அமர்த்திவிட்டால், விதவிதமான காஷுவலுக்கு லிவி ஜீன்ஸும் அபிஷியலுக்கு சபாரி சூட்டுமாக, மீட்டிங்குகளிலும், பார்ட்டிகளிலும் பேச, சிரிக்க, ஜோக் அடிக்கக் கற்றுக் கொள்ள எத்தனை நேரமாகும்?

நந்தாவுடன் வாழ்வு எத்தகைய இன்பமாக இருக்கும்? ஹனிமூன் சிங்கப்பூரில் சாமானாக வாங்கிக் குவிக்க வேண்டும். ப்ரெஞ்சு பர்ப்யூமில் மூழ்கி லண்டன் ஓட்டல்களில் விளையாட்டுக் காட்ட வேண்டும்... நயாகரா நீர்வீழ்ச்சியில் உடம்பை நனைத்து, 'இப்போது சொல்லுங்கள், நான் அழகா, சீமா அழகா' என்று திணற அடிக்கவேண்டும்.

கல்லூரி முடிய இருக்கும் மூன்று மாதத்தில் உன்னை அப்படியே காதல் வசப்படுத்தி விடுகிறேன் பார்... கொஞ்சம் கொஞ்சமாக என் அழகில் மயங்கி... ஒரு நாள் காலடியிலேயே விழுந்துவிடுவாய்...

அன்று கல்லூரி முடிவு ஸோஷியல். மாலையில் டீபார்ட்டி. கல்லூரியில் பல்சுவை நிகழ்ச்சி. ரம்யாவின் க்ரூப் மாணவ மாணவியர் அனைவரும் சேர்ந்து நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு படம் பார்த்துவிட்டு 'காமத்'தில் உணவருந்த முடிவு செய்திருந்தனர்.

ரம்யா சிவப்பு ஷிபானில் தேவதையாகத் திகழ்ந்தாள்.

சினிமா முடிந்து கும்பலாக அனைவரும் கப்பன் பார்க்கில் நுழைந்தார்கள். நண்பர் குழாம் கும்பல் கும்பலாகப் பிரிந்தது. ரம்யா காத்திருந்த நேரம் வந்தது.

"மேலே என்ன செய்யப் போகிறீர்கள் நந்தகோபால்?"

"இப்போது எப்படிச் சொல்வது? வாங்கும் மார்க்கைப் பொருத்தது. மார்க்கை மட்டும் வைத்துக் கொண்டு கல்லூரியில் சீட் கிடைக்குமா என்பதைப் பொருத்தது. ஏதாவது 'லோன்' ஸ்காலர்ஷிப்பாவது கிடைக்குமா என்பதைப் பொருத்தது."

"அப்படியாவது படித்துத்தான் ஆக வேண்டுமா?"

"படிக்க முடிந்தால் படித்துத்தான் ஆக வேண்டும். எம்.ஏ. முடித்தாலே எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் வாசலில் எத்தனை வருடம் நிற்க வேண்டுமோ, வெறும் பட்டப் படிப்புடன்...ம்...வாட் அடவுட் யூ ரம்யா?'

"என்னைப் பற்றியா... இப்போதுதான் என்னைப் பற்றி ஏதாவது கேட்க வேண்டும் என்று தோன்றியதா?"

"ஸாரி ரம்யா...."

"நான் அழகாயில்லையா, நந்தா?"

"யூ ஆர் வெரி ப்யூட்டி ஃபுல்.... மோர் ப்யூட்டிஃபுல் தேன் எனி கேர்ள் ஐ ஹேவ் சீன்...."

"இந்தச்சூழ்நிலையில் உமர்கய்யாம் நினைவு வரவில்லை?" ரம்யாவின் கரம் அவன் கையில் அழுந்தியது. ஒரு நிமிடம் இறுகப் பற்றிய அவன் விரல்கள், மறுநிமிடம் கழன்று பிரிந்தன. அவன் உடம்பு இறுகி விறைத்தது. அவன் முகம் கல்லாயிற்று.

"நந்தா, ஐ லவ் யூ... ஐ வாண்ட் டு மேரி யூ... நான் உங்களை எவ்வளவு விரும்புகிறேன் என்று சொல்லிப் புரிய வைக்க முடியாது. என் பெற்றோர் தரப்பிலிருந்து எந்தத் தடையும் இருக்காது."

நந்தா திடீரென்று எழுந்து விலகி நின்றான். "ஸாரி, ரம்யா, நீ என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய்."

"ஏன் நந்தா, என்னை பிடிக்க வில்லையா?"

"பிடிப்பது வேறு ரம்யா, எங்களால் எல்லாம் காதலிக்கவே முடியாது."

ரம்யா இருட்டைச் சாதகமாக்கிக் கொண்டு அவன் மேல் சாய்ந்து சிணுங்கினாள். "வேண்டுமென்றே வம்பு செய்கிறீர்கள்."

நந்தகோபால் நாலு அடி நகர்ந்து சென்று கையைக் கட்டிக் கொண்டு நின்றான். "ரம்யா உன்னை டிஸப்பாயிண்ட் செய்துதான் ஆக வேண்டி யிருக்கிறது. ஆனாலும் புரிந்து கொள்ள முயற்சி செய், உங்களுடைய

ஏன்? ஏன்? ஏன்?

இலக்குமணனின் மனைவி ஊர்மிளையின் கற்பைப் பற்றிப் பேசிய திரு முத்து தங்க ஐயப்பன், "இராமன் சீதையைக் காட்டுக்கு அழைத்துச் செல்லும்போது இலக்குவன் மட்டும் அழைத்துச் செல்லவில்லையே! அது ஏன்? ஏன்?" என்று கேட்டார்.

" 'பதினாலு வருஷமாவது நிம்மதியாகஇருக்கலாமே என்று அவன் நினைத்திருக்கலாம்!" என்று கூறினார் ஒரு நண்பர். சிரிப்பு அடங்க வெகு நேரமாயிற்று. -வ. தேனப்பன்



அகராதி வேறு எங்களுடைய அகராதியே வேறு. உன்னைப் பொறுத்தவரை முதற் காதல் இனிமையானது. அழகானது, நடக்கக் கூடியது. நீங்கள் எல்லாம் உங்கள் 'ஸ்டேட்டஸை' விட்டு இறங்கி வந்தால் வாழ்வு எப்படி இருக்கும் என்று சிந்தித்துக் கூடப் பார்த்திருக்க மாட்டீர்கள். மேலே ஆகாசமும், கையிலே கவிதையும், கோப்பையிலே மதுவும், தங்கத் தட்டு நிறைய உணவும் பக்கத்தில் காதலியுமாக இருந்தால் எல்லோருமே உமர் கய்யாமாக ஆகிவிடலாம். ஆனால் ரம்யா, எங்கள் வீட்டு அலுமினியத் தட்டுகளும், அகப்பைகளுமே அடகுக் கடையில் இருக்கின்றன என்பது உனக்குத் தெரியுமா? குடிக்கும் தண்ணீர்க்கே நாலு தெரு தாண்டிப் போக வேண்டியிருப்பவர்கள், குழந்தைப் பருவமே இல்லாத குழந்தைகளாக வளர்ந்து இளமையே இல்லாத இளைஞர்களாகி விட்டவர்கள்.''

''நோ, இளமையை வீணாக்குபவர்கள்.''

''இல்லவே இல்லை ரம்யா...எங்கள் இளமைகள் எல்லாம் நாங்கள் ஆசைப்பட்டு வீணாக்கப்படுபவை அல்ல. என் எதிர்காலத்தையே எடுத்துக்கொள். நான் ஐ.ஏ.எஸ். பாஸ் செய்து விடுவேன் என்று கனவு கண்டு இருப்பதையெல்லாம் அடகுவைத்து முதல் பிள்ளையான என்னைக் கல்லூரிக்கு அனுப்புகிறார்கள். இதற்காகப் பெற்றவர்கள் மட்டுமின்றி, அடுத்து இருக்கும் நாலு பேருங்கூட வயிற்றைச் சுருக்குகிறார்கள். ஐ.ஏ.எஸ். அவ்வளவு சுலபமில்லை. கவர்ன்மெண்ட் ஆபீஸராகக் கூட எனக்குத் தகுதியில்லை. ஏனென்றால், சபிக்கப்பட்ட 'பார்வர்ட் கம்யூனிடியில்' பிறந்து விட்டேன். அதுவும் ஏழை அப்பாவுக்குப் பிள்ளையாகப் பிறந்து விட்டேன். வேத பாடசாலையில் வாயாலேயே ஓதிப் பழகிவிட்ட அப்பா, வேறெந்தப்பள்ளிக்கூடத்தையும் எட்டிக்கூட பார்த்ததில்லை. என் குடும்பத்தில் நான் முதல் தலைமுறை பள்ளிக்குச் செல்பவன். அதற்காக எனக்கென்ன சிபாரிசு? நான் முதல் வகுப்பு வாங்கினால் மட்டும் மேல் படிப்புக்கு சீட்டா கிடைக்கப் போகிறது? கிடைத்தாலும், வெளி வந்த பின் என்ன மல்டிநேஷனலில் எக்ஸிகியூடிவ் வேலையா காத்திருக்கப் போகிறது? என்னால் மேனிடத்துச் சிபாரிசு வாங்கித் தர முடியுமா?

''ஒவ்வொரு ஆபீஸாகப் படி ஏறி இறங்கி, வெறும் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு வேலைவாய்ப்பகத்தின் முன் தவம் கிடந்து, வீட்டில் அத்தனை உள்ளங்களும் நிராசையாகி, வெறுப்பை என்மீதே எடுத்து வீச, நானே சுய மதிப்பை இழந்து, கண்டவன் காலில் விழுந்து, நாலு வருடமாவது நாய் மாதிரி சுற்றிய பிறகு, ஏதாவது ஒரு கம்பெனியில் எல்.டி.ஸி.யாகவோ யு.டி.ஸி.யாகவோ சேருவேன். இந்த வேலை கிடைப்பதற்குள் எனக்காகப் படிப்பை விட்ட தங்கை இருபது வயதில் நிற்பாள். நான் எப்போது சம்பாதித்து, சேர்த்து, பிராவிடெண்ட் பண்டில் கடன் வாங்கி அவளுக்குக் கல்யாணம் செய்வது? என் தம்பிகளையாவது நல்லபடி இன்ஜினியரிங்கோ, மெடிகல்லோ படிக்க வைக்க வேண்டும். இதெல்லாம் எப்படிச் செய்வது?

''அம்மா பார்த்த அடக்க, ஒடுக்கமான பெண்ணை அஞ்சாயிரத்துடன் நான் மணந்தால்தான் தங்கைக்குக் கல்யாணம் செய்யக் கட்டுபடியாகும்.''

''யெஸ் நந்தா... என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் எந்தப் பிரச்னையும் இருக்காதல்லவா?''

''இருக்காது ரம்யா, என்னுடன் சேர்த்துத் தன்மானத்தையும், என்னைச் சேர்ந்தவர் மானத்தையும் விற்றுவிட்டால் இருக்காது. ஆனால் நான் படித்த படிப்பு எதை வளர்த்ததோ இல்லையோ, தன்மானத்தை அதிகமே வளர்த்து விட்டது. என் இன்டிவிஜுவாலிடியை வளர்த்ததுடன் இல்லாமல் என் படிப்பு, எனக்கு அதை அளித்தவர்கள் இழந்த எல்லாவற்றையும் சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்கும்.

''இளமையில் முதல் காதல் அற்புதமான ஒன்று. ஆனால் அது என்னைப் போன்ற ஏழைகள் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அளவு விலை உயர்ந்தது. நாங்களெல்லாம் கவிதையைக் கூட வகுப்பறையில் பாடமாகத்தான் படிக்க முடியும். உமர்கய்யாமாக நின்று ரசிக்க எங்களிடம் நேரமே கிடையாது.


''எங்கள் வாழ்க்கையில் நாங்கள் அறிந்த ஒரே காதல், காவியம் எல்லாம் 'சர்வைவல்' மட்டுமே... வாழ்வை நோக்கிய ஓட்டம், ஒருமனப்பட்ட போட்டி...அத்தனையும் இருந்தும்கூட நாங்கள் தோற்றுத் தானே போகிறோம். அதனால்தான் காதலை விட்டு விலகி, ஓடிப்போகிறோம். ஸாரி ரம்யா....''


ரம்யாவுக்குப் புரியவே யில்லை. இத்தனை அழகாக இருந்தும், செல்வத்தின் ஒரே வாரிசாக இருந்தும் நந்தாவின் அத்தனை கஷ்டங்களையும் போக்கத் தயாராக இருந்தும் தன் முதல் காதல் ஏன் முற்றுப்பெறவே இல்லை என்று!

அந்தநாள் ஞாபகம்



''கம்பராமாயணத்தைக் கொளுத்தறவன் கொளுத்தட்டும், கிழிக்கிறவன் கிழிக்கட்டும், இந்த உலகத்தில அதை ஒரு பிரதி கூட இல்லாமல் அழிக்கட்டும்! ஆனா இந்த 'ஜகந்நாதாச்சாரி இருக்கிறவரை கம்ப ராமாயணத்துக்கு அழிவே இல்லேடா. அதே மணி நேரத்திலே கம்பன் எழுதினதை அப்படியே எழுதிக் காட்டறேன்'' என்று தன்னம்பிக்கையுடன் கூறியவர் தமிழ் பேராசிரியர் கி. ஜெகந்நாதாச்சாரியார் (வருடம் 1964 - விவேகானந்தா கல்லூரி) - டாக்டர் வெ. சீதாராமன்


பாலு, பசவப்பா ஏறியுள்ள விமானம் பம்பாய்க்குப் பறக்கிறது.
பம்பாயில் என்னை என்ன பண்ணப் போறீங்க?
ஹி ஹி... அதை என் பாஸ் மோஹிந்தர் மோடி சொல்லுவார். உன் தலை விதியை நிர்ணயிக்கும் கடவுளே அவர்தான்!
007 பாலு
கதை: குமரன்
படம்: விஜு!
11
பம்பாய், பீச்கேண்டி பலமாடி கட்டிடம் ஒன்றில் ஒரு அபார்ட்மெண்ட்.
நீதான் கடவுளா?
பார்த்தா எப்படித் தெரியுது?
பசவப்பா நோக்கிலே கடவுள்; புற உலகுக்கு நீ பிலிம் பைனான்ஷியர். என் பார்வையில் வடிகட்டின அயோக்கியன்!
ஒரு தேசத் துரோகியிடம் பேச எதுக்குப் பயப்படணும், நான்?
என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
ராஸ்கல்! என்ன தைரியம் உனக்கு?
நீ ஒரு பெரிய ஒற்றர் கூட்டத்தின் தலைவன். ராணுவ நிறுவனங்களில் வேலை பார்க்கிறவர்களை விலைக்கு வாங்குகிறே; பாதுகாப்பு அமைச்சரவையிலும் உனக்கு ஆட்கள் இருக்கிறார்கள்......


...அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து மினி காமிராவும் வழங்கி ராணுவ ரகசியங்களை படம் பிடிச்சுத்தரச் சொல்றே. அவற்றை அயல் நாட்டவருக்கு விற்று லட்சலட்சமாய்ப் பணம் சம்பாதிக்கிறே.
ராம்குமாரை மறந்துட்டியா? யாருக்கும் சந்தேகம் எழாதிருக்க அவனை பசவப்பா
குறிப்பிட்ட நேர மின்சாரரயிலின் குறிப்பிட்ட கம்பார்ட்மெண்டிலே தானே வழக்கமா சந்திப்பான்!
அதுவே ராம்குமாருக்கு மரணமேடையாகவும் ஆயிடுச்சு!
அத்தாட்சி?
பசவப்பா! இந்த விவரமெல்லாம் இவனுக்கு எப்படித் தெரிய வந்தது? எப்படி ஒரு பொடிப்பயல் கிட்டே ஏமாந்தே? சீ! வெட்கமாயில்லே! உனக்கு என்ன தண்டனை கொடுக்கலாம். நீயே சொல்லு!
கோபிக்காதீங்க பாஸ்! ...
ப்ளீஸ்! நான் சொல்றதைக் கேளுங்க. இவன் நம்மிடையே விரோதம் உண்டாக்கக் கதை அளக்கிறன் நம்பாதீங்க.
ஓஹோஹோ! நான் சொல்றது கதையா உண்மையான்னு பாஸ்க்கு தெரியாதாக்கும்!
அந்த இன்னா நரிகிட்டே இந்த ஓநாய் ஏன் ஏமாந்ததுங்கிறது தான் கேள்வி.
பசவப்பா! உன்னைத் தலைகீழா தொங்கவிட்டு சவுக்காலே அடிச்சாலும் போதாது.
பாஸ்! இவன் பேசறதைப் பார்த்தீங்களா! இவன் பெரிய இன்னடகி!
தொடரும்



உவகை, ஆவல், நம்பிக்கை, கூச்சம், பயம் —எல்லாம் சேர்ந்து பதினேழு வயதும் ஐந்தரை அடி உயரமும் மாநிறமும் ஒல்லி உடம்பும் பெரிய கண்களுமாய் முத்தையா என்ற பெயரோடு ஓர் உருக்கொண்டு நின்றன.

சந்தோஷ மிகுதியினால் இப்போதும் இது கனவோ நிஜமோ என்று நம்புவது கஷ்டமாயிருந்தது: 'நான் உண்மையாகவே கல்லூரி மாணவனாகிவிட்டேனா?'

கல்லூரிக் கனவு நெடுநாளைய, இடைவிடாத ஒரு சிலிர்ப்பு. கூடவே, முதலிலிருந்தே, அதனோடு இணைந்திருந்த நிழலாக, ஒரே ஒரு பயம்: ''ராகிங்'' செய்வார்களே!

ஆனால் சென்ற விடுமுறைக்குச் சென்னையிலிருந்து வந்திருந்த பூபேஷ் தைரியமளித்தான். ''அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதேடா முத்து. எங்க காலேஜ்ல ராகிங்'கே கிடையாது. தடை போட்டுட்டாங்க. உனக்கு மட்டும் அங்கே அட்மிஷன் கிடைக்கட்டும், நீ நிம்மதியாய்ப் படிக்கலாம். நானும் உன்னை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கறேன்'' என்றான். இரு குடும்பங்களிடையே நீண்ட கால நட்பு இருந்தது.

''நிஜமாவே 'ராகிங்' இல்லையா உன் காலேஜ்லே?'' என்று கண் விரியக் கேட்டான் முத்தையா.

''ஊஹூம். நீ கவலையே படவேணாம். போன வருஷம் நான் அங்கே புது ஸ்டூடண்ட் தானே? ஒரு பயல் என்னைச் சீண்டணுமே! அந்தப் பேச்சே கிடையாது.''

'ராகிங்' சம்பந்தமாய் அவன் கேள்விப்பட்டிருந்த பல குரூரங்களின் விவரங்கள் நெஞ்சிலிருந்து மெல்ல மெல்ல அகன்றன.

கனவு நிறைவேறி நேற்றுக் காலை இங்கு வந்து சேர்ந்தாயிற்று தன் சொந்தக் கிராமத்திலிருந்து. கண்கள் ஆவலில் படபடத்தாலும் புதுச் சூழலில் தயக்கமும் கலக்கமுமாய் ஒதுங்கி ஒதுங்கி நின்றவனை பூபேஷ் ஆசுவாசப்படுத்தி நண்பர்களுக்கு அறிமுகம் செய்து வைத்துக் கல்லூரியைச் சுற்றிக் காட்டினான். வகுப்பறைகள் — இவை வெறும் பள்ளிச் சிறுவர்களையல்ல, பட்டதாரிகளை உருவாக்குபவை! அவன் இப்பொழுது பெரியவன். கல்லூரி மாணவன் எனும் புதிய உண்மையை எடுத்துக்காட்டும் பின்னணிக் களம் இவை. இது அசெம்பிளி ஹால். இது ரெக்ரியேஷன் ஹால். இது லேபரேட்டரி. இதோ லைப்ரரி. இந்த நீண்ட தாழ்வாரங்களுக்கு முடிவே கிடையாதோ? அதோ, சற்றுத் தள்ளி எழும் பெரிய கட்டிடப் பகுதிகள்தான் ஹாஸ்டல். இன்னும் 'சாப்பல்' — கால்பந்து, கிரிக்கெட் மைதானங்கள் — அடேயப்பா, எல்லாமாகச் சேர்ந்து 'காம்பஸ்' இருபது ஏக்கரா அளவுக்காவது பரந்திருக்கும்போல் இருக்கிறதே!

'இப்போது இது என் காலேஜ்!'

முதல் நாள் பாடங்கள் அதிகம் நடக்கவில்லை. புது மாணவர்களைக் கல்லூரி முதல்வர் (அசப்பில் கொஞ்சம் சிவாஜி கணேசன் மாதிரி இல்லே?) சாங்கியமாய் வரவேற்றுப் பேசினார்.

அவர் அகன்றதுமே ''என்ன, சரியான அறுவையா? ப்ளேடா ரம்பமா?'' என்று காதில் முணு முணுத்த குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தவன் பூபேஷின் சிரித்த முகத்தைக் கண்டான்.

''என்னடா இப்படிச் சொல்றே?''

''வேறென்ன? அவர் என்ன பேசியிருப் பார்னு நான் சொல்லட்டுமா? கல்வி—கடமை — நீங்களே நாட்டின் எதிர்கால ஒளி—உங்களிடை பல ராமானுஜன்களும் ஐன்ஸ்டைன்களும் இருக்கலாம் — எக்ஸெட்ரா எக்ஸெட்ரா. அதானே?''

முத்தையாவுக்குச் சிரிப்பு வந்தது.

''ஆமாம்.''

''போன வருஷமும் இதேதான்.''

''அதுக்காக இப்படித்தான் சத்தமாப் பேசறதா? எங்கேயானும் அவர் காதில்...''

''போடா, இதெல்லாம் அவருக்குத் தண்ணி—பட்ட பாடு! கண்டுக்க மாட்டார், ரொம்ப நல்லவர். நீ இன்னும் ஸ்கூல்பாய் மாதிரி பயந்தால் எப்படிடா? பெரியவனில்லே இப்போ?''

சில பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை பூபேஷ் அவனுக்குச் சுட்டிக் காட்டினான். இரவு ஹாஸ்டல் நுழைவு 'லாபி' ரூமியில் சில மாணவர்கள் நின்று புகை பிடித்துக் கொண்டிருப்பதைக் காட்டினான்.

''அதோ சிகப்பு ஸ்லாக் போட்டு நக்கிறானே, அவன்தான் மாணவர் சங்கத் தலைவன். அவனுக்கு வலப் பக்கத்தில் நிக்கிறவன் பேரு தனபால். தனபால் என்ன பிடிச்சுக்கிட்டிருக்கான் தெரியுதா?''

''சிகரெட்.''

''இல்லே.'' குரல் தாழ்ந்தது. ''கஞ்சா.''

முத்தையா திடுக்கிட்டான்.

''மத்தவங்களிலும் சிலபேருது அதான்.''

புகைத்துக் கொண்டிருந்தவர்களின் பார்வைகள் இவர்கள் பக்கம் நகர்ந்தன. தனபால் மந்தமான கண்களால் முத்தையாவைப் பார்த்தான். ''ஃப்ரெஷ்ஷரா?''

அடிவயிற்றில் சிலீரென்ற ஒரு குலுக்கலுடன் முத்தையா உள்ளே பின்வாங்கினான். அந்தப் பார்வையில், அந்தக் கேள்வியில், ஏனோ திடீரென்று 'ராகிங்' நினைவுக்கு வந்துவிட்டது. பதற்றத்துடன் பூபேஷை நோக்கினான்.

''ஆமாம். என் ஃப்ரெண்ட் முத்தையா. மாத்ஸ் பி.ஏ. வாடா முத்து.''

பூபேஷின் பின்னே மறைந்துகொள்ளாத குறையாக அவ்விடத்தைக் கடந்த பிறகும் முத்தையாவுக்கு மூச்சு இரைத்தது. இரவு மெஸ்ஸில் என்ன சாப்பிட்டோம் என்ற உணர்வே இல்லை. ஏதேதோ பயங்கள், திகைப்புக்கள். இருந்தாப் போலிருந்து வீட்டு ஞாபகம். அறைக்குள் சென்றதுமே படுக்கையை விரிக்கக் கூடத் தோன்றாமல் அப்படியே முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு அழலானான்.

படுக்கப் போகுமுன் அவனை ஒரு தரம் பார்த்து விசாரிக்கலாமென்று அங்கு வந்த பூபேஷ் பதறிக்கொண்டு அருகில் வந்தான்.

''என்னடா முத்து? ஏன் அழுவறே?''

''பூபேஷ்... பூபேஷ்...'' தன்னைச் சுற்றி அணைத்த நண்பனின் கரங்களுக்குள் புதுங்கிக்கொண்டான்.

''என்னடா? ஹோம்ஸிக்கா யிருக்குதா? கொஞ்சம் கொஞ்சமாச் சரியாயிடும்டா முத்து. இதுக்குப் போய் அழுவாங்களா? நாளைக்கு ஊருக்கு ஒரு லெட்டர் எழுது, மனசுக்குக் கொஞ்சம் சந்தோஷமா இருக்கும்.''

''பூபேஷ்... என்னை... 'ராக்' செய்ய மாட்டாங்களே?''

''சேசே, அதெல்லாம் இல்லேன்னுதான் முந்தியே சொன்னேனேடா!''

''அப்படி யாராச்சும் செய்ய வந்தாலும் நீ காப்பாத்துவேயில்ல?''

''ஓ, கட்டாயம். கண்ணைத் துடைச்சுக்கிட்டுப் படுக்கையைப் போடு. உன் 'ரூம்-மேட்' வந்தால் நீ அழறதைப் பார்த்து என்ன நினைப்பான்?''

''நான் உன் ரூமில் படுத்துக்கக் கூடாதா பூபேஷ்?''

''ஊஹூம். எனக்குத் தனி ரூம். உன் கூட உன் மாதிரியே இன்னொரு புதுப் பையன் இந்த ரூமில் இருப்பான். ஒண்ணும் பயப்படாதே.''

மறுநாள் முத்தையா சிறிது தெம்பாக இருந்தான். வகுப்புகள் நடந்தன. முதல் முதலாக ஒரு கல்லூரி மாணவன் என்ற ஹோதாவில் பெற்றோருக்குக் கடிதம் எழுதிய போது உற்சாகமாகவே இருந்தது.

''எனக்கு இங்கே பிடித்திருக்கிறது. 'ராகிங்' இல்லை. இது நல்ல பெரிய காலேஜ். பூபேஷ் ரொம்ப ஆதரவாய் இருக்கிறான். இன்று கால்குலஸ் பாடம் எடுத்த லெக்சரர் நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறார். 'ராகிங்' அடியோடு இல்லை. இங்குள்ள ட்யூட்டருக்கு என் பேரேதான்.....''

இரவு உணவுக்குப்பின் ஹாஸ்டலில் அறைக்குத் திரும்பினான். சிறிது நேரமாகியது. அறைக் கூட்டாளி சட்டையைத் தலை மீதிருந்து இழுத்து விட்டுக் கொண்டே உள்ளே வந்தான். ''உன்னைக் கூப்பிடறாங்க'' என்றான் முத்தையாவிடம்.

''யாரு? எங்கே?''

''சீனியர் ஸ்டூடண்ட்ஸ். டிமே விஸிட்டர்ஸ் ரூம்ல இருக்காங்க. அங்கே உன்னை வரச் சொன்னாங்க, உடனே.''

உள்ளே லேசாய் ஏதோ அதிர்ந்தது.

''எ....எதுக்கு?''

''வேறெதுக்கு! 'ராகிங்' தான்!''

முத்தையா கணநேரம் உறைந்துபோனான்.

''உடனே போ, அப்புறம் எங்கேயானும் கோச்சுக்கப் போறாங்க!'' என்று அம் மாணவன் சிரித்தான்.

அவன் சிரிப்பையோ, முகத்தில் தெளிவையோ முத்தையா கவனிக்கவில்லை. 'ராகிங்' என்ற சொல் ஒன்றே நெருப்புத் துண்டாய் உணர்வில் ஒட்டிக் கொண்டது. 'ராகிங்... அதுதான் இங்கே கிடையாது என்றானே பூபேஷ்? பொய்யா சொன்னான்?

இந்த மாணவன் சட்டையை அணிந்து கொண்டே வந்தானே? நிர்வாணமாக்கி யிருந்தார்களா அவனை? இன்னும் என்னென்ன செய்தார்கள்? தன்னை என்னென்ன செய்வார்கள்? ஐயோ, முருகா!...



''என்னம்மா, கண்ணு, எழுந்து வர இத்தனை நேரமா?''

அவனை அழைத்துப் போகத் தலைபாலே வந்துவிட்டானே! உடல் முழுவதும் கணத்தில் வேர்வைக் கடலாயிற்று.

பார்வையாளர் அறையில் பூபேஷ் மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான்: ''முத்துவுக்கு ரொம்பப் பயந்த சுபாவம். 'ராகிங்'னு சொன்னாலே நடுங்குவான், பாவம், அவனை விட்டுவிடக் கூடாதா?''

''இந்த காலேஜ்லதான் 'ராகிங்' கூடாதே பூபேஷ்! சும்மா ஒரு இதுக்கு லேட்டா தமாஷ் பண்ணலாம்னு இவர்னு தோணிச்சு, அவ்வளவுதானே? இப்போ அவன் ரூம்-மேட்'டைச் சும்மா சட்டையைக் கழட்டிட்டு ஒரு பாட்டுப் பாடச் சொல்லிட்டு அனுப்பிடலியா? அந்த மாதிரிதான். உன் சிஷ்யப் பையனை வேணும்னு சட்டையைக் கூடக் கழட்டச் சொல்லலே. போதுமா? அவன் பயப்படாமல் இருக்கத்தானே நீயும் கூடவே இருக்கே?''

''இருந்தாலும் அவனுக்கு இதை விளக்கிச் சொல்ல நீங்க என்னை அனுமதிச்சிருக்கலாம்.''

''அப்புறம் தமாஷ் ஏது?''

ஒரு கைதிபோல் தன்னை உணர்ந்து தலைபாலோடு அங்கு வந்து சேர்ந்த முத்தையாவின் முகம் வெளிறிப் போயிருந்தது. ஐயோம்மா, இத்தனை பேரா இங்கே? கல்லூரித் தடை உத்தரவை மீறித்தான் இவர்கள் இப்படிச் செய்கிறார்களோ ஒரு வேளை? என்ன அக்கிரமம்! உடனே பூபேஷை அழைத்து இதை நிறுத்த வேண்டும்... இதென்ன பயங்கரம்! பூபேஷுமல்லவா இங்கு இருக்கிறான்! சீனியர் ஸ்டூடண்ட் என்ற முறையில், தன்னைக் கொடுமைப்படுத்தப் போகும் கூட்டத்தில் அவனும்! 'ராகிங்' இல்லை என்றவன் நான் உன்னைக் காப்பாற்றுவேன் என்றவன்— கடைசியில் அவனே இப்படி! தன்னைப் பார்த்துப் புன்னகை வேறு செய்கிறானே ராஸ்கல். மோசக்காரன்!

''ஹாய் 'கிட்', என்ன அப்படிப் பார்க்கறே? முன்னே பின்னே மனுஷங்களையே பார்த்ததில்லையா நீ?'' தாக்கும் முதல் குரல்.

அவன் இதயம் பந்தயக் குதிரையாயிற்று. முருகா, அவனை என்ன செய்யப் போகிறார்கள்? அவன் கேள்விப்பட்டிருந்த குரூர விளையாட்டுகள்... அம்மணமாக்கி நடனமாடச் சொல்வார்களோ? செருப்பை நீரில் ஊறவைத்துத் தின்னச் சொல்லுவார்களோ? ஃப்ளஷ் அவுட்டுக்குள் தலையை அமுக்குவார்களோ?

''அப்படி முழிக்காதேம்மா கண்ணு ரெண்டும் பிதுங்கி விழுந்துடப் போகுது! ஓகே. 'ஒருதலை ராகம்' படம் பார்த்திருக்கிறயா? எங்கே. அதிலேருந்து ஒரு பாட்டுப் பாடு பார்க்கலாம்?''

இது தொடக்கம். இதன் பின்? அவன் வாய் உலர்ந்து போயிற்று. வேட்டைக்காரர்கள் சூழ்ந்துகொண்ட மிருகத்தின் கண்கள் கலவரத்துடன் முகம் முகமாய்க் கொத்தின.

'இது ஒண்ணுமில்லே, பயப்படாதே' என்ற செய்தியைப் புன்னகையில் உணர்த்த முயன்றவாறு பூபேஷ் ''பாடு முத்து!'' என்றான்.

பூபேஷின் குரல்! பூபேஷின் புன்னகை! அத்தனை பேரில் இவரென்று அந்த ஒரு முகம்தான் முத்தையா பார்வையில் தெரிந்தது. அவன் பீதியும் கிலேசமும் வெறியாய் மாறின.

''டே துரோகி!''

அப்படியே பூபேஷின் கழுத்தை நோக்கிப் பாய்ந்தான். மற்றவர்கள் அவன் செயலைத் தடுக்க அவனைத் தொட்டு இழுத்தார்கள்.

இத்தனை கைகள் அவன்மேல்!


அப்படியே உயிரோடு பிய்த்துப் போட்டு விடுவார்களா? ''என்னை விடுங்க, விடுங்க... சூ கானிபல்ஸ்!''

மிருக அலறலாய்க் கூவியவன் மயங்கி விழுந்தான். நினைவு திரும்பியபோது அவன் முத்தையாவாக இல்லை.

விவேகானந்தா கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் புரொபஸர் ஏ. சீனிவாசராகவன், பரமஹம்ஸர் தினத்தையொட்டி mysticism பற்றியும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றியும் ஒரு பிரசங்கம் செய்தார். எளிதாகப் புரியக்கூடியதாக இல்லை. தலைமை வகித்த ராஜாஜி, வழக்கம்போல் பக்தியின் அவசியத்தைப் பற்றியும் ராமகிருஷ்ண உபநிஷத்துக்களுடன் தெளிவாக, அவருக்கு கைவந்த நகைச்சுவையுடன் பேசிவிட்டு ''பேராசிரியர் சிரமப்பட்டு தனக்கும் புரியாமல், மற்றவர்களுக்கும் புரியாமல் மிகுந்த பிரயாசையுடன் தயாரித்த பிரசங்கத்தை மறந்துவிடலாம்'' என்றார். ஸ்ரீ சீனிவாச ராகவனுடைய மாணவர்கள் பலர் என்னைப் போல் ராஜாஜி பக்தர்களாக இருந்தாலும் அவருடைய நையாண்டி சற்று அதிகமாக இருந்ததால் புண்பட்டவர்களாய் இரண்டு நாட்கள் கழித்துப் பேராசிரியரிடம் சென்று எங்கள் கண்டனத்தை ராஜாஜிக்குத் தெரிவிக்கப் போகிறோம் என்றோம். ஸ்ரீ சீனிவாசராகவன் கையால் சமிக்ஞை செய்து புன்முறுவலுடன் எழுந்து சென்றார். அவர் மேலும் உற்சாகத்துடன் திரும்பி வருவது எங்கள் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தது. பேராசிரியர் எங்களிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அது ராஜாஜி எழுதியது. தான் அளவு மீறி நையாண்டி செய்து விட்டதாயும் பத்திரிகைகள் அதை இருட்டடிப்புச் செய்தது பற்றி மகிழ்வதாகவும் எழுதியிருந்தார். இதைச் சற்றும் எதிர்பாராததால் நாங்கள் ஆசிரியர் மகிழ்ச்சியில் பங்கேற்று, ராஜாஜியின் நாகரிகத்தைக் கண்டு மகிழ்ந்து உவகையுடன் திரும்பினோம்.

-கங்காதரன்

அந்த நாள் ஞாபகம்



எளியவரின் இதய புஷ்பம்



✕ துளசி அய்யா வாண்டையார்.

"குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் சரி! எங்கள் கல்லூரியை நாடி வந்தால் சேர்த்துக் கொள்கிறோம்!" என்றார் துளசி அய்யா வாண்டையார். எனக்கு மூச்சுத் திணறியது. 'இப்படியும் ஒரு கல்லூரியா?' என்று பிரமித்தேன்.

"எங்கள் கல்லூரியில் பயின்று பட்டதாரியான ஏழை எளிய விவசாயக் குடும்பத்து இளைஞர்கள் சுற்றுப்புறத்தில் ஏராளமான பேர் உண்டு" என்றார் அவர் தொடர்ந்து. "ஒரு நாட்டின் உண்மையான முன்னேற்றம் அதன் கிராமப் பகுதி மக்களிடையே கல்வி அறிவைப் பெருக்குவதில்தான் உள்ளது என்பது எனது அபிப்பிராயம்!" என்று மேலும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார் தஞ்சாவூர் பூண்டி ஸ்ரீ புஷ்பம் கல்லூரியின் காரியதரிசி திரு துளசி அய்யா வாண்டையார். இக்கல்லூரி தனது வெள்ளி விழா ஆண்டில் நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

1956ம் ஆண்டு திரு வீரய்யா வாண்டையார் அவர்களின் பெரு முயற்சியால் தோன்றின இக்கல்லூரி தற்போது சுமார் 600 ஏக்கருக்கும் மேலான நிலப் பரப்பில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு தனது கல்விப் பணியைச் செய்து வருகிறது. சுமார் 700 மாணவர்கள் தங்க விடுதி வசதி உண்டு. கிட்டத்தட்ட தொள்ளாயிரம் சதவீத மாணவர்கள் உதவித் தொகை பெற்றுப் படிக்க வசதியாகப் பல மான்யங்கள் வழங்கப்பட்டுள்ளன. முப்பதாயிரத்துக்குமேற்பட்ட புத்தகங்களைக்கொண்ட சிறப்பான நூலகத்தையும் உருவாக்கியுள்ளார்கள். இதனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு இக்கல்லூரி வரப்பிரசாதம்.

"எங்கள் கல்லூரியின் நிர்வாகி திரு வாண்டையார் குறிப்பிட்ட அரசியல் கட்சியில் ஈடுபாடு கொண்டவர்தான். ஆனால் இக்கல்லூரிக்கும் அரசியலுக்கும் சம்பந்தமே கிடையாது. ஒரு குடும்பமாக நாங்கள் இங்கு வாழ்கிறோம்" என்று உணர்ச்சி வசப்பட்டுக் குறிப்பிட்டார் மாணவர் தலைவர் தினகரன்.

"குறைவான மதிப் பெண்களைப்பெற்ற மாணவர்களை நாங்கள் அனுமதித்துக்கொண்டாலும் தேர்வு முடிவுகளில் சிறப்பான வெற்றியைப் பெறும் அளவுக்கு ஆசிரியர்களின் பணி இங்குள்ளது. விளையாட்டுத்துறை என்று எடுத்துக்கொண்டாலும் திருச்சி மாவட்டத்திலேயே எங்கள் கல்லூரி அளவுக்கு வசதியும் ஊக்கமும் வேறு எந்தக் கல்லூரிக்கும் இருக்க முடியாது" என்று குறிப்பிட்டார் கல்லூரியின் முதல்வர் திரு கோவிந்தசாமி.

✕ நடுவில் அமர்ந்திருப்பவர் கல்லூரி முதல்வர். அவருக்கு இருபுறமும் இரு ஆசிரியர்கள். சுற்றிலும் மாணவர் தலைவர்கள்.



பொருள் தெரியாத போராட்டங்கள்

சேகர்பாபு



"ஹைநூன் தாட்டி ஆயிடுச்சு.... இன்னும் ஃபைவ் மினிட்ஸ்!" என்றான் பாலு. ஒன்பது முப்பத்தைந்து வரைக்கும் பார்ப்பார்கள். அதற்குள் புரபசர் பாலசுந்தரம் வராமற் போவாரானால் உடனே வகுப்பை விட்டு வெளிநடப்பு. ஆரம்பத்தில் இதெல்லாம் எனக்கு ரொம்ப வித்தியாசமானதாய், உடன்பாடில்லாததாய் இருந்தது. இப்போது உடன்பாடில்லாவிட்டாலும் பழகிப்போய் விட்டது.

அதோ, பாலசுந்தரம் தன் குறுந்தாடியைத் தடவிக்கொண்டே வந்து விட்டார். எல்லோரும் ஏமாற்றத்தோடு உட்கார்ந்திருந்தார்கள். "ம்... ஒரு நாள் விடமாட்டானே!" என்று சத்தமாகவே முணு முணுத்தான் ஒருவன். பாலசுந்தரம் வந்த சில நிமிஷங்களிலேயே "தி ஐடியா பிஹைன்ட் டிப்ரிஸியேஷன் ஈஸ்..." என்று ஆரம்பித்து விட்டார். நான் உன்னிப்பாய்க் கவனிக்க ஆரம்பித்தேன்.

கொஞ்ச நேரத்திலேயே பக்கத்திலிருக்கும் பாலு தன் தொண தொணப்பை ஆரம்பித்து விட்டான். மெல்ல நிமிண்ட ஆரம்பித்தான். 'ஸ்....' என்று அடக்கிவிட்டுத் திரும்பவும் நான் 'டிப்ரிஷியேஷனில்' கவனம் செலுத்தினேன். சற்று அழுத்தமாகவே கிள்ளினான். எரிச்சல் தாளாமல் திரும்பிப் பார்த்து "என்னடா?" என்றேன். பாலு வெளியே நடைபாதையைச் சுட்டிக் காட்டினான்.

"அங்கே பார் யூனியன் லீடர் வரான்! சேர்மன் சுந்தர்ராஜ்!" என்றான் சன்னமான குரலில்.

"வரட்டும்; அதுக்கென்ன இப்போ?"

"டிப்ரிஸியேஷன் ஈஸ் எ க்ராஜுவல் ரிடக்ஷன் ஆஃப் அன் அஸெட்..."

"இடியட்! சேர்மனும் செக்ரட்டரியும் வராங்கன்னு இன்னிக்கு ஸ்ட்ரைக்குன்னு அர்த்தம்!" என்றான் குனிந்து.

எனக்குப் புரியவில்லை. இரண்டுமே. டிப்ரிஸியேஷனும் புரியவில்லை; சேர்மன் தூரத்தில் வருவதற்கும் இங்கே ஸ்ட்ரைக் தொடங்குவதற்கும் என்ன சம்பந்தம் என்றும் புரியவில்லை.

"யூனியன் லீடர் வந்தால் வரட்டுமே! அதற்கும் ஸ்ட்ரைக் தொடங்குவதற்கும் என்ன?" என்று மெதுவாகக் கேட்டேன். பாலு என்னைப் பூச்சியைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு, "இல்லைன்னு சேர்மன் ஏன்டா இங்கேவரான்? இன்னிக்கு நிச்சயமாய் ஸ்ட்ரைக்! மத்தியானம் எஃப்.ஐ. டெஸ்ட் கான்சல்!" என்றான் திட்டவட்டமாக. பின்னாலிருந்து மணியின் குரல் "வாரே வா! எஃப். ஐ. டெஸ்ட் போச்சு!" என்றது.

மெள்ள விஷயம் வகுப்பில் பரவ ஆரம்பித்தது. எனக்குத் திரும்பவும் ஆச்சரியமாய் இருந்தது. எப்படி, எப்படித்தீர்மானித்தார்கள்? எந்த விதமான தேவையுமில்லாத போது எதை வைத்து இன்றைக்கு ஸ்ட்ரைக் என்று தீர்மானம் செய்தார்கள்?

பாலசுந்தரம், "...ஐடியா பிஹைன்ட் கிசர்வ் ஃபண்ட்..." என்று தொடர்ந்து லெக்சரில் லயித்தபோது ஒருவன் எழுந்து "சார்... வாட் ஈஸ் சீக்ரெட் ரிஸர்வ்?" என்று கேட்கச் சட்டென்று பதில் சொல்ல முடியாத பாலசுந்தரம், "நோ! ஐ டோன்ட் டெல் எனிதிங் அபவுட் சீக்ரெட் ரிஸர்வ், ஸின்ஸ் இட் ஈஸ் எ சீக்ரெட் ரிஸர்வ்!" என்றதுடன் வகுப்பு முழுவதும் உற்சாகமாகச் சிரித்தார்கள். சிரித்து முடித்தபோது சேர்மனும் செக்ரட்டரியும் இன்னும் ஓரிரண்டு பேரும் உள்ளே நுழைந்தார்கள். வகுப்பு அவர்களை ஆரவாரமாக வரவேற்றது.

"தேர் வில் பி எ மீட்டிங் அட் டென் தர்ட்டி; எல்லோரும் நிச்சயமாய் வந்து விடுங்கள்!" என்று சொல்லிவிட்டு, பாலசுந்தரத்திடம் நன்றி கூறிவிட்டு அவர்கள் வெளியேறின பிறகு எல்லோரும் 'ஹோ' என்று கூச்சலிட்டார்கள். பாலசுந்தரம் கூடச் சும்மா உட்கார்ந்திருந்தார்.



அறிமுக எழுத்தாளர்

நான் சென்னை கிறித்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி. காம் படிக்கும் மாணவன். கதை, கட்டுரை, புதுக் கவிதைகள் எழுதுவதிலும் மேடைப் பேச்சிலும் ஆர்வமும் தன்னம்பிக்கையும் உடையவன். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக 'தேவி' என்கிற கையெழுத்துப் பத்திரிகையை நண்பர் ப.ராசேந்திரனின் உதவியுடன் நடத்தி வருகிறேன். மேலே குறிப்பிட்ட நான்கு துறைகளிலும் வெகுவாக முன்னேற வேண்டும் என்ற பேராசையுடன் இயங்கி வருகிறேன். 'சேகர்பாபு' என்கிற பெயரில் எல்லாப் பத்திரிகைகளிலும் என் படைப்புக்களைப் படைக்க ஆசைப்படுகிற என் இயற்பெயர் வி.எஸ். சேகர். முதல் கதை கல்கியில் பிரசுரமாவதில் அளவற்ற ஆனந்தம்.

வி. எஸ். சேகர்

எல்லோரும் அன்றைய பிற்பகலை எவ்வாறு கழிப்பதென்று பத்து பதினைந்து நிமிடங்கள் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். பத்தரைக்கு முன்னாலேயே வகுப்பு காலி யாகிப்போயிற்று. நானும் அவளோடு மீட் டிங் அட்டெண்ட் பண்ணப் புறப்பட்டேன்.

மைதானம் முழுவதும் கும்பல் கும்பலாய்க் கலர் கலராய் நின்றிருந்தார்கள். சஸ்ட் மென் கலரில் பட்டாம்பூச்சிகள் நிறையப் பறப்பது போல்கிளுகிளுப்பாயிருந்தது. கண் ணைப் பறிக்கிற வண்ணத்தில் வண்ண வண்ண மாய்க் காட்சியளிக்கிற உற்சாகமான யுவ திகள் இளைஞர்கள் அங்கே தெரிந்தார்கள். திரிந்தார்கள். நான் ஒவ்வொரு குழுவாய்த் தாண்டி முன்னாலே போய்விட முயன்றேன்.

''மிஸ்டர் தான் இன்றைக்கு அலைன் மெண்ட் சப்மிட் பண்ணச்சொல்லியிருந்தார். நல்ல வேளையாக ஸ்ட்ரைக்காப்பாற்றியது'' என்றாள் ஒருத்தி.

நான் நின்று கவனித்தேன்.


''ஓ! தேங்க் காட்! எனக்கு அலைன்மன்ட் பத்திக்கூடக் கவலையில்லே... இன்னிக்கு கம் யூனிட்டி ஸர்வீஸ் கட் ஆச்சே அதைச் சொல்லு! மண்வெட்டியைத் தூக்கிண்டு அலையற வேலை மிச்சம்!'' என்றான் எதிரே நின்றவன்.

''அப்கோர்ஸ்...'' என்று சொல்லிச் சிமெண்ட் தரையில் சில்லறை வீசினாற்போல் சிரித்தாள் அவள்.

செகண்ட் இயர் போதும்! அங்கே இருந்தால் விஷயம் தெரியும் என்று சற்று நேரம் நின்றேன். கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு பெண் இவர்களைப் பார்த்து ஓடிவந்தாள்.

''ஹலோ! ஆஃப்டர் நூன். எந்தப் பிக்சர் போகலாம்னு ப்ளான் போட்டீங்களா?'' என்று கேட்டவள் தானாகவே ''என் கஸின் ஒருத்தன் என்னைப் பிக்சருக்குக் கூப்பிட்டிருக்கான். இன் னைக்கு நல்ல சான்ஸ்! ஸ்கார்ச்சி!'' என்றாள். முதலில் பேசினவள் ''ஆமா, இன்னைக்கு என்ன ஸ்ட்ரைக்? வி.டி. காலேஜுல ஸ்டிரைக்கா?'' என்று எனக்குத் தோன்றின அதே சந்தேகத்தைக் கேட்ட போது எனக்குச் சந்தோஷமாய் இருந்தது. ஆனால், ''எந்த ஸ்ட்ரைக்கானால் என்ன? ஏதோ ஸ்ட்ரைக்... இன்னிக்கு ஃப்ரீ! விடு'' என்று மற்றவர்கள் சொன்ன மாத்திரத்தில் அந்தச் சந்தோஷம் தவிடு பொடியாய்ப் போக விடுவிடுவென்று வந்துவிட்டேன்.

மைதானத்துக்கு மத்தியிலிருந்த மேடை யில் சேர்மன் நின்றிருந்தான். பக்கத்தில் மைக்கைப் பிடித்துக் கொண்டு செக்ரட்டரி யும் இன்னும் நாலைந்து புது முகங்களும் இருந்தார்கள். சேர்மன் கையைத் தூக்கி 'டாடா' காட்டினதும் ''ஹேய்......'' என்று வானத்தில் கேட்கிற மாதிரி எல் லோரும் கூச்சலிட்டார்கள். சேர்மன் பேச ஆரம்பித்தான். என்னுடைய காதுகளைக் கூர்மையாக்க முயன்றும் அவனுடைய குரல் எனக்குக் கேட்காமல் போனதற்குக் கார ணம், அவனுடைய குரல் அல்ல. சுற்றி நின்றவர்கள் எழுப்பின கூச்சல். போதாக் குறைக்கு மைக் வேறு மக்கார் செய்தது. ஊமைப் படம் ஒன்றைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தேன். எப்படியாவது அவன் பேச்சைக் கேட்டுவிட வேண்டும் என்று முண்டியடித்து முன்னேற முயன்று பெருந் தோல்வி அடைந்தேன். எனக்குப் பக்கத்தி லிருந்த ஒரு பையன் ''வீ... வான்ட்!'' என்று பலமாகக் கத்தினான். எல்லோருமாய் ''ஆக்ஷன்!'' என்று கூச்சலிட்டபோது தூரத் திலிருந்த கட்டிடங்கள் கூட அதிர்ந்தன.



நாலைந்து முறை ''லிவான்ட்!'' ''ஆக்ஷன்!'' என்று கத்தி ஓய்ந்தார்கள். கொஞ்ச தூரத்தில் ஒரு கர்ண கடூரமான குரல் எல்லாவற்றையும்மீறிக்கொண்டு ''புரொடெஸ்ட்!'' என்று கத்தினபோது இன்னொரு பக்கத்தில் பட்டாசு வெடித்தது. பிறகு கலைய ஆரம்பித்தார்கள்.

மீட்டிங் முடிந்துவிட்டது என்பதைக் கண்டுபிடித்துவிட்டு நான் திரும்பி நடந்தேன். எனக்கு இன்னமும் கூடத் தெளிவில்லாமல் குழப்பமாயிருந்தது. எதற்காக ஸ்ட்ரைக் என்று புரியவில்லை. எஃப். ஐ. டெஸ்ட் நடக்குமா என்று தெரியவில்லை. லைப்ரரியை நோக்கிப் போனபோது ''சேகர்!'' என்று எவனோ கூப்பிட்டான். திரும்பின போது பாலுவும் என்னுடைய ''காங்''கும் தூரத்தில் நிற்க ஓடிப்போனேன்.

''ஹலோ பாலு! வாட் அபவுட் எஃப். ஐ. டெஸ்ட்?'' என்று அவசரமாகக் கேட்டேன். ''நோ டெஸ்ட்! நோ க்ளாஸ்! நோ ப்ராப்ளம்!'' என்று கட்டிக் காட்டினான். ''க்ளாஸ் ரெப்''பைக் கேட்டபோது அவன் அரையும் குறையுமாய்ச் சொன்னான்: ஏதோ வி.டி. காலேஜில் ஸ்ட்ரைக்காம்! அவர்களுக்காக ஒரு நாள் இங்கே டோக்கன் ஸ்ட்ரைக்காம்! இந்தமட்டிலாவது விஷயம் தெரிந்ததே என்று சந்தோஷப் பட்டு ''அப்படெஸ்ட் நிச்சயம் கிடையாது'' என்று திரும்பவும் கேட்டேன். ''எதற்கும் டிபார்ட்மெண்டுக்குப் போய்ப் பார்ப்போம்!'' என்று ஒருத்தன் ஐடியா கொடுக்க, நடக்க ஆரம் பித்தோம்.

பெரிய வாழை இலையொன்றில் கூட்டும் பொரியலும் வைத்த மாதிரி புல்வெளி முழுக்கக் கலர் கலராய் நின்றிருந்தார்கள்.

உற்சாகமான எதிர்பார்ப்புகள்.. எதிர்பாராமல் கிடைத்த நாளில் எங்கே போகலாம் என்று என்னென்னவோ திட்டங்கள்.. ஒரு குழுவைத் தாண்டியபோது அவர்கள் பாடின பாட்டும், ராகமும் சுண்டியிழுத்தன.

அந்த நாள் ஞாபகம்

நான் லயோலா கல்லூரியில் இண்டர்மீடியேட் முதல் வருடம் படிக்கும்போது, பிரின்ஸிபால் ஃபாதர் ஜெரோம் டிஸோஸா என்னைக் கூப்பிட்டனுப்பினார். பேசி முடித்ததும் என் முதுகைத் தட்டி ''நீ நல்ல பையனா?'' (Are you a good boy) என்று கேட்டார் முக மலர்ச்சியோடு. ''ஆமாம் ஃபாதர்'' என்று சொன்னேன். உடனே அவர்'' இல்லே என் அருமைப் பையனே! நீ அப்படிச் சொல்லக் கூடாது. நான் நல்ல பையன் என்பது நீங்கள் நிர்மானிக்க வேண்டும் என்று சொல்லியிருக்க வேண்டும்'' என்றார்.

எவ்வளவு எளிய, ஆனால் அரிய புத்திமதி?

-எஸ். ராமநாதன்



ஒருத்தன் ''சிவ சிவ சம்போ!'' என்று கத்தினான். எல்லோருமாய் ''பிரின்ஸிபாலு அம்போ!'' என்று கூச்சலிட்டார்கள். கொஞ்ச நேரம் அந்தப் பாட்டத்தைப் படித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு இன்னொருத்தன் ''கத்தரிக்கா கள்ளப்பருப்பு கூட்டு!'' என்று கத்த எல்லோரும் சும்மா இருந்தார்கள். அவனுகவே, ''நா வக்கிறேன் பிரின்ஸ் பாலுக்கு வேட்டு!'' என்று சொல்லிக்கொடுத்தான். கொஞ்ச நேரத்தில் அந்தப் பாட்டத்தைப் படித்.....

எனக்கு முதலில் சிரிப்பு வந்தது. இன்னொரு கல்லூரிக்காக நடக்கிற ஸிம்பதி ஸ்ட்ரைக் என்றால் இந்தக் காலேஜ் பிரின்ஸ்பால் ஏன் 'அம்போ' ஆகவேண்டும்? அவருக்கு எதற்காக வேட்டு வைக்க வேண்டும்?

டிபார்ட்மெண்டுக்குப் போனபோது பூட்டு வரவேற்றது. ''இன்னும் என்னடா ப்ரூப் வேணும்?'' என்று தன் கட்சிக்குப் பலம் சேர்த்தான் பாலு. ''சரி, நாளைக்குப் பார்ப்போம்!'' என்று விடை பெற்றுக்கொண்டு ரொம்ப வேகமாக நடக்க ஆரம்பித்தேன்.

''ஹேய் சேகர்!.... மிஸ்டர் சேகர்''! என்று யாரோ கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்து எக்கச்சக்கமாய் அதிர்ச்சி அடைந்தேன். காட்வின் ஒரு நைஜீரிய மாணவன். தொண தொணவென்று கேள்வி கேட்டு உயிரெடுப்பதில் அவனுக்கு நிகர் அவனே தான்.

''ஹலோ!'' என்று அசடு வழிந்தேன். ''கமான்!'' என்று என்னை இழுத்துப்போய் மரத்தடியில் நிற்கவைத்து ''ப்ளீஸ் டெல் மீ த ரீஸன்! ஃபார் தி ஸ்ட்ரைக்!'' என்றான். அப்பாடா! ஏதோ தெரிந்த கேள்வியாகத்தான் கேட்டிருக்கானென்று சந்தோஷப்பட்டு ''இது வி.டி காலேஜ் ஒன்றுக்காக நடக்கிற ஸிம்பதி ஸ்ட்ரைக்!'' என்று விளக்க முயன்றேன். ''எந்தக் கல்லூரி?'' என்று விவரம் கேட்டவுடன் விளக்கம் சொன்னேன்.

''ஓகோ! சரி மிஸ்டர் சேகர்; வி.டி காலேஜுக்காக நடக்கிற ஸிம்பதி ஸ்ட்ரைக்காகவே இருக்கட்டும். அந்தக் கல்லூரி எதற்காக ஸ்ட்ரைக் ஆரம்பித்தார்கள் தெரியுமா? எத்தனை நாள் ஸ்ட்ரைக் நடக்கிறது என்று தெரியுமா? அவர்களுடைய டிமான்ட்ஸ் என்ன என்று தெரியுமா? அவைகள் ரீஸனபிள் டிமான்ட்ஸ்தானா?....''


சற்று நிறுத்தி மூச்சு விட்டுத் தொடர்ந்தான். ''அவைகளில் பிரின்ஸ்பால் எத்தனை டிமான்ட்ஸுக்கு ஒத்துக்கொண்டார் தெரியுமா? அதற்கு அவர் அளித்த பதில்கள் எல்லாம் தெரியுமா? அதெல்லாம் சரிதானா? இத்தனையும் தெரிந்தும்தான் அந்தக் கல்லூரிக்காக ஸிம்பதி ஸ்ட்ரைக் செய்கிறீர்களா?'' என்று ஆங்கிலத்தில் சரமாரியாகப் பொழிந்தான். நான் திக்குமுக்காடினேன்.

''அடப்பாவி! இது ஒரு ஸிம்பதி ஸ்ட்ரைக் என்பதையே ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் கண்டு பிடித்தேன். அதுவே இன்னும் நிறையப்பேருக்குத் தெரியாது. ஏதோ ஸ்ட்ரைக்; ஒரு நாள் லீவு என்று எல்லோரும் ஜாலியாய்ப் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீ இத்தனை போடு போடுகிறாயே?'' என்பதா? என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் திருதிருவென்று விழித்து நின்றேன்.



"ஏன் இப்படித் தேம்பி அழறீங்க?"

"புதுசா காலேஜ்லே சேர்ந்த லெக்சரர்களை ஸ்டூடன்ட்ஸ் 'ராக்கிங்' பண்ணப் போறாங்களாம்!"



"என்னய்யாது! அட்மிஷன்னு சொல்லிட்டுக் கையிலே ஒரு செங்கல்லோடு நிக்கறே?"

"அட்மிஷன்னு 'பில்டிங் பண்ட்' கேப்பீங்களே... நான் ஏழை!.. என்னால முடிஞ்சது இதுதான்!"

காலேஜ் ஜோக்ஸ்!





"அதெப்படி? பெரிய சினிமா ஸ்டாரா இருந்து நடிச்சிக்கிட்டே காலேஜ்லேயும் படிச்சு ராங்க்லே பாஸ் பண்றீங்க?"

"பிரின்ஸ்பால் உள்பட ஸ்டாஃப் எல்லாரும் என் விசிறிங்கதான்; இப்பல்லாம் செமஸ்டராச்சே... அவங்க எல்லாரும் என்னைத் 'தூக்கி' விட்டுடறாங்க!"



"என்னடா, 'ப்ரா' வாங்கறே?"

"நாளைக்கு காலேஜ்லே ஆணழகன் போட்டியாச்சே!"




''இனிமே லவ் லட்டர்ஸ் ப்ராப்ளம இருக்காது மேடம்!''

''தட்ஸ் குட்!''

''ஆமா, நாங்க 'லவ் லட்டர்ஸ் கமிட்டி'..பார்ம் பண்ணி ஸ்டூடண்ட்ஸுக்கு வர்ற லவ் லட்டர்ஸைத் தனியா ஸார்ட் பண்ணி ஸீக்ரட்டா டெஸ்பாச் பண்ணப் போறோம்!''




''நம்ம மாத்ஸ் புரொபஸர் மாதிரி எல்லாரும் இருந்தா எப்படி இருக்கும்! நம்ம ஸ்டூடண்ட்ஸ் எலெக்ஷன்லே... அதோ பாரேன்... டான்ஸ் ஆடி என்னமா கோவாபரேட் பண்றார்!''





''உங்க லட்சணத்துக்கு மாணவர்கள் உங்களை பெஞ்ச் மேலே நிப்பாட்டினாலும் ஆச்சர்யப்படறதுக்கில்லே!...''

''இந்த ஐயா கிட்ட அதுதான் நடக்காது! என்னைப் பெஞ்ச் மேலே நிப்பாட்ட யாராலேயும் முடியாது!... டேபிள் மேலே நிப்பாட்டலாம்!''



''லேப் (Lab-) க்கு கால் இல்லே! சோஷியல் சயன்ஸ் ஸ்டூடண்ட்ஸ் விரட்டி தட்டி ஹெல்ப் பண்றாங்க''


சின்னஞ்சிறு வாஷர் முதல் பிரம்மாண்டமான
சாதனங்கள் வரை தரமான ரப்பர் தயாரிப்புகள்
எங்களது சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் தொழிலகத்தில் இயற்கை மற்றும் செயற்கை ரப்பர் கலவைகளிலிருந்து மிகவும் நுட்பமான இயந்திரங்களைக் கொண்டு வார்த்து தேவைக்குத் தக்க அளவுகளிலும் வடிவங்களிலும் தயாரித்து வழங்குகின்றோம்.
உலகத் தர நிர்ணய ஈடுபாட்டிற்கு இணையாக எங்களது ரிஸர்ச் & டெவலப்மெண்டு ஆய்வு கூடத்தில் தொழில் நுணுக்க வல்லுனர்கள் உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆராய்ச்சிகள் செய்து B.S, A.S.T.M, S.A.E, I.S, தரத்திலுடன் கூடிய உறுப்புகளை அளிக்கிறார்கள்.
எங்களுடைய தயாரிப்புகள் :—
இன்ஜின் மவுண்டிங்குகள்
புஷ்கள்
சஸ்பென்ஷன் புஷ்கள்
'O' ரிங்குகள்
டஸ்ட் கவர்கள்
ஸீலிங் வாஷர்கள்
ஸ்லீவ்கள்
டிரெயின் பிளாப்கள்/பிளக்குகள்.
கெபிடர்ஸ்
ஹெட்லாம்ப் காஸ்கெட்கள்
ஆயில் ஸீல்கள்
பிஸ்டர் ரிங்குகள்
ஸீலிங் ரிங்குகள்
மெட்டல்-டு-ரப்பர் பாண்டட் உறுப்புகள்
பிரேக் சேம்பர் டயா:பரம்கள்
SIRUBBER
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
உசிலம்பட்டி ரோடு, கோச்சடை, மதுரை–625016
தரத்திலும் சேவைச் சிறப்பிலும் TVS நிறுவனத்தின் பாரம்பரியம்
V.S.K-SI-6T

அத்தியாயம் 17

நானும் அவளும், உயிரும் உடம்பும்,
நரம்பும் யாழும், பூவும் மணமும்,
தேனும் இனிப்பும், சிரிப்பும் மகிழ்வும்,
திங்களும் குளிரும், கதிரும் ஒளியும்
— பாரதிதாசன்

கல்யாணி அம்மாளுக்கு வயது 38 தான். ஆனால், காண்பதற்கு வயதில் அதைவிட மிகவும் முதிர்ந்தவராகவே காட்சி அளித்தார். தலையில் ஆங்காங்கே மின்னல் கோடுகள் போன்ற நரை அப்போதே, தெரியத் தொடங்கி விட்டிருந்தது. அவரைப் பார்க்கும் போதே இளவயதில் மிகவும் அழகுள்ளவராக இருந்திருக்க வேண்டும் என்பது உடனே புரியும். அந்த அழகின் அடிச்சுவடுகள் இன்னமும் முழுமையாக மறையவில்லை என்றாலும், முகம் அகாலமான அளவிற்கு வயதான தாகத்தான் தெரிந்தது.


வழக்கமாக அணியும் வெண்ணிற சேலையை உடுத்தியிருந்தார். தலை மயிரைப் படிந்து வாரி இறுக்க இழுத்து கழுத்துக்குப் பின்னால் சிறிய கொண்டையாக முடித்திருந்தார். மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தார். அவருடைய முதன்மையான பொழுது போக்கு - படிப்பது. அதிகமாகப் படித்து படித்துக் கண்கள் பலவீனம் அடைந்து விட்டிருந்தன.

ஒல்லியான உடல். அவரும் உஷாவும் ஒரே உயரம். கஞ்சி போட்ட வெள்ளை நூல் சேலையின் மடிப்புக்கள் நேராக, சீராக இருந்தன. தலையின் ஒரு முடி கூட கலைந்திருக்கவில்லை. ஒரு சன்யாசியாசினியைப் போல் காட்சி தந்தார். ஆனால் தோற்றத்தில் கம்பீரம் நிறைந்திருந்தது.

கல்யாணி அம்மாளின் முகத்தில் எப்போதுமே ஒரே விதமான கண்டிப்பான பாவம் தான் இருக்கும். உஷாவைக் கண்டதும் அந்த முகத்தின் இறுக்கம் சற்றே நீங்கிற்று. கண்களில் லேசான மென்மை தோன்றியது. உஷாவை வரவேற்கும் வகையில் கல்யாணி அம்மா புன்னகைத்தார்.

அந்தப் புன்சிரிப்பைக் கண்டதுமே முன்பு எத்தனையோ முறை தோன்றிய அதே எண்ணம் இப்பொழுதும் உஷாவுக்குச் சட்டென்று மனத்தில் பளிச்சிட்டது. ''அம்மா சிரிக்கும் போது எவ்வளவு அழகாகத் தெரிகிறார்? எத்தனை இளமையாகத் தெரிகிறார்! சிரிக்கும் போது அந்த முகமே முற்றிலும் மாறி விடுகிறதே! அம்மா அடிக்கடி, இன்னும் அதிகமாகச் சிரிக்கக் கூடாதா!''

ஆனால் கல்யாணி அம்மாள் சிரிக்க மாட்டார். யாரும் அவர் வாய் விட்டுச் சிரிக்கும் ஓசையை இதுவரையில் கேட்டிருக்கவில்லை — உஷா உள்பட. அந்தக் கண்டிப்பான முகத்தில் புன்முறுவல் தோன்றுவதே அரிது. அந்தி பூத்தது போன்ற அந்தப் புன்முறு



வல்கள் உஷாவைக் கண்டபோது மட்டுமே தோன்றும். எப்போதாவது கல்யாணி அம்மா புன்முறுவினுல், அந்த உஷாவுக்காகத்தான், அவளுக்காக மட்டுமே.

''அம்மா!''

''வாம்மா, எப்படி இருக்கே?''

''நீங்க எப்படி இருக்கீங்கம்மா?''

''எப்பவும் போலத்தான். ரொம்ப அழகா தெரியறியே, குழந்தை.''

கல்யாணி அம்மாளின் கூர்மையான, புத்தி நுட்பம் நிறைந்த கண்கள், உஷாவை ஏற இறங்க அளந்தன.

'குழந்தை என்றைக்குமே அழகுதான். ஆனுல்... இந்த முறை... ஏதோ பிரத்தியேகமான களையுடன் அவள் அங்கமெல்லாம் மின்னுவது போலத் தெரிகிறது. ஜெகத் ஜோதியாக ஜொலிக்கிருளே! என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கு! என்ன விசேஷமோ? ஏதோ அடக்கிக் கொள்ள முடியாத மகிழ்ச்சியை உள்ளே தேக்கி வைத்திருப்பவள் போலத் தெரிகிருளே!

''என்ன? ஏதாவது விசேஷமான நியூஸ் உண்டா? ரொம்ப உற்சாகமா இருக்கே போலிருக்கு?''

''ஆ?... அதெல்லாம் ஒண்ணுமில்லே. நத்திங் ஸ்பெஷல்.''

''ஏய், உஷா! ஜாக்கிரதை! அம்மாவை ஏய்க்க முடியாது.'' ஏதாவது மானசிக

அந்த நாள் ஞாபகம்!

விவேகானந்தா காமர்ஸ் புரொபஸர் ஆங்கிலத்தில் நல்ல புலமை இருந்தும் மாணவர்களை மகிழ்விப்பதற்காகவே தனக்கே உரிய ''பட்லர் பாணியில்'' பேசிடுவோர். சில உதாரணங்கள்:

மகனைக் காண வகுப்புக்கு வெளியே வந்து நிற்கும் தந்தையைப் பார்த்துவிட்டுச் சம்பந்தப் பட்ட மாணவனிடம் அவர் சொன்னது: "Go and finish off your father and come back room."

பேசிக் கொண்டிருந்த ஒரு மாணவனை வெளியே அனுப்பிய விதம் இது: "Get out of the class otherwise I will ask the Principal to get out of the class."

வெளியே வந்து நிற்கும் மாணவனை உள்ளே அழைக்கும் விதம் இது: "Who its that out standing boy. In come... in come"

பேனுவில் இங்க் இல்லாமல் முழிக்கும் மாணவனுக்கு இந்தக் குற்றச்சாட்டு: "Yes pen no ink yes head no brain what to do!"

கடைசியாகப் பரீட்சைக்குப் பணம் கட்ட அவர் மாணவர்களுக்கு விடுத்த வேண்டு கோள்: "You must 'tie' the exam fees in 'front' of the last date."

மாணவர்களைக் குலுங்க வைத்தே பெயர் பெற்றவர் இவர். -டாக்டர் வெ. சீதாராமன்



எக்ஸ்-ரே சக்தி உண்டா அம்மாவிடம்? என்னைக் கண்டவுடன் எப்படி பளிச்சென்று கேட்டுவிட்டார்! ஏதோ விஷயம் உண்டு என்பதை என்னைப் பார்த்தவுடன் யூகித்து விட்டாரே!

உள்ளே சென்று குளித்து, சிற்றுண்டி சாப் பிட்டு விட்டு, பெட்டிகளைத் திறந்து துணி மணிகளை உள்ளே அடுக்கி வைத்துக் கொண் டிருந்த நேரமெல்லாம் ''சொல்லலாமா? எப்படிச் சொல்வது?'' என்ற எண்ணம் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. கல்லூரியைப் பற்றி, தோழியரைப் பற்றி, மற்ற சகல விஷயங்களைப் பற்றி தாயாரிடம் வளவளவென்று அளவளாவித் தள்ளினுளே ஒழிய, முக்கியமாகச் சொல்ல வேண்டிய விஷயத்தைப் பற்றிப் பேச மட்டும் உஷாவுக்குத் துணிவு வரவில்லை.

இப்படியே இரண்டு நாட்கள் நகர்ந்தன. பல முறை ''அம்மாவிடம் சொல்லிவிட லாம்'' என்று நினைத்தும் கடைசி நிமிஷத் தில் உஷாவுக்கு வாய் அடைத்துப் போய் விட்டது. இதை எப்படிச் சொல்ல ஆரம் பிப்பது என்றே விளங்கவில்லை.

ஆனுல், இப்படியே தாமதித்துக் கொண்டு போனுல் எப்படி? அம்மாவிடம் உண்மையைச் சொல்லித்தானே ஆகவேண்டும்? இன்னும் ஐந்து நாட்கள் கழித்து ராஜீவே நேரில் வந்து விடுவாரே! அவர் சற்றும் பொறுமையே இல்லாத மனிதர். விளையாட்டுக்காக அவளை மிரட்டியது போல், பிரிவின் துயரம் தாங்க மாட்டாது அவர் நிஜமாகவே குறிப் பிட்ட தேதிக்கு முன்பாக வந்து இறங்கி விட் டால்? அப்போது என்ன செய்வது?

ராஜீவ் ஒரு விசித்திரப் பிறவி. அவசரப் பட்டு முன்கூட்டி வந்தாலும் வந்துவிடுவார்! அதற்குள் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லாவிட்டால் ஆபத்து! உடனே சொல்ல வேண்டும். ஆனுல் எப்படி...

ஊருக்குத் திரும்பிய மூன்றும் நாள் அதி காலையில் எழுந்து, பல்தேய்த்து முகத்தை அலம்பி, உஷா வீட்டின் முன் வராந்தாவில் உட்கார்ந்திருந்தாள். வயதான சமையற் காரி தங்கம் அங்கேயே உஷாவுக்குக் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். மேஜையின் மீது காப்பியை வைத்துவிட்டுத் தங்கம்உள்ளே சமையற்கட்டுக்குச் சென்று விட்டாள்.

தம்ளரை உஷா கையில் எடுத்து உதடு களின் அருகே கொண்டுபோனுள். சாதாரண மாக, உஷாவுக்குக் காப்பி என்றுல் உயிர். அதிலும், தங்கம் போடும் ஸ்பெஷல் காப் பியை நினைத்து நினைத்து ஹாஸ்டலில் ஏங்கு வாள். ஆனுல், ஏனே, இன்று அந்த காப்பி யின் நறுமணமே அவள் வயிற்றைக் குமட்டி யது. அவளால் ஒரு சொட்டுக்கூட விழுங்க முடியவில்லை. திடீரென்று வயிற்றைப் பிரட்டியது.

அவசரமாகத் தம்ளரை மேஜையின் மீது வைத்துவிட்டு உஷா தனது தனி அறையினுள் இருந்த அட்டேச்ட் பாத்ரூமுக்கு வேகமாக ஓடினுள்,

சரியான நேரத்துக்குள் தான் போய் வாஷ் பேஸினிடம் சேர்ந்தாள். ஏதோ வலிப்பு உண்டானது போல், வயிற்றில் ஏற்பட்ட

இழுப்புகளால் அவள் உடல் முழுதுமே இரண்டாக மடிந்து போக, வாஷ்பேஸின் மீது குனிந்து திரும்பத் திரும்ப வாந்தி எடுத்தாள்.

இழுப்புகள் ஓய்ந்தன. வாந்தி நின்றது. அதற்குள் வியர்வையால் உஷாவின் முகமெல்லாம் நனைந்து போயிருந்தது. குழாயைத் திறந்துவிட்டு வாஷ் பேஸினைச் சுத்தப்படுத்தினாள். வாயை நன்றாகக் கொப்பளித்துவிட்டு, தண்ணீரை முகத்தின் மீது தெளித்துக் கொண்டாள். தண்ணீரின் குளிர்ச்சி அவளுக்குச் சற்றே தெம்பூட்டுவதாக இருந்தது.

வாஷ் பேஸின் பக்கத்தில் ஒரு ஸ்டேண்டில் டவல் தொங்கியது. அதை எடுக்கக் கையை நீட்டி உஷா திரும்பினாள் - அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

பாத்ரூம் கதவின் அருகே கல்யாணி நின்று கொண்டிருந்தாள். அவள் கண்கள் கத்தி முனைகளைப் போல் உஷாவைத் துளைத்துவிடும் ரீதியில் நோக்கின.

உஷா திக்கு முக்காடிப் போனாள். அம்மா எப்போது வந்தார்? எத்தனை நேரமாக கதவின் அருகே நின்று கொண்டிருந்தார்? கல்யாணி அங்கே வந்த கால் நடை ஓசையே கேட்கவில்லையே?

டவலை எடுத்து உஷா தனது முகத்தை ஒற்றிக் கொண்டாள். அறைக்குள் நுழைவதற்குக் கல்யாணியைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. மௌனமாகக் கல்யாணி அவளுக்கு வழி விட்டாள்.

சோர்வுடன் உஷா கட்டிலின் மீது உட்கார்ந்தாள்.

''ஓ நோ! எல்லாமே தவறான முறையில் போய்க் கொண்டிருக்கிறதே! என் ரகசியத்தை அம்மா இந்த விதத்திலா அறிய வேண்டும்? அய்யோ! இத்தனை நாட்கள் அனாவசியமாகத் தாமதிக்காமல் வந்தவுடனே தானே அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லியிருந்தால், இப்போது இந்தச் சங்கடமான நிலைமையை எதிர் நோக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காதே!''

காலதாமதமாக இப்பொழுது வருத்தப்பட்டு என்ன பயன்? வெடிக்கப் போகும் பூகம்பத்தைச் சமாளிக்க உஷா தன்னைத் தானே மானசீகமாக ஆயத்தப் படுத்திக் கொள்ள முயன்றாள்.

நீடித்துக் கொண்டே போன மௌனத்தை முதலில் கலைத்தது கல்யாணி.

''பேசாமலே உட்கார்ந்திருந்தா என்ன அர்த்தம்!''

அம்மாவின் குரலில் எத்தனை கடுமை!

உஷா ஒன்றும் சொல்லவில்லை.

''பதில் சொல்லு!'' அம்மாவின் குரலில் கடுமை அதிகரித்துக் கொண்டே போயிற்று.

''வாந்தி வந்தது.''

''அதை நானும் பார்த்தேன்! சாதாரண வாந்தியா, இல்லே மசக்கையினாலே வந்ததா? இது மார்னிங் ஸிக்னெஸ் தானே?'' கல்யாணியின் குரல் சாட்டையடி போல ஒலித்தது.

''அம்மா, ப்ளீஸ்! இதை ஒரு பெரிய விவகாரம் ஆக்க வேண்டாம். தானே சொல்லலாம்னு தான் இருந்தேன். நான் ஊருக்கு வந்த உடனேயே சொல்லாமே இவ்வளவு தூரம் தள்ளிப் போட்டது என் தவறு! அம்மா, என்னை நம்புங்க. நான் உங்கிட்டே இருந்து எதையும் மறைக்கணும்னு நினைக்கலே.''

''எதை மறைக்க நினைக்கலே? முதல்லே இதுக்குப் பதில் சொல்லு. கர்ப்பமா இருக்கியா?''

''அம்மா..... நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையா கே........''

''கர்ப்பமா இருக்கியா?''

நிதானத்தோடு, பார்வையில் தெளிவோடு, சற்றே எதிர்க்கும் தன்மையோடு உஷா கல்யாணியை தலை நிமிர்ந்து நோக்கினாள்.

''ஆமாம்.'' அவ்வளவேதான். எளிமையான ஒரே வார்த்தையில் உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டாள்.

''என்ன! அடி.... அடிப் பாவி!'' கல்யாணிக்கு ஆத்திரம் தாளவில்லை. ''என்ன நெஞ்சழுத்தம்மா உனக்கு! இவ்வளவு தைரியமா, இவ்வளவு சர்வ சாதாரணமா ஆமாம்னு சொல்றியா! சே! உனக்கு வெட்கமே இடையாதா?''

''இல்லேம்மா, என்னைப் பொறுத்தவரைக்கும் இதிலே வெட்கப்படறதுக்கு எதுவுமே இல்லேன்னுதான் நினைக்கிறேன். என் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான ஒரு மனிதரைச் சந்தித்தேன். அவரோட பழகினேன். அவரும் என் மேலே அளவு கடந்த அன்பும் மதிப்பும் வச்சிருக்கார். என்னை உடனே கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறார். என் கூடவே ஊருக்கு வந்து அவரே உங்க அனுமதியைக் கேட்கிறதாகச் சொன்னார். நான் தான் அவரைத் தடுத்தேன். ஒரு வாரம் கழிச்சு வாங்கன்னு சொன்னேன். இதுக்காகத்தாம்மா

அந்த நாள் ஞாபகம்



எங்கள் கணித விரிவுரையாளர் மிகவும் வேகமாகப் பாடம் நடத்தும் சுபாவமுடையவர். ஆதலால் புரிந்துகொள்வது சிறிது கடினமாக இருக்கும். மேலும் ஒவ்வொரு Step நடத்தும்போதும் Right girls... Right girls (ஓ.கே.என்பதற்குப் பதில், புரிந்ததா? என்னும் பாணியில்) என்று கேட்பார். ஒரு நாள் ஒரு கணக்கை வேகமாக ரைட்... ரைட்... (Right) என்று கூறிக்கொண்டே நடத்தும்போது ஒரு மாணவி பொறுமையின் எல்லையைக் கடந்து 'Hold on' என்று கத்தியதும் நாங்கள் எல்லோரும் சிரித்துவிட்டோம்.

-குமாரி ஷ்யாமளா

முதல்லே நானே உங்ககிட்ட எல்லாத்தையும் விவரமா, தனியா சொல்லணும்னு...''

''ஆஹா! அம்மா மேலே என்ன பக்தி! என்ன கருணை! இதுக்கு நான் நன்றி சொல்லணுமா?'' கல்யாணி பரிகாசமான வார்த்தைகளால் சவுக்கடி கொடுத்தாள். ''என் அனுமதி இல்லாம இவ்வளவு தூரத்துக்குப் போன பிறகு, இனிமே என்னைக் கேட்டு என்ன ஆகவேண்டியிருக்கு? என்னிடம் சொல்லாமலே கல்யாணத்தையும் ஒரு வழியா முடிச்சிருக்கலாமே? இப்ப எதுக்காக இத்தனை சிரமம் எடுத்துக்கிட்டு ஊருக்கு வந்தே?''

''அம்மா, ப்ளீஸ்! இதை ஒரு மெலோட்ராமா ஆக்காதீங்க! அம்மா, நான் செஞ்சது தப்புதான். ஒத்துக்கறேன். நான் நடந்துக்கிட்ட விதம் சரியில்லேதான். ஆனா... அம்மா... நான் வேணும்னு திட்டம் போட்டு இப்படி நடந்துக்கல்லே.... அது எப்படியோ நடந்து போச்சு....'' என்றான் உஷா.

(தொடரும்)



முதல்வர் திரு ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுடன் கல்லூரி மாணவர் தலைவர்கள்

மாயூரத்தின் பெருமை

அன்பநாதபுரம் வகையரு அறத்துறைக் கல்லூரியின் (ஏ. வி. சி. காலேஜ்) வெள்ளி விழா ஆண்டு இது.

மாயூரத்தில் 1955ம் ஆண்டு சுமார் 120 மாணவர்களுடன் ஏ. வி. வி. அறக்கட்டளையால் தொடங்கப்பட்ட இக்கல்லூரி இன்று ஆல விருட்சமாய் வளர்ந்து சுமார் 1300 மாணவர்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு இயங்குகிறது.


கல்லூரி ஆசிரியர்கள் நூறு பேர்களில் 27 பேர்கள் M. Philosophyயும் மூன்று பேர் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றுள்ளனர்.

''பட்டப் படிப்புக்காக 'Wild life Biology என்ற பாடப் பிரிவைச் சமீபத்தில் சர்வ கலாசாலை அங்கீகரித்தது. அத்துறையை உடனடியாக இங்கு தொடங்கி விட்டோம். இத்துறை கல்விப் பாடம் வேறு எந்தக் கல்லூரியிலும் கிடையாது!'' என்று குறிப்பிட்டார் கல்லூரி முதல்வர் திரு ஆர். பாலசுப்பிரமணியன்.

''போக்குவரத்துத் துறையினர் எங்களுக்கு உடனடி உதவி செய்தாக வேண்டும். மாயூரத்தின் சுற்றுப்புறப் பகுதிக்கே இது தான் ஒரே ஒரு ஆண்கள் கல்லூரி. மாயூரத்திலிருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இக்கல்லூரிக்கு விடப்படும் பஸ்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இதுதான் எங்களது பெரிய குறை'' என்று மாணவர் தலைவர்கள் குறிப்பிட்டனர்.

'ஒரு தலை ராகம்' முழுக்க முழுக்க இக்கல்லூரி சூழ்நிலையில்தான் படமாக்கப்பட்டது. வாடகை ஏதும் கேட்காமல் மின்சாரக் கட்டணம் மட்டுமே கல்லூரி நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர். ஆனால் படம் வெற்றி பெற்றதும் தயாரிப்பாளர் இப்ராஹீம் நன்றிக் கடன் மறக்காமல் மாணவர்களுக்கு வாட்டர்கூலர் அன்பளிப்பாய்க் கொடுத்தார்.

✖ 1979ம் ஆண்டு ஆணழகன் போட்டியில் "மிஸ்டர் திருச்சி" பட்டம் பெற்ற மாணவர் ஆர். சந்தான கிருஷ்ணன்.



டெலிவிஷன் வாங்காதீர்கள்...

ஆம். அவசரப்பட்டு வாங்காதீர்கள். டிவி ஒரு விலை உயர்ந்த பொருள். அதை வாங்குமுன் நீங்கள் விசாரித்து அறிய வேண்டியவை பல. உங்கள் நண்பர்களின் டிவிகளைப் பற்றி கேட்டு அறிந்துகொள்ளுங்கள். மற்ற டிவிகளின் அம்சங்களைப் பற்றியும் அவை செயல்படும் முறை பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில குறிப்புகள் நீங்கள் டிவி வாங்குகையில் உதவும்.

தெளிவான படம்

படக்காட்சிகள் தெளிவாகவும், நடுக்கம் இல்லாமல் நிலையானதாக வும் இருக்கவேண்டும். செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் அல்லது முகத்தில் உள்ள பருக்கள் துல்லியமாக தெரிகிறதா என்று பாருங்கள்.

உன்னதமான ஒலி

நல்ல இசைத்திறனை அளிக்கவல்ல சக்தியான ஒலிபெருக்கி உள்ளதா என அறிந்துகொள்ளுங்கள். ஒலி, சம மான அளவில் 'பாஸ்' மற்றும் 'ட்ரெபிள்' கொண்டு சீரானதாக இருக்க வேண்டும். டிவியுடன் ரெகார்டு ப்ளேயர், டேப் ரெகார்டர் ஏஎம்/எப்எம் (AM/FM) ட்யூனர் முதலியவற்றை இயக்க வசதி உண்டா என அறிந்து கொள்ளுங்கள். முக்கியமாக இவ்வசதி ஜனதா செட்டுகளிலும் உள்ளதா என தெரிந்துகொள்ளவும்.

விற்பனைக்கு பின் பழுது பார்த்தல்

இது நீங்கள் வெகு முக்கியமாக கேட்டு அறிந்துகொள்ள வேண்டிய அம்சமாகும், டிவி பழுதடைந்தால், புகார் செய்தபின் உடனடியாக நட வடிக்கை எடுத்து, அக்கறையுடனும், திறமையுடனும் செயலாற்றுகிறார் களா என அறியவும். இது மட்டு மின்றி டிவிகளைப் பற்றிய கேள்வி களுக்கு 'சர்வீஸ் எஞ்ஜினியர்கள்' சுமுகமாக பதில் கூறுகிறார்களா என தெரிந்துகொள்ளுங்கள்.

மேற்கூறிய குறிப்புகளை கொண்டு ஆராய்ந்து திருப்தி அடைந்த பிறகு நீங்களே எந்த டிவி வாங்குதென முடிவு செய்யவும்.

வேறு கேள்விகள் ஏதேனும் இருப் பின் எங்களுக்கு எழுதவும்.

மக்கள் நலனை முன்னிட்டு,

Solidaire SOLID STATE TV

தயாரிப்பாளர்களான,

ஹை-பீம் எலக்ட்ரானிக்ஸ் பி. லிட்., சென்னை-600 020.

ஸ்தாபனத்தாரால் வெளியிடப்பட்டது.

HE/117B

'வகுப்பு தொடங்கிவிட்டிருக்கும்.

ஓட்டமும் நடையுமாக வகுப்பை நோக்கி விரைந்தான் கண்ணன்.

ஷேக்ஸ்பியர் வகுப்பு. கண்ணனுக்கு மிக மிகப் பிடித்தமான 'அண்டனி அண்ட் கிளி யோபாட்ரா' நாடகம்.

பேராசிரியர் பாஸ்கரன், தனது கம்பீரத் தோற்றத்துடன், இரண்டு கரங்களையும் கோட்டு பாக்கெட்டுகளில் லேசாகச் சொருகிக்கொண்டு, உயர்ந்த மேடையில் போடப் பட்ட மேஜை, நாற்காலிகளில், மேஜைக்கு முன்பாக லேசாக உட்கார்ந்தது போலவும் உட்காராதது போலவும் இருந்துகொண்டு அற்புதமான முக அசைவுகளோடும், நுனி நாக்கில் சரளமாகத் துள்ளி விளையாடும் ஆங்கில உச்சரிப்போடும் அந்த அமர காதலை காவியத்தின் இனிமையான பகுதிகளைத் திரும்பத் திரும்ப, மிக எளிமையான விதத்தில், உள்ளத்தில் போய்த் தைப்பதுபோன்று விளக்கும்போது கண்ணன் ஆழ்ந்துபோய் விடுவான்.

தூறல்

பி.ரங்கநாயகி

நடு நடுவே கண்ணனின் பார்வை மாண வியர் நடுவே ஓர் எழிலார்ந்த ரோஜா மலராய் வீற்றிருக்கும் வீணாவை ஆலிங் கனம் செய்து மீண்டு கொண்டிருக்கும்.

கண்ணன் விரைந்தான்.

வகுப்பு அப்போதுதான் தொடங்கிவிட் டிருந்தது.

உட்கார்ந்ததும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு தனது பார்வையை மாணவியர் பகுதியில் தவழ விட்டான்.

அன்று வீணாவைக் காணோம்.

'Where has thou been my heart?
Doen't thou hear lady?
If from the field I shall return once more
To kiss these lips, I will appear in blood.'

(என் இதயமே எங்கிருக்கிறாய்? நான் கூறுவது கேட்கவில்லையா? போர்க்களத்தி லிருந்து மீண்டு இந்த உதடுகளை முத்தமிட வரும் வாய்ப்புக் கிடைத்தால் ரத்தம் சொட்ட வருவேன்!) — என்று அண்டனி போர்க்களம் புகுமுன் கிளியோபாட்ரா விடம் காதல் கனியக் கூறும் வீர ரசம் மிகுந்த வார்த்தைகளை பாஸ்கரன் விளக்க ஆரம்பித்தார்.

'எங்கே போய்விட்டாய் வீணா? எனது இதயத்தில் குரலெழுப்பி உன்னை நான் தேடுவது உன் காதில் விழவில்லையா?' என்று அண்டனி போல் வீணாவிடம் கதறத் துடித்தது கண்ணனின் மனம்.

வீணாவின் உருவம் அவனுள் முழுமை யாக நிறைந்தது.

—வீணா அவன் மனக் கண்ணில் பாண்டி யாடினாள். அவளைப் பற்றிய நினைவை விலக்கிப் பாடத்தில் கவனத்தைச் செலுத்த கண்ணன் செய்த முயற்சிகள் வீணாயின.

எம். ஏ. ஆங்கில இலக்கியத்தின் முத லாவது ஆண்டு அவன் படிப்பது. அக் கல்லூரியிலேயே பி.ஏ. ஆங்கில இலக்கியம் பயின்று மிகச் சிறப்பான மதிப்பெண்க ளுடன் முதல் வகுப்பில் தேறியிருந்தான்.

வீணா வேறு ஒரு பெண்கள் கல்லூரியில் பி.ஏ. ஆங்கில இலக்கியம் முடித்துவிட்டு, எம். ஏ. பயிலக் கண்ணன் பயிலும் கல் லூரியில் சேர்ந்திருந்தாள்.

கல்லூரி தொடங்கிய ஒரு மாத காலத் துக்குள் அவனை முழுமையாக ஆட் கொண்டுவிட்டிருந்தாள் வீணா.

வீணா கலகப்பாகப் பேசும் சுபாவம் உடையவள். எல்லோரிடமும் பழகுவது போல் கண்ணனிடமும் சகஜமாகப் பழகி னாள். தன்னிடம் பேசும்போது மட்டும் ஒரு தனிப் பிடிப்போடு பேசுவதாகச் சிலசமயங் களில் அவனுக்குத் தோன்றும். எப்படி யாவது அவளுடைய காதலை வென்று, அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொண்டு விடவேண்டும் என்று உள்ளம் ஏங்கியது.

கண்ணனின் மன நிலை அறிந்து அவ னுடைய நண்பன் செந்தில் பல விதங்களில் உதவினான்.

கண்ணனுக்கும் வீணாவுக்கும் இடையே சற்று நெருக்கமான பரிச்சயம் ஏற்பட வாய்ப்புக்களைச் செந்தில் ஏற்படுத்திக் கொடுத்தான்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களின் 'சிறப்பு மிகுந்த வரிகள் கண்ணனுக்கு அத்துப்படி. மேடைப் பேச்சுக்களின்போது மட்டுமின்றி சாதாரண சம்பாஷணைகளின்போது கூட, அவ்வரிகளைச் சரியான இடத்தில் உப யோகிப்பதில் கண்ணனுக்கிருந்த திறமை அவனது கல்லூரியின் பெரும்பாலான மாணவ, மாணவியருக்கும், ஆசிரியர் களுக்கும் தெரியும்.

கண்ணனின் இத்திறமையை வீணா அறிந்துகொள்ளச் செந்தில் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தான்.

ஆசிரியர் வராத ஒரு வகுப்பின் வெற்று நேரத்தில் 'Love, oh it is a Tempest' (காதல்! ஓ அது ஒரு சூறாவளி!) என்ற தலைப்பில் கண்ணனை உரையாற்றச்சொல்லித் தொந்தரவு செய்து செந்தில் அவ்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தான்.

ஷேக்ஸ்பியர் நாடக வரிகள் மட்டுமின்றிப் பல தலைசிறந்த ஆங்கிலக் கவிகளின் கருத் தாழம் கொண்ட வரிகளை மேற்கோளாகக் கொண்டு கண்ணன் அரை மணி உரையாற்றி முடித்ததும் வீணா, தானாக எழுந்து போய்க் கண்ணனை வெகுவாகப் பாராட்டினாள்.

''டேய் செந்தில், நான் மாத்திரம் வீணாவை மணக்க முடிந்தால் நீ செய்யும் உதவிகளுக் காக, பூஜை அறையில் உன் படத்தையும்

வைத்துக்கும்பிடுவேண்டா!' என்று செந்திலைப் போற்றினான் கண்ணன்.

நான்கு நாட்களுக்கு முன்பு செந்தில் இம்மாதிரி இன்னொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தான்.

வீணாவும், அவளது தோழிகள் நால்வரும் 'சங்கராபரணம்' படத்துக்கு ரிசர்வ் செய்து போகப்போவதைத் தெரிந்துகொண்டு அவர்களுக்குத் தெரியாமலேயே அதே காட்சிக்கு, அதே வகுப்புக்கு அவர்களுக்கு அடுத்துள்ள இரண்டு இடங்களைத் தனது நண்பர் ஒருவர் உதவியுடன் ரிசர்வ் செய்து விட்டான்.

விஷயத்தைக் கடைசிவரையில் கண்ணனிடம் கூறவேயில்லை.

தியேட்டருக்குப் போனதும் தான் கண்ணன் புரிந்து கொண்டான்.

நான்கு பெண்களுக்கு அடுத்தபடி கண்ணனை உட்காரவைத்து விட்டு அவனுக்குப் பக்கத்தில் செந்தில் உட்கார்ந்து கொண்டான்.



முதலில் கண்ணனுக்குப் பக்கத்தில் வீணா உட்கார்ந்திருக்கவில்லை. கண்ணனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண் சற்றுக் கூச்சப்படுவதைப்பார்த்து, தான் கண்ணன் பக்கத்தில் போய்அமர்ந்து கொண்டாள்.

கண்ணனுடன் சகஜமாகப் பேசியபடியும், படத்தை விமரிசித்தபடியும், வீணா படம் பார்த்தாள்.

அகஸ்மாத்தாகத் தனது கரம் அவள்மேல் உரசியபோதுகூட வீணா சகஜமாகஇருந்தாள்.

அவளது இந்த அன்னியோன்யம் கண்ணனை ஆகாசத்தில் பறக்கச் செய்தது.

அவனுள் ஆயிரமாயிரம் வண்ணக் கனவுகள்.

Know my hearts
I hope well of tomorrow and will lead you
Where rather I'll expect victorious life'

(எனது இதயத்தை அறிந்துகொள். நாளை பற்றி நல்ல நம்பிக்கைகள் கொண்டு வெற்றி மிகுந்த பாதையில் உன்னைமுன் நடத்திச் செல்வேன்!)

பேராசிரியர் பாஸ்கரனின் கம்பீரக் குரலில் வெளியான அண்டனியின் சொற்கள் கண்ணனைக் கனவுகளினின்று நிஜத்துக்கு மீட்டன.

வீணாவின் நினைவுகளைச் சற்றே ஒதுக்கி விட்டுப் பாடத்தில் கவனத்தைச் செலுத்தலானான்.

மணி அடித்தது.

ஐந்து நிமிட இடைவெளிக்குப் பின் அடுத்த வகுப்பும் பாஸ்கரனின் ஷேக்ஸ்பியர் பாடத்தின் தொடர்ச்சிதான்.

கண்ணனின் முகத்தில் திடீர் பிரகாசம்.

அவசரம் அவசரமாக வீணா வகுப்பினுள் நுழைந்தாள்.

லேசாகத் தலையை ஆட்டி அவளைப் பார்த்துக் கண்ணன் முறுவலித்தான்.

'குட்மார்னிங்' என்று சொல்லியபடி, ஒரு மென்னகையுடன்வீணா அவனை நோக்கி வந்தாள்.

''முதல் பீரியட் கட் போலிருக்கு!'' என்றான்.

''ஆமாம் கண்ணன்.... கிளம்பறச்சே ரொம்பவும் லேட் ஆயிடுத்து. அதோட வர்ர வழிலே கார் வேறே மக்கர்... யூனி வரைத் இட்டுட்டு பஸ்லே வந்தேன்... பாதிக்கு மேலே கிளாஸ் ஆயிடுத்து. உள்ளே வர்றதுக்கு என்னவோ போல் இருந்தது. லைப்ரரியிலே உட்கார்ந்துட்டேன்... சந்தேகம்னு உங்களைக் கேட்டுக்கலாம்னு தைரியம் வேறே...'' என்றாள்.

''இன்னிக்கு ரொம்பவும் இன்ட்ரஸ்டா இருந்தது.... நான்கூட இன்னிக்குன்னு நீங்க லீவு போட்டுட்டீங்களோன்னு நெனைச்சேன்....''

''தேங்க்யூ... உங்க கிட்டே தனியாக்கொஞ்சம் பேசணும்னு நான் நெனைச்சுண்டு இருந்தேன்.... நௌ ஐ ஹேவ் த ஆப்பர்சுனிடி... கண்ணன், ஐ ஆம் கெட்டிங்மேரீட்... ஆகஸ்ட் இருபதாம் தேதி கல்யாணம்... திருச்சிலே நடக்கிறது.... அவர் அமெரிக்காவிலே சர்ஜனா இருக்கார்... கிட்னி டிரான்ஸ்ப்ளான்டேஷன் சர்ஜரிலே அவர் ஸ்பெஷலிஸ்ட் செஞ்சிருக்கார்... திருச்சியிலே திருமணம் ஆனதும் பதினைஞ்சு நாள்லே அவரோட அமெரிக்கா போய் ஒரு மாசம் தங்கிட்டுத் திரும்பிடுவேன். அவரும் ஏதோ மேலே படிக்கப் போறாராம். அதற்குள் நானும் எம்.ஏ. முடிச்சுட்டு அவரோட போய் செட்டில் ஆயிடுவேன்... திருச்சிலே கல்யாணம்கிறதுனாலே, கல்யாணம் முடிந்ததும், சென்னையிலே ஹோட்டல் சோழாவிலே நம்ப காலேஜ் லெக்சரர்ஸ், பிரண்ட்ஸ்காக விருந்து ஏற்பாடு செஞ்சிருக்கேன். விருந்தின்போது புதுமையா, கவியரங்கம், வேறே சில வெரைட்டி புரோக்ராம் ஏற்பாடு செய்யலாம்னு எனக்கு ஆசை. அப்போ, 'ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் காதலும்' என்கிற தலைப்பிலே நீங்க ஒரு லெக்சர் கொடுக்கணும். அன்னிக்கி லெக்சர் செஞ்சது ரொம்பவும் அற்புதமா இருந்தது... மாட்டேன்னு சொல்லாமே எனக்குன்னு நீங்க ஒத்துக்கணும்... ப்ளீஸ்....''

முகத்தில் ஒளி மங்க, இதயத்தில் ஓர் இருள் பரவ, ஒரு கணம் கண்ணன் நிலை தடுமாறினான்.

''என்ன கண்ணன் பதிலையே காணோம்? திருமண இன்விடேஷன்லே உங்க பெயரை இன்க்ளூட் செய்யணும்... ப்ளீஸ் சரின்னு சொல்லுங்க.''

''வீணா, உன்னை மணப்பவன் என்ற முறையில் உன் கல்யாண அழைப்பிதழில் இடம் பெற ஆசைப்பட்டவனிடம், உன் திருமண ரிசப்ஷன் சமயம் 'என்டர்டெய்ன்மென்ட்' அளிப்பவன் என்ற முறையில் பெயரைப் போட வேண்டும் என்று கேட்கிறாயே, இது உனக்கே நன்றாக இருக்கிறதா?'' — என்று கண்ணனின் உள்ளம் தனக்குள் அழுது கொண்டது.

''என்ன கண்ணன்... யோசனை...''

''ஓ.கே.... உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்... அவசியம் வந்து லெக்சர் கொடுக்கிறேன்....'' என்று கண்ணன் சொன்னதும் வீணாவின் முகத்தில் ஒரு நாணப் புன்னகை. கன்னத்தில் குழிவு. உதடுகளில் விரிவு. புருவங்களின் மலர்ச்சி.

'இழந்த சொர்க்கமான' அந்தப் போக்கிஷத்தின் உருவம் அவனைச் சித்திரவதை செய்தது.

''அதோடு இன்னொன்று... கண்ணன்... எப்படியும் இரண்டு மாதம் என்னால் கல்லூரிக்கு வர முடியாது. அப்போது நடக்கும் பாடங்களை நீங்கள்தான் எனக்குச் சொல்லித் தரவேண்டும்....'' என்றாள் வீணா.

தலையாட்டினான்.

''தேங்க்ஸ்...'' என்று சொல்லிக்கொண்டு இன்னொரு புன்னகையை உதிர்த்து வீணா நகர்ந்தாள்.

அவனுடைய வாழ்க்கையில் மிகவும் அன்னியோன்யமான அங்கமாக அவனுள் நிறைந்திருந்த வீணா, இடீரென்று அன்னியமானவளாகத் தோன்றினாள்.

வருப்பு மறுபடியும் கூடியது.

பாஸ்கரன் தொடர்ந்தார்.

Here Iam Antony;

......

I made these wars for Egypt;
and the Queen
Whose heart I thought I had,
for she had mine
Which whilst it was mine, had
annexed unto it.
A million moe, now lost-She has
Packed cards with caesar..."


அந்த நாள் ஞாபகம்

1973ம் ஆண்டு பௌதிக வகுப்பில் புரியாத படி வேகமாக எங்கள் புரொபஸர் நாராயணன் நம்பியார் பாடங்கள் நடத்திக்கொண்டிருந்தார்.

அதுசமயம் கடைசி பெஞ்சில் எனக்கு அருகில் படித்திருந்த வரதன் என்ற மாணவன் தினமும் திருவள்ளூரிலிருந்து வருபவன். ரயிலில் ஏறியதும் உட்கார்ந்தபடி தூங்கிவிடுவான். திருவள்ளூர் வந்தவுடன், ''டேய் ஊர் வந்தாச்சுடா, எழுந்திருடா'' என எப்பொழுதும் எழுப்புவது போல் அன்று பாதி வகுப்பில் அவனிடம் கூற, அவனும் தடாபுடா என்று புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு வகுப்பை விட்டு வெளியேறினான். சென்றவனைப் பார்த்து புரொபஸர், 'என்ன வேண்டும்' என்று கேட்க, நாங்கள் கொல் எனச் சிரிக்க, அவனும் பதில் சொல்ல முடியாமல் பேந்தப் பேந்த விழித்தான். இதை நினைத்தால் இன்னும் சிரிப்புத்தான் வருகிறது.

-இரா. மோகன்




ஒரு மங்கையின்
வாழ்வில் மிக
இனிமையான
நேரங்களில்
இணைந்திருப்பது
கட்டாவ்.
கட்டாவின் டெர்கோஸா ஸாரிகள்.


அவனுக்காக, அவனது நாடான எகிப்தின் வெற்றிக்காகப் போரிட்ட அன்டனியை உதறித் தள்ளிவிட்டு எதிரியான சீஸரிடம் போய் சாகஸம் செய்து அவனுடன் சேர்ந்து விட்ட கிளியோபாட்ராவின் பிரிவை எண்ணி அன்டனி வெளியிட்ட சோகக் கதறலை பாஸ்கரன் விவரிக்க விவரிக்க—

வீணாவிடம் உள்ளம் கொண்டிருந்த லயிப்பை, காதல்கனவுகளை, உதறித் தள்ளி விட்டு, பாட நோக்கில் ஷேக்ஸ்பியரின் நாடகத்தைக் கவனித்து மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும் என்கிற முயற்சியில் ஈடுபட்டு வெற்றிபெற முடியாமல் துடித்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

கராத்தே பயிற்சி 9

பயிற்சியாளர்: டோனி பொன்னையா

சித்திரம்: ராஜ்.. · படம்: உத்ரா · தயாரிப்பு: குண்டுமணி



முன் உதை (FRONT KICK)

உதைக்கப் பழகுதல்

பயிற்சி முறை



இரண்டு கால்களையும் ஒன்றாகச் சேர்த்து நிற்க வேண்டும்.



வலது காலை வயிற்று அளவுக்குத் தூக்கிக் கொள்ள வேண்டும்.
தூக்கிக் கொண்டு முன் புறமாக மெதுவாக முன் நோக்கி உதைக்கப் பழக வேண்டும்.
இம் முறையைச் சுமார் நூறு தடவை இடது கால், வலது கால் என்று மாற்றிச் செய்து பழகுதல் வேண்டும்.


ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிக்கு ஜே!

- உலகமே ஒலிக்கிறது. அவரால் முடியாத காரியமே இல்லை
- அவரைப் பூஜிப்பவர்களுக்கு நினைத்த காரியம் நிறைவேறுகிறது
- "பூஜித்தோம், பலனடைந்தோம்." இதுவே பூஜையின் எதிரொலி

செங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீட்சிதரின் ஜயமங்களத் தோத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு, **கல்கி ஓவியர் வினு வரைந்தது. ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் மகா சந்நிதானத்தின் மகத்தான அருளாசியைப் பெற்றுள்ளது இப்படம்.**

பூஜித்து பலனடைந்த எண்ணற்ற அன்பர்களின் மெய் சிலிர்க்கும் கடிதங்களே இப் படத்தின் சக்திக்குச் சான்று. இப்பொழுது புதிய பிரிண்ட் வந்துள்ளது.

உங்கள் துயர் துடைக்கப்பட்டு நீங்கள் எல்லா நலன்களையும் பெற வேண்டுமென்றுதான் **ஸ்ரீ ஜயஹனுமானை** நாங்கள் பிரதி தினமும் பூஜித்துக் கொண்டிருக்கிறோம்.



இன்றே வாங்குங்கள்

சர்வ காரிய சித்தி அளிக்கும்

ஸ்ரீ ஜயஹனுமான் வண்ணப்படம்

(Copyright regd. A. 20286/78)

விலை, அளவு. 13½ × 20" ரூ. 6-00 9½ × 15" ரூ. 4-00

படம் வாங்குபவர்களுக்கு பூஜை முறைப்புத்தகம் இனாமாகத் தரப்படுகிறது. இப்படத்திற்கென்று தனியாக விரதமோ, கட்டுப்பாடோ இடையாது.

பக்தியும், நம்பிக்கையும்தான் முக்கியம்.

ஜாதி மத வேறுபாடின்றி ஆண், பெண் யார் வேண்டுமானாலும் பூஜிக்கலாம்: நன்மை நிச்சயம் உண்டாகும்.



ஓவியர் வினு வரைந்த அருள் பொழியும்

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்

வண்ணப்படமும் எங்களிடம் கிடைக்கும்

13½ × 20" ரூ. 5-00 9½ × 15" ரூ. 3-00

இவ்விரு படங்களும் இரண்டு பொக்கிஷங்கள்

பாகிங் உட்பட இரண்டு படங்களின் எடை வரை பதிவுத் தபால் செலவு ரூ. 4-25 கூடுதல்

உங்கள் தேவைக்கு படத்தின் கிரயத்துடன் பதிவுத் தபால் செலவும் சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு முன்னதாக மணியார்டர் செய்யவும்

நேரிலும் கிடைக்கும்; 50 படங்களுக்கு 20% கமிஷன் உண்டு. வி.பி.பி. இல்லை.

உரிமையாளர் : **ஸ்ரீமதி சரஸ்வதி வெங்கட்ராமன்**


w/o **வினு (கல்கி)** 16, வேலாயுத முதலித் தெரு, நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034 போன் : 89191 (வள்ளுவர் கோட்டம் பஸ் ஸ்டாப் அருகில்)

நேரில் மட்டும் கிடைக்கும் மற்ற இடங்கள் (தபாலில் கிடைக்காது)

ஸ்ரீ ரமணராஜ் ஏஜென்ஸீஸ், "சாரதா இல்லம்" 32/169, இடையர் வீதி, (மேற்கு)
(சாமிநாதய்யர் புது வீதி சமீபம்) **கோயம்புத்தூர் - 641 001**

T. K. சீனிவாசன், 18/1A, லால்பாக் போர்ட் ரோடு, மினர்வா & பலப்பா சர்க்கிள், (மத்தியில்)
மார்க்ஸ் எண்டர்பிரைசஸ் (மாடியில்) **பெங்களூர் - 560 004**

S. ஜகந்நாதன், 14, ஸ்டேட் பாங்க் காலனி, குரோம்பேட்டை, **சென்னை - 600 044**



படப்பிடிப்பு ரத்தாகிவிட்டது! நேற்றிரவு கதாநாயகியின் அறையில், பையன், கொசு வர்த்திச் சுருள் வைக்க மறந்து விட்டதால் கதாநாயகியின் முகத்தில் கொசுக்கள் 'மேக்கப்' போட்டுவிட்டன.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
கொசுக்களை 'பேக் அப்' செய்து விரட்ட உதவுவது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
நீங்கதானு எங்க வீட்டுக்கு மேலே புதுசா வந்த குடித்தனக்காரங்க நீங்க என்ன தினம் இச்சிப்புடி டான்ஸ் பயிற்சி பண்றீங்களா?
ஆமா! இந்தப் பாழாப்போன கொசு கடிக்கிற கடி-இச்சிப்புடி பரதநாட்டியம்... எல்லாம் ஆடவைக்கிது.
கொசுக்களை நடனமாடவைத்து விரட்டுகிறது
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
ஏன் எப்பப் பார்த்தாலும் 'ஆமை'யையே வேண்டிக்கிட்-டிருக்கே!
வேதகாலத்தில் ஆண்டவன் ஆமை அவதாரம் எடுத்து ராட்சசர்களை அழித்தான். இன்றோ அது ராட்சசக் கொசுக்களை விரட்டுகிறது
கொசுத் தொல்லையற்ற தூக்கத்தைப் பெற சித்ராதேவியை வேண்டத் தேவையில்லை. அதற்கு உதவுவது டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831
everest/80/BCL/101-tm

எங்கள் பிரச்னைகள் ஏராளம்!

— மாணவர் உரையாடல்

உரையாடலில் பங்குபெறும் மாணவ மாணவியர்:

1. திரு ரவிச்சந்திரன் (ஐ.ஐ.டி.)
2. திரு ஆர். எஸ். பாலாஜி (சென்னை கிறிஸ்துவக் கல்லூரி)
3. திரு ஆர். பாலாஜி (ஏ.எம். ஜெயின் கல்லூரி, மாலைநேர வகுப்புகள்)
4. திரு கே. நரசிம்மன் (விவேகானந்தா கல்லூரி)
5. குமாரி ஏ. சுதா ராவ் (கிறிஸ்துவக் கல்லூரி)
6. குமாரி ஆர். கருணா (ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி)

ஆர். எஸ். பாலாஜி: மாணவ சமுதாயத்தின் பிரச்னைகள் ஏராளமாகி விட்டன. கல்லூரிக்குச் சென்று வருவதற்கான போக்குவரத்து வசதி என்பது மிகப் பெரிய கேள்விக் குறியாகிவிட்டது.

கருணா: அதிலும் பெண்களின் நிலைமை மேலும் மோசம். பஸ்கள் நேரத்துக்கு வருவதில்லை என்பதோடு ஏகப்பட்ட நெரிசல். ஆண்களோடு போட்டியிட்டுக் கொண்டு பஸ்ஸில் பெண்கள் ஏறவேண்டிய நிலை!

ஆர். எஸ். பாலாஜி: முன்பெல்லாம் ஸ்டுடண்ட்ஸ் ஸ்பெஷல் என்று விட்டுக் கொண்டிருந்தார்கள். தற்போது அது மாதிரி விடப்படுவதில்லை. ஆனால் பெண்களுக்காகத் தனியாகச் சில பஸ்களை விடுகிறார்கள்! மின்சார ரயிலில் கூடப் பெண்களுக்கான இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பஸ்கள், டிரெயின்களின் மொத்த எண்ணிக்கையை அதிகரிக்காமல், இருக்கும் பஸ்களிலும் ரயில்களிலும் இது மாதிரி ஒதுக்குவதால் ஆண்களுக்குப் பிரச்னைகள் அதிகமாகி விட்டன.

கருணா: ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்களுக்கென இரண்டு பஸ்களை விட வேண்டும் என்று அரசு சட்டமே கொண்டு வரலாம்... இம்மாதிரி பஸ்களைக் கல்லூரிகள் வாங்க அரசும் உதவ வேண்டும்... பஸ்களில் மாணவர்களுக்கான 'சலுகை டோக்கன் முறை மிகவும் உதவியாக உள்ளது.

நரசிம்மன்: மாணவர்கள் உடனடி காசு கொடுக்காமல், முன்பே வாங்கின டோக்கன்களைத் தருவதால் பெரும்பாலான கண்டக்டர்கள் மாணவர்களை 'ஓசி'யில் பிரயாணம் செய்வது போன்ற நோக்கில் நடத்துகிறார்கள்.

ஆர். பாலாஜி: கண்டக்டர், ஓட்டுநர் ஆகியவர்களுக்கு அளிக்கப்படும் ஊக்க போனசுக்கு மாணவர்கள் அளிக்கும் டோக்கனால் குறைவு ஏற்படும் என்பதால் இம்மனநிலை அவர்களுக்கு உண்டாகலாம்.

நரசிம்மன்: மாணவர்களுக்கும் — அரசு பஸ் ஓட்டுனர், நடத்துனர் இடையே அடிக்கடி மோதல்கள் உண்டாகின்றன. வெளிப்



இடமிருந்து வலம்: கே. நரசிம்மன், ஆர். எஸ். பாலாஜி, ஏ. சுதா ராவ், ஆர். கருணா, ஆர். பாலாஜி, ரவிச்சந்திரன்,

படையான காரணமே இல்லாமல் இந்த இரு சாராரும் மோதிக் கொள்வதைக் காண முடிகிறது. மனோ தத்துவம் படிக்கும் மாணவர்கள்இதனைஆராயலாம்.

ரவிச்சந்திரன்: பொதுவாகவே மாணவர் கிளர்ச்சிகள், ஸ்ட்ரைக் முதலியன சமீப காலத்தில் அதிகரித்து விட்டன.

நரசிம்மன்: தங்களது பலத்தைக் காட்ட வேண்டும் என்று சில மாணவர் தலைவர்கள் செயற்கையாகத்தோற்றுவிக்கும்போராட்டங்கள் தற்போது அதிகமாகிவிட்டன.

சுதா: செல்லம்மாள் கல்லூரி, எஸ்.ஐ.இ.டி. கல்லூரி போன்ற கல்லூரி மாணவிகள் தங்களுக்கு மறுக்கப் பட்ட சில உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடினார்கள்.

நரசிம்மன்: இம்மாதிரி சில நியாயமான கிளர்ச்சிகள் நிகழ்ந்தாலும் அர்த்தமற்ற கிளர்ச்சிகள்தான் அதிகம். தங்களது மதிப்பு வாய்ந்த நேரம் வீணாவதை உணர்ந்து மாணவர்கள் தாங்களாகவே இத்தகைய நிலைக்கு முடிவுகட்டவேண்டும்.

ரவிச்சந்திரன்: பல கல்லூரித் தேர்தல்கள் தேவைக்கு அதிகமான முக்கியத்துவத்துடன் நடத்தப்படுகின்றனவே.

நரசிம்மன்: அரசியல் கட்சிகள் இத்தேர்தல்களுக்குப் பண உதவி செய்து தங்கள் கட்சியைக் கல்லூரியில் காலூன்ற செயல்படுகின்றன என்று சொல்லப்படுகிறது.

சுதா: எங்கள் கல்லூரியில் மாணவத் தலைவர்கள் தேர்தல் அதிக விளம்பரம் இல்லாமல் நடக்கின்றன. அதற்கு முக்கிய காரணம் உண்டு. போட்டியிடுவதற்காகப் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட நாளுக்கும் தேர்தல் நாளுக்கும் இடையே ஓரிரண்டு தினங்கள்தான் இடைவெளி அளிக்கப்படுகிறது. இம்முறையை மற்ற கல்லூரிகளும் பின்பற்றலாம்.

கருணா: சென்னை கிறித்துவக் கல்லூரி ஒரு சுய நிர்வாகக் கல்லூரி (Autonomous College) என்று நினைக்கிறேன். சரிதானே?

சுதா: ஆமாம்.

நரசிம்மன்: சுய நிர்வாகக் கல்லூரி என்றால் அதன் சிறப்பு அம்சங்கள் என்ன?

சுதா: பாடத் திட்டங்களை அறிவிப்பதிலிருந்து தேர்வுகளுக்கான கேள்வித் தாள்களைத் தயாரிப்பதும், விடைத் தாள்களைத் திருத்தி மாணவர்களை தேர்வு செய்வதும் ஆன எல்லாப் பொறுப்பும் அக்கல்லூரி வசமே இருக்கும்.

ஆர். எஸ். பாலாஜி: இறுதித் தேர்வுக்கான விடைத் தாள்களைக் கல்லூரியிலேயே திருத்தி மதிப்பெண்களை வழங்கி வைத்துக்கொள்கிறார்கள். அவ்விடைத் தாள்களை வெளிக் கல்லூரி ஆசிரியர்களிடமும் கொடுத்து அவர்கள் வழங்கும் மதிப்பெண்களையும் குறித்துக் கொள்கிறார்கள். இரண்டு மதிப்பெண்களையும் ஒப்பிட்டு வித்தியாசம் பத்துசத விகிதத்துக்குள் இருக்குமானால் இரண்டில் எவர் அதிகமான மதிப்பெண்களை வழங்கினரோ அம்மதிப்பெண்ணைக் குறிப்பிட்ட விடைத் தாளுக்கு அளிக்கப்படுகிறது. ஒருவேளை வித்தியாசம் பத்து சத விகிதத்துக்கு மேல் இருக்குமானால் மூன்றாவது தேர்வாளர் ஒருவரிடம் கொடுத்து அவர் அளிக்கும் மதிப்பெண்ணை இறுதியானதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது!

ஆர். பாலாஜி: வேறொரு சுயநிர்வாகக் கல்லூரியில் அவர்களாக மட்டுமே விடைத் தாள்களைத் திருத்துவதாக அறிகிறேன். இம்மாதிரி 'சுயநிர்வாகம்' என்று ஒவ்வொரு கல்லூரிக்கும் அளிக்கப்படுமானால் மாணவரிடையே கல்வித் தரம் வித்தியாசப்படவும், நிர்வாகத்தில் ஏதேனும் குறை இருக்குமானால் ஒழுங்கீனங்கள் தோன்றவும் வழி வகுக்கலாம் அல்லவா?

நரசிம்மன்: இவ்விஷயத்தில் நமது பல்கலைக் கழகம் ஆழ்ந்து யோசித்துச் செயல்படுவது அவசியம் ஆனால் செமஸ்டர் முறை சிறந்தது என்பது என் கருத்து.

சுதா: சிறப்பானதுதான். ஆனால் அதிலுள்ள இன்டர்னல் அஸ்ஸெஸ்மெண்ட் அவசியமில்லை. (சுதாவின் கருத்தை அனைவரும் ஆமோதித்தனர்.)

ரவிச்சந்திரன்: வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவிப் பணம் அளிக்க அரசு முன்வந்துள்ளது வரவேற்கத் தக்கது.

ஆர். பாலாஜி: உதவித் தொகை அளிப்பது வேலை வாய்ப்புத் தருவதற்கு ஈடாகாது. உதவித் தொகை அளிக்கிறோம் என்கிற நினைப்பில் வேலை வாய்ப்புக்கு வசதி ஏற்படுத்தித் தருவதில் அரசு மெத்தனமாக இருக்க இது வழி வகுக்கலாம் அல்லவா?

நரசிம்மன்: இது மாதிரி உதவித் தொகை அளிக்கும் பணத்தைக் கொண்டு வேலை வாய்ப்புக்கான புதிய திட்டங்களை அரசு உருவாக்குவதுதான் சமுதாய மேம்பாட்டுக்கு உதவும்.

அந்த நாள் ஞாபகம்

சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் நான் பயிற்சி பெற்றபொழுது நடைபெற்ற சம்பவம்:

முதல் நாள் வகுப்பில் ஒவ்வொருவராக விசாரித்த தமிழ்ப் பேராசிரியர் என்னை விசாரித்தபொழுது என் தலையில் ஓரிரு முடிகள் நரைத்திருப்பதைக் கண்டு அனுதாபத்தோடு, 'இளைஞராக இருக்கின்றீர்களே! 'டை' அடித்துக்கொள்ளக் கூடாதா?'' என்று கேட்டார். நான் அதற்கு 'பொய்மை வேண்டாமென்று போதிக்க வேண்டிய ஆசிரியனாகிய நான் பொய்''மையினை' என் வாழ்வில் தலைமேற் கொள்வேனா?'' என்று கூறியதோடு 'வெள்ளி முடியார்' என்ற சிறப்புப் பெயரையும் இழக்க விரும்பவில்லை என்று கூறியபோது சமயத்துக்குத் தகுந்த என் பதிலைக் கேட்டு ஆசிரியர் பாராட்டிய நிகழ்ச்சியை என்றும் மறக்க முடியாது.

-கா. சுப்பிரமணியன்



மாணவ இளம் புயல்



⌘ வெளியீட்டு விழாவில் மதன், இ. ராஜேந்திரன் தாமரைமணாளன்

"கல்லூரி மாணவ, மாணவியரின் படைப்புக்களைத் தாங்கி வெளியாகும் பத்திரிகை. கல்லூரி மாணவர்களாலேயே பிரசுரிக்கப்படுவது. ஆனால் அம்மாணவர்களை உருவாக்கும் சமுதாயமும் படிக்க வேண்டும் என்பதால் மாணவ இளம் புயலைப் பொது விற்பனைப் பத்திரிகையாகக் கொண்டு வருகிறோம்" என்று குறிப்பிட்டார் அதன் ஆசிரியரான டி.எஸ். நாராயணசுவாமி. இவர் சென்னை ஏ. எம். ஜெயின் கல்லூரியில் கடைசியாண்டு பி. காம் படித்து வருகிறார். அவர் மேலும் கூறினார் :

எங்கள் கல்லூரியில் போன வருடம் வேலைநிறுத்தம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் எனக்கும் வேறு சில கல்லூரி நண்பர்களுக்கும் திடீரென இம்மாதிரி ஒரு பத்திரிகை நடத்தினால் என்ன என்று யோசனை தோன்றியது. பத்திரிகை உலகம் பற்றி எதுவுமே தெரியாத நிலையில் எங்களுக்குள் ஏதேதோ கணக்குகள் போட்டு, நாங்களாகப் பலவிதக் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு 50 பைசா விலையில் 32 பக்கங்களைத் தரலாம் கலையமாகப் பிரசுரிக்கலாம் என்று முடிவு கட்டினோம். முதல் வருடத்தில் ஐந்து இதழ்களைக் கொண்டுவரலாம் என்றும் தீர்மானித்தோம்.

'இளம் புயல்' என்ற பெயரை ஒருமனதாக முடிவுசெய்து, பதிவாளரிடம் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தோம். பத்திரிகையும் படிப்படியாக உருவாகி வந்தது. திடீரென்று ஓர் அதிர்ச்சி. பதிவாளரிடமிருந்து பதில் வந்தது: 'இளம் புயல்' என்ற பெயருக்கு அங்கீகாரம் கிடையாது! அந்தப் பெயரில் ஏற்கனவே வேறு யாரோ பதிவு செய்துள்ளனராம்.

'மாணவ இளம் புயல்' என்று பெயரை மாற்றி மறுபடியும் விண்ணப்பித்தோம். ஒரு வழியாக அங்கீகாரம் கிடைத்தது.

குறிப்பிட்ட நாளில் பத்திரிகை வெளிவந்தது. எங்களது செல்லக் குழந்தையைக் கண்டு, படித்து நாங்கள் அனுபவித்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

திரு பரணீதரன், திரு இ. ராஜேந்திரன், திரு தாமரைமணாளன், திரு மதன் ஆகியோர் பங்கேற்ற ஒரு விழாவில் எங்களது 'மாணவ இளம் புயல்' வெளியாயிற்று. முதல் இதழில் 2500 பிரதிகள் வெளியிட்டோம். சந்தாதார் எண்ணிக்கையே 1500.

இரண்டாவது இதழ் 5000 பிரதிகள் வெளியிட்டோம். முதல் இதழில் ஏற்பட்ட நஷ்டம் இரண்டாவது இதழை அண்டவில்லை. காரணம் விளம்பரங்கள்.

பத்திரிகை தயாரிக்கும் பொறுப்பை மாணவ – ஆசிரியக் குழுவிடம் கொடுத்து விட்டு பிரசுரித்து விநியோகிக்கும் வியாபாரப் பொறுப்பை ஒரு பிரசுர கர்த்தர் ஏற்றுக் கொண்டால் இப்பத்திரிகை அமோகமாக வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இதைப் பத்திரிகை என்பதை விட இயக்கம் என்று கூறுவதுதான் சரியானதாகும்!



டி. எஸ். நாராயணஸ்வாமி

அத்தியாயம் 63

மதுவும் ஸில்வரும்

அந்த அறையிலிருந்த இரண்டு கட்டில்களில் ஒன்றில் உட்கார்ந்து கொண்ட அனந்த் எதிரே இருந்த கட்டிலில் இரு பெண்களையும் உட்காரச் சொல்லிவிட்டுத் தனது கதையைச் சொல்லத் துவங்கி ''சில சமயங்களில் மனிதன் தனது திறமைகளை அதிகமாக மதிக்கிறானே தவிர பட்சிகளின் திறமையைப் பற்றி சரியாக எடை போடுவதில்லை'' என்று கூறினான்.

இந்த அனுவசியப் பேச்சைக் கேட்ட கடல் ராணி ''சுருக்கமாக உங்கள் கதையைச் சொல்லுங்கள். எங்களுக்கு உறக்கம் வருகிறது'' என்றாள்.

அனந்த் தனது இதழ்களில் லேசாகப் புன்முறுவல் கூட்டினான். ''யாருக்கு உறக்கம் வரவேண்டுமோ அவருக்கு வருவதில்லை. யாருக்கு வரக் கூடாதோ அவர்களுக்கு வருகிறது'' என்று சொன்னான் புன்முறுவலின் ஊடே.

''உம் உம். சீக்கிரம்'' என்று விரட்டினாள் சாரு.

''உங்களைப் போல் ஸில்வரும் அவசரப்பட்டிருந்தால் காரியம் கலபமாகிவிடும்'' என்று அனந்த் சுட்டிக் காட்டியதும் இரண்டு பெண்களும் சட்டென்று நமிர்ந்து உட்கார்ந்து ,'என்ன ஸில்வரா!'' என்று ஒரே சமயத்தில் வியப்புக் குரல் எழுப்பினார்கள்.

''ஆம் ஆம். உங்களைப் போல் அவன் தூங்குமூஞ்சியல்ல. இரவிலும் விழித்திருக்கிறான். கடமையையும் செய்கிறான்'' என்று கூறிய அனந்த் ''ஆனால் முழுப் பெருமையும் அவனைச் சார்ந்ததல்ல'' என்றும் சொன்னான்.

இரு பெண்களும் கட்டிலை விட்டு எழுந்து அனந்தின் அருகில் வந்து அவன் முன்பு நின்றார்கள். ''நடந்தது என்ன? தெளிவாகச் சொல்லுங்கள்'' என்று கேட்டாள் ராணி?

''ஸில்வர் மதுவை அருந்தவில்லையா?'' என்று சாரு வினவினாள்.

எதிரேயிருந்த இரு பெண்களையும் அவர்கள் உடல்களின் துடிப்பையும் அதனால் தனது முகத்துக்கு எதிரே அசைந்த இரட்டை அழகுகளையும் கவனித்த அனந்த் சற்றே மதிமயக்கம் கொண்டான். அதிலிருந்து அவன் விடுபட முயன்ற சமயத்தில் இரு பெண்களும் அவனைப் பெரிதும் நெருங்கி அவன் இரு தோள்களிலும் தங்கள் கைகளை வைத்தார்கள். இப்படித் தனது தோள்களை ஆளுக்கொரு தோளாகப் பங்கு போட்டுக் கொண்ட இரு தருணிகளையும் நோக்க கண்களை உயர்த்திய அனந்த் அவர்களின் முகங்களைப் பார்க்க முடியாத நிலையில் இருந்தபடியால் ''ராணி! சாரு! உங்கள் கட்டிலில் உட்காருங்கள். உங்களை என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லை.'' என்று வேண்டிக் கொண்டான்.

சாருவும் ராணியும் புன்முறுவல் கொண்டாலும் ராணியே கேட்டாள், ''ஏன் பார்க்க முடியவில்லை?'' என்று.

''மிகவும் நெருங்கிவிட்டீர்கள்''. அனந்த் பதில் சொல்லித் திணறினான்.

''நெருங்கினால் என்ன? எங்களைப் பிடிக்கவில்லையா?'' என்றாள் சாரு சினம் துளிர்த்த குரலில்.

''பிடிக்கிறது பிடிக்கிறது. ஆனால் முகம் தெரியவில்லை. முகத்துடன்தானே பேச முடியும்?'' என்று கேட்டான் குழப்பத்துடன்.


''பேச முகம் தெரிவானேன்?'' என்றாள் ராணி.

''கண்ணை மூடிக்கொண்டு பேச முடியாதா?'' என்று சாரு வினவினாள்.

''கண்ணை மூடமுடியவில்லை.'' என்ற அனந்த் தனது கைகளால் அவர்களின் இடை



களைத் தழுவிக் கொண்டு எழுந்திருந்திருந்து அவர்களை அப்படியே தள்ளிக் கொண்டு போய் எதிர்க் கட்டிலில் உட்கார வைத்துப் பழையபடி தான் அமர்ந்திருந்த கட்டிலுக்கு வந்தான். வந்தவன் உட்காரவில்லை. நின்றபடியே அந்த இரு தருணிகளையும் நோக்கினான். ''எச்சரிக்கையுடன் கேளுங்கள். நான் சொல்வதை யாரிடமும் சொல்ல வேண்டாம். லில்வர் உறங்கவில்லை. காஸண்ட்ராவுக்கு விளக்கு மூலம் ஏதோ செய்தி சொல்லி யிருக்கிறான். அது என்னவென்று எனக்கு விளங்கவில்லை'' என்று கூறினான். பிறகு அறையில் அப்படியும் இப்படியும் நடந்து கொண்டே பேசினான்: ''மதுவில் மருந்தைக் கலந்து சாமர்த்தியமாகத்தான் லிவாஸியர் கொடுத்தான். அந்த மருந்தை லில்வர் குடித்தும் இருப்பான். மனிதனுக்கு இல்லாத கரணை, வாசனையை அறியும் சக்தி பட்சிகளுக்கு இருப்பதால் காப்டன் ப்ளிண்ட் மது அருந்த விடாமல் லில்வரைத் தடுத்தது. லில்வர் மதுவைக் குப்பியிலிருந்து குவளையில் கொட்டியதும் சட்டென்று பறந்து குவளையைச் சாய்த்து விட்டது. கூரிய அறிவுள்ள லில்வர் விஷயத்தைப் புரிந்து கொண்டான். உடனே தனது ஆசைக் கிளியைப் பிடித்து அதட்டுவது போல் அதட்டி ''ப்ளிண்ட், மை டியர்! யூ லிட் இன் தட் கார்னர். டோண்ட் டிஸ்டர்ப் அஸ்'' என்று கடிந்து கொண்டு ஒரு மூலையை நோக்கி அதை விட்டெறிந்தான். இனி அந்த மூலையை விட்டு நகரவில்லை. எஜமான் சித்தத்தை அறிந்து உட்கார்ந்து விட்டது. பிறகு லில்வர் சிறிது புன்முறுவல் கொண்டு தன்னைச் சுற்றி நின்ற மாலுமிகளை நோக்கி, ''மை ப்ரண்ட்ஸ்! ஆப்டர் ஆல் எ பார்ட் ஈஸ் எ பார்ட் இட் டஸ் நாட் அண்டர்ஸ்டாண்ட் த குவாலிடி ஆப் த வொய்ன் (நண்பர்களே! என்ன இருந்தாலும் பறவை பறவைதான். அதற்கு மதுவின் உயர்வு தெரியாது)'' என்று பணிவுடன் கூறினான். அத்துடன் சொன்னான்: ''மை ப்ரண்ட்ஸ்! திஸ் ஈஸ் லிவாஸியர்ஸ் வொய்ன் ஸ்பெஷலி ஸெண்ட் பார் மி. உட் யூ அலௌ மி டு டேக் இட் அலோன் (நண்பர்களே! இந்த மது எனக்குப் பிரத்யேகமாக லிவாஸியரால் அனுப்பப்பட்டது. இதை நான் தனியாகத்



தான் குடிக்க வேண்டுமா?'') என்று கேட்டான். 'நோ ஸெய்லர் ட்ரிங்க்ஸ் அலோன் (எந்த மாலுமியும் தனியாகக் குடிக்க மாட்டான்)' என்றும் சொல்லி அவர்களுக்கும் மதுவை குவளையில் கொட்டிக் கொட்டிக் கொடுத்தான். மதுவின் மர்மத்தை அறியாத மாலுமிகளும் அதை அருந்தினார்கள், தள்ளாடினார்கள், தரையில் அமர்ந்தார்கள். படுத்தார்கள். பிறகு வில்வர் அவர்களை அலட்சியமும் வெறுப்பும் கலந்த பார்வையால் நோக்கினான். மதுக் குப்பியைக் கையில் எடுத்துக் கொண்டு 'யோ ஹோ ஹோ அண்ட் எ பாட்டில் ஆப் ரம்' என்று தனது பழைய பாட்டை மெதுவாக இசைத்தான். பாடி முடித்ததும் மதுவின் மருந்தில் ஆழ்ந்த மாலுமிகளைத் தனது ஒற்றைக் காலால் உதைத்துப் பார்த்தான். சிலரைத் தனது ஊன்றுகோலால் தள்ளிப் பார்த்தான். எல்லோரும் கும்பகர்ணனிடம் அடைக்கலமாகி விட்டதை உணர்ந்ததும், அறையிலிருந்த விளக்கைச் சிறிது செய்து கொண்டு வெளியேறினான். தளத்தின் ஓரப் பலகைக்கு வந்ததும் விளக்கின் திரியைத் தாண்டி காலண்ட்ராவுக்கு எச்சரிக்கை செய்தான். அங்கிருந்து பதில் வந்ததும் திருப்தியடைந்து திரும்பவும் அறைக்கு வந்து படுத்துக் கொண்டான்.''

இப்படிக் கதையைச் சொல்லி முடித்த அனந்தை இரு பெண்களும் வியப்புடன் நோக்கினார்கள். ''இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று ராணி கேட்டாள்.

''விவாஸியர் அறையை விட்டு வெளியில் வந்ததும் உங்களிடம் கூறியபடி வில்வரின் அறைக்குச் சென்றேன். அங்கு வில்வர் இல்லை. மற்ற மாலுமிகள் சுரணையின்றிக் கிடந்தார்கள். அதைக் கண்டு நான் வெளியே வந்து வில்வரைத் தேடினேன். அவன் காலண்ட்ராவுக்கு விளக்கால் சைகைசெய்து கொண்டிருந்தான். நான் நடுப் பாய் மரத்தில் மறைந்து நின்றேன். தனது அலுவல் முடிந்ததும் வில்வர் அறைக்குத் திரும்பித் தனது கிளியை மார்பில் அணைத்துப் படுத்தான். எட்ட இருந்த மேஜை மீது மது வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும் இணைத்து வில்வரின் பழக்க வழக்கங்களையும் யாரையும் வசீகரிக்கும் அவனது ஜாலத்தையும் சேர்த்துப் பார்த்தேன். இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். இதுதான் கதை'' என்று பதில் சொன்னான் அனந்த்.

''இதை ஏன் விவாஸியரிடம் சொல்லாமல் எங்களிடம் சொல்கிறீர்கள்?'' என்று சாரு கேட்டாள்.

''விவாஸியர் கெட்டிக்காரன். சில சமயங்களில் அவசரக் குடுக்கை. ஆகையால் தான் அவனிடம் சொல்லவில்லை. விவாஸியர் மதுவில் மருந்தைக் கலந்தபோது வில்வர் மதுவின் பக்குவங்களை நன்றாக அறிந்தவன் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அறியவில்லை. தவிர அவசரப்பட்டு வில்வரைக் காவலில் வைத்தான். இதனால் வில்வரும் காலண்ட்ராவில் உள்ள அவன் சகாக்களும் எச்சரிக்கை அடைந்திருக்கிறார்கள். இது நமக்குப் பலவீனம்'' என்று விளக்கிய அனந்த் ''பெண்களே! இதைப் பற்றி மூச்சுக்கூட விடவேண்டாம்''என்றும் கட்டளையிட்டான்.

அத்துடன் அவர்கள் அறையை விட்டு அகன்று எந்த அறைக்கும் செல்லாமல் தளத்தில் உலாவினான். பிறகு தளத்திலேயே மல்லாந்து படுத்து ஆகாயத்தை நோக்கினான். சிறுகச் சிறுக உறக்கம் வரவே கண்களை மூடினான்.

பொழுது விடிந்தும் அவன் எழுந்திருக்கவில்லை. காலையில் கப்பலை இயக்க வேண்டிய மாலுமிகள் சிலர் தளத்தில் உலாவியபோது அனந்த் படுத்திருப்பதைக் கவனித்து வியந்தாலும் அதைப் பற்றி ஏதும் கேட்கவில்லை. அவனை எழுப்பவும் இல்லை. சூரியக் கிரணங்கள் நன்றாக ஏறிவிட்ட பிறகு தளத்துக்கு வந்த விவாஸியர் அனந்த் தரையில் படுத்திருப்பதைக் கண்டு சிறிது நேரம் சிந்தனையுடன் அவன் பக்கத்தில் நின்றான். காப்டன் வந்ததும் அவனை அணுகிய இரு மாலுமிகள் ''இவரை எழுப்பட்டுமா?''என்று வினவினார்கள்.

''வேண்டாம். எழுந்ததும் அவரே எனது அறைக்கு வருவார்'' என்று சொல்லிச் சென்றான். அவன் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்து கிடந்தது.

காலைச் சிற்றுண்டி அருந்தியபோதுதான் விவாஸியரை அனந்த் சந்தித்தான். ''அனந்த்!

புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய
பற்களின் மென்மையான
எனுமல் எளிதில் துவாரங்களுக்கும்,
சிதைவுக்கும் உள்ளாகிறது.
பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப்
பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்
பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள்
குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது.
துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு
எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனுமலுடன்
இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்.எஃப்.பி
ஃப்ளோரைட் அதில்
உள்ளது. கோல்கேட்
ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும்
புதுச்சுவை கொண்டது.
உங்கள் குடும்பத்திற்கு
இன்றே வாங்குவீர்.



உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில்
சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட்
துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப்
பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது
மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது.
கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மட்டுமே
இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃபார்முலாவை
உங்களுக்கு வழங்க முடியும்.

**ஃப்ளோரிகார்டில் உள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட்
எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும்
எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.**

இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

CFT-G-2 TM

மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேறெ தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.
காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.



நீங்களே கண்டுகொள்வீர்கள்

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட பார்



இதை வெளுத்தது ஸூப்பர் ரின்

அதிக வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

நீ ஏன் தளத்தில் தரையில் படுத்துவிட்டாய்?'' என்று வினவினன் விவாஸியர்.

''இரவு சுகமாக இருந்தது. ஆகாயம் நிர்மலமாய் இருந்தது. அழகை அநுபவித்தேன்'' என்றான் அனந்த்.

''எந்த அழகை?'' என்று கேட்ட விவாஸியர் மேஜைக் கோடியில் கோப்பைகளில் பாலைப் பருகிக் கொண்டிருந்த இரு பெண்களின் மீதும் கண்களை ஓட்டினான்.

அவன் கண்கள் ஓடிய திசையையும் கேள்வியையும் கவனித்த அனந்த் புன்முறுவல் கொண்டான். ''வானத்தின் அழகைச் சொல்கிறேன். மானிட வனப்பை அல்ல'' என்றான்.

''ஏன் உறக்கம் வரவில்லையா?'' என்று விவாஸியர் கேட்டான்.

''என் நண்பருக்கு உறக்கம் வராவிட்டால் எனக்கும் வராது'' என்றான் அனந்த்.

''யார் உனது நண்பர்?'' என்று விவாஸியர் விசாரித்தான்.

''பழைய நண்பர். வில்வர்'' என்றான் அனந்த்.

பிளேட்டில் இறைச்சியை வெட்டிக் கொண்டிருந்த விவாஸியரின் கத்தி சட்டென்று நின்றது. அவன் கண்களில் விபரீதமான சாயை ஒன்று படர்ந்தது.

(தொடரும்)

தேர்தல்கள்: மோதல்கள்

''சென்னையில் பச்சையப்பன் கல்லூரி, புதுக் கல்லூரி, ஏ. எம். ஜெயின் கல்லூரி ஆகிய கல்லூரிகளில்தான் மாணவர் தேர்தல்கள் கடுமையாக நடந்தன... புதுக் கல்லூரியில் இத்தேர்தல்களுக்காகச் சுமார் இரண்டு லட்சம் ரூபாய்கள் வரை மாணவர்கள் செலவழித்துள்ளார்கள்'' என்று அந்தக் கல்லூரி மாணவர் ஒருவரே தெரிவித்தார். இக்கல்லூரி தேர்தல் பிரசார விளம்பரங்களைப் பாரி முனையிலிருந்து சைதாப்பேட்டைவரை காண முடிந்தது.

'எனக்கு மட்டும் சுமார் பத்தாயிரம் ரூபாய் செலவாயிற்று. மொத்தமாக எங்கள் கல்லூரித் தோழர்களில் ஐம்பதாயிரம்வரை செலவாகியிருக்கும்' என்றார் பூண்டி புஷ்பம் கல்லூரி மாணவர் தலைவர் தினகரன்.

வாக்களிப்பு அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் ரௌத்ரி ஆண்டு ஆவணித் திங்கள் 6ம் நாள் (22–8–80) வெள்ளிக் கிழமை காலை மணி 10க்கு மேல் 12க்குள் கூடிய சுப லக்னத்தில்

வெற்றிச் செல்வன்
தினகரன் பி.காம்க்கும்
வெற்றிச் செல்வி
பேரவைத் தலைமைப் பதவிக்கும்

மாணவர்களால் நிச்சயிக்கப்பட்டு நடக்க இருக்கும் திருமணத்துக்கு (தேர்தலுக்கு) எல்லா சுற்ற மாணவர்களுடன் வந்து வாழ்த்தி வாக்களிக்க வேண்டுகிறோம்.

மாணவர் குழாம்

–இந்த அழைப்பிதழைப் பன்னீர் தெளித்துப் பூ, குங்குமம் கொடுத்து வழங்கினர்.

''இவ்வளவு செலவு செய்து தேர்தலில் வெற்றி பெறுவதால் என்ன லாபம்?''

''எங்கள் கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டு இது. இச்சமயம் மாணவர் தலைவராக இருப்பதில் ஒரு மதிப்பும், புகழும் கிட்டுமே, அதுதான் லாபம்!'' என்றார் தினகரன்.

திருச்சியில் ஒரு கல்லூரியில் கடும் போட்டி தேர்தல் முடிந்த பிறகு வெற்றி பெற்ற மாணவரின் தேர்தல் பதிவு மனுவில் குறைபாடு இருக்கிறது என்று தோல்வியுற்ற மாணவர் ஆட்சேபிக்க மறு பரிசீலனை நடந்தது. ஆட்சேப மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு வெற்றி பெற்றவரின் தேர்தல் செல்லாது என்று கல்லூரி முதல்வர் அறிவித்ததைத் தொடர்ந்து ஏகக் குழப்பங்கள் ஆர்ப்பாட்டங்கள்...

தேர்தலுக்குச் செலவிடும் பணத்தை ஒரு வங்கியில் 'டெபாஸிட்' செய்து வரும் வட்டித் தொகையை ஓர் ஏழை மாணவனின் படிப்புக்கு உதவித் தொகையாக அளிக்கலாமே என்றபோது ஒரு மாணவர் தலைவர், ''நல்ல யோசனை... அடுத்த ஆண்டு இந்த யோசனையை அமுல்படுத்தி அதைக் கூறியே வோட்டுக் கேட்கிறேன்!'' என்றார்.




✖ பொதுக் கட்டிடம் விளம்பரத்துக்கு 'கபளீகரம்'



✖ போலீஸ் நோட்டீஸ் அல்ல; தேர்தல் போஸ்டர்தான்!

MCA-NTC-64-TAM



ஷர்ட்டிங்ஸ்

கவர்ச்சிகரமான சிறந்த ரக காட்டன் ஷர்ட்டிங்குகள். கண்ணைக் கவர்ந்திடும் விதவித பாலியஸ்டர் டிசைன்கள். பார்வைக்கும், அணிவதற்கும் சிறந்தது.

entice

என்டைடஸ்

சிறந்த ரகங்கள்.
சரியான விலை.


நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்
(தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்
கோயம்புத்தூர்-641009

இன்டென்டிங் ஏஜண்டுகள்: (தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே & ஜே எண்டர்ப்ரைஸஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9 • செமி ஹோல்சேல் டிப்போ: மத்திய விநியோக டிப்போ, CS & W மில்ஸ் காம்பவுண்டு, கோயமுத்தூர் 1 • என்டைடஸ் செமிஹோல்சேல் டிப்போ, 208 தம்பு செட்டித் தெரு, சென்னை 1 • என்டைடஸ் ஷோரூம்கள்: என்டிசி ஹவுஸ், கோயமுத்தூர் 9 • 'சரவண பவனம்' கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர் 12 • என்டைடஸ் துணிகள் எல்லா என்டிசி ஷோரூம்களிலும் கிடைக்கின்றது.

"இதனால் இவர்களைப் பிடிக்கவில்லை!"







''உங்களுக்குப் பிடித்த நடிகர் யார்?''

இந்தக் கேள்வியை எந்தக் கல்லூரி மாணவியிடம் கேட்டாலும் 'பளிச்'சென்று பதில் கிடைக்கும். வித்தியாசமாய் - ''உங்களுக்குப் பிடிக்காத நடிகர் யார்?'' என்று கல்லூரி மாணவிகளிடம் கேட்டுப் பார்த்தால் என்ன? என்று தோன்றியது. கேட்டோம்,.. பளிச் பளிச்சென்று பதில்கள் வந்தன.

ஜெயஸ்ரீ, எத்திராஜ் கல்லூரி

● கமலஹாசனை ஹீரோன்னு சொல்றாங்க... மான்லினெஸ் இருக்கா? 'அயன் ஸ்திரீபார்ட்' மாதிரி, கமல் பெண் வேஷம் போட்டு ஹீரோயினா நடிச்சா, நான் அவருக்கு ரசிகர் சங்கமே ஆரம்பிப்பேன்.

ஸ்ரீலதா, எஸ். ஐ. இ. டி. கல்லூரி

● தமிழ்த் திரை உலகிலே, ரொம்ப வேகமா முன்னேறியிருப்பவர் ரஜனிதான்! ஒத்துக்கறேன். அதுக்காக, அந்த 'வேகத்தை' அவர் வசன உச்சரிப்பிலேயும் காட்டித்தான் தீரணுமா? ரஜனி ஸ்ரீதேவியைப் பார்த்து ஒரு படத்துலே 'ஏம்மா அன்றே, ஏம்மா அன்றே' அப்படின்னு கேட்பார். அவுங்க என்ன அள்ளுறாங்கன்னு பார்த்தா ஒண்ணையும் அள்ளலே! அழுதுக்கிட்டிருப்பாங்க!

ஆஷா, ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரி

● விஜயன். தமது டிரேட் மார்க்கை — பரட்டைத் தலே, கொடுவாள் மீசை சில்க் ஜிப்பா, லுங்கி — மாத்திக்கிட்டா என்ன? ஆர்ட் பிலிம்லே நடிக்கிறவர் மாதிரி நிதானமா வந்து, நிதானமா பேசி, நிதானமா நம்ம உயிரை வாங்கறார்... அதை நிதானமாக வாவது மாத்திக்கிட்டார்னா நல்லா இருக்கும்.

சாந்தி, மீனாக்ஷி கல்லூரி

● ஸ்ரீதேவியை நடிகைன்னு சொல்றதே தப்பு அழகா இருக்கிறது ஒண்ணுதான் அவருடைய க்வாலிபிகேஷன். நான் சொல்றதை நம்பலேன்னா, ஒரு வாரம் டி.வி.யில ஒளியும் ஒலியும் பாருங்க... எல்லா பாட்டுக்கும், எல்லா வசனத்துக்கும் ஒரே மாதிரி கண்ணை உருட்டறதும், 'ஹி'யின்னு சிரிக்கிறதும்...

திருவள்ளி, க்யூ. எம். ஆர்ட்ஸ் கல்லூரி

● முதல்ல கருணிராஜன் நடிக்கக் கூடாதுன்னு ஒரு தடை உத்தரவு போடணும். ஆபாசம் தான் நடிப்புன்னு நினைச்சுக்கிட்டிருக்கார். நடிப்பும் சிரிப்பும் அதிலே இல்லேன்னு கருணி புரிஞ்சுக்கிட்டா நன்றாகவே இருக்கும்!



மைதிலிவளவன்,
சென்னை
பல்கலைக் கழகம்

● ஸ்ரீப்ரியா நடிக்கிற படத்தில எல்லாம் அவுங்க நம்ம மனசிலே நிறைஞ்சிருக்காங்களோ இல்லையோ, நிச்சயமா திரை முழுக்க நிறைஞ்சிருக்காங்க. அட்லீஸ்ட், நம்ம உடம்புக்கு இன்ன டிரஸ் போட்டுண்டாத் தான் பாக்கும்படியாவாவது இருக்கும்னு தெரிய வேணும்? பேட்டி: **வஸந்த்**

அபிராமி பட்டர் ஏன்ன செய்வார்?

அந்தாதி பாடிய
அபிராமி பட்டரே மீண்டும் ஒரு
அந்தாதி பாடுவாரே
அபிராமி பட்டுப் புடவையின்
அழகைக் கண்டு.



அபிராமி சில்க்ஸ்

போன்: 421227

ஏர்-கண்டிஷன்ட்
குறைந்த விலை எங்கள் குறிக்கோள்
6, 7 & 8 ரங்கநாதன் செட்டி ரோடு,
(நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

வட்டமேஜை

● திரு கே. ஸ்ரீனிவாசன் அவர்களின் போலத்தில் ஒரு புரட்சியைப் படித்தபோது மேல் நாடுகள் எல்லாம் ''சோஷலிஸ மாயை யிலிருந்து எவ்வளவு தீவிரமாக — புரட்சிகர மாக — விடுபடுகின்றன என்பதைப் புரிந்து கொண்டு ஒரு பெருமூச்சு விட்டேன்; வேறு என்ன செய்ய! நம்மைப் பொறுத்தவரை கவலையில்லை; புரட்சியுமில்லை! தலைவனு மில்லை — தனி வழியுமில்லை! 'சோஷலிஸ' ஜால்ரா முழங்க — மக்களேய்ப்பு பஜனை ஆனந்தமாகத் தொடரட்டும்!

திருவள்ளூர் — ஆர். இந்திரா

● ''மதுவிலக்கில் மதிமயக்கம்'' என்னைப் பொறுத்தவரை காலங்கடந்த சூரிய நமஸ்காரம். தேவையில்லாதது என்று உறுதியாகக் கூறுவேன்.

பங்களூர் — ப. மூர்த்தி

● அரசியல் கொள்கையில் நான் உங்களோடு மாறுபட்டிருந்தாலும் மதுவிலக்குக் கொள்கையில் நான் உங்கள் பக்கம்தான். முழு மூச்சாக ஆதரவு தரத் தயாராயிருக்கிறேன். தொடருங்கள் உங்கள் 'மது எதிர்ப்புக் கொள்கையை'

மேட்டுப்பாளையம் — பி. பீட்டர்

● 'மிதமாகக் குடியுங்கள்' என்ற கோரிக்கைப் பிரசாரம் உலகில் எந்தத் தேசத்திலும் என்றைக்குமே வெற்றி பெற்றதில்லை என்று சொல்கிறீர்கள்.

குடிக்காதீர்கள் என்று சொல்லிப் பிரசாரம் நடந்து வெற்றி பெற்ற ஏதாவது ஒரு நாட்டைக் குறிப்பிட்டு இருந்தீர்களானால் யோசனை சிறப்பாக அமைந்திருக்கும்.

திருச்சி — எம்.ஏ. அப்துல் லத்தீப்

● புதுமையான சினிமா விமர்சனம் கண்டேன். அதற்காக எங்கள் கண்களுக்கும் கழுத்துக்கும் இவ்வளவு வேலை தரவேண்டுமா?

ராசிபுரம் — ஆர்.டி. பரத்மணி

● ''தோல்வியில் ஒரு வெற்றி'' தந்த ராஜேஷ்குமார், ''ரயிலில் வந்த ராஜ புதனத்துப் பெண்'' தந்த பாகி. இராமச்சந்திரன், ''விரக்தி'' படைத்த கிருஷ்ண குரு, ''கடைசிப் பக்கம்'' கண்ணதாசன் —இவர்கள் சென்ற வாரக் கல்கியைப் பெருமைப்படுத்தியவர்கள்.

தஞ்சாவூர் — கா. மு. பாரூக்

● ''பெரியவர்: தர்மத்தின் மறு பெயர்'' உண்மையிலேயே பெரியவர் (மிகப்) பெரியவர்தான் என்பதைத் தெளிவாக்கிவிட்டது! இந்த யுகத்தின் அற்புத முன்னுதாரணம் பெரியவர்தான்!

பெங்களூர்-53 — ''மலர் மடந்தை''

● 'இவர்களைத் தேசவுடைமையாக்குங்கள்' என்ற குட்டி கிருஷ்ணனின் பாரதி விழா பாடல் நிகழ்ச்சி பற்றிய கட்டுரை நெஞ்சத்தைத் தொட்டது.

''பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா'' என்ற கவிக் கோமானின் உள் மனமறிந்து எழுதிய செம்மையான கட்டுரை.

சென்னை — கே. ராமமூர்த்தி
தலைவர், பாரதி இளைஞர் சங்கம்



எங்கள் கனவு பூமியில்—
நாங்கள் புயலைக் காலடியில் மிதிக்கிறோம்.
ஆனால்..., வாழ்க்கை வீதிக்கு வரும்போது
புயலோடு வரும் மழைத்துளிகள்
எங்கள் உடல்களை நனைக்கின்றன.
நாங்கள்தான் மாணவர்கள்.
வெறும் கால்களோடு—
இரவின் கறுத்த திசைகளுக்குள்
ஒற்றையடிப் பாதைகூட
இல்லாத காட்டு வழியில்—
நாங்கள் யாத்திரைக்காரர்கள்!
நாங்கள்—
பூமியில் இருந்து
வால்நட்சத்திரங்களாய்ச் சீறி...;
நீல ஆகாயத்தையே
வேரோடு குலுக்குவோம்!
சொர்க்கத்தைப் பூமிக்குக்
கொண்டு வருவோம்.
எங்கள் மரணத்தையே கடிவாளமாக்கிக்
காலமென்ற முரட்டுக் குதிரையை
மானுடத்தின் திக்விஜயத்துக்குத்
தயார் செய்வோம்!
எங்கள் சாவின் மேலேயே
வாழ்க்கையின்
சரித்திரக் குறிப்புக்களை
எழுதிவைப்போம்.
ஆதிக்கக்காரர்கள் 'காலநதி'யை
அணைகட்டித் தேக்கும்போது — நாங்கள்
அந்த நதிக் கரைகளை உடைப்போம்.
எதிர்காலத்தின் மீது
காதலையும்
நம்பிக்கையையும்
நாங்கள் சிருஷ்டிக்கிறோம்.
நாங்கள் சிந்தும்
ஒவ்வொரு ரத்தத் துளியும்
அங்கே ஒரு ரோஜாவாய் மலரும்.
நாங்கள் சிந்தும்
ஒவ்வொரு கண்ணீர்த் துளியும்
அங்கே ஒரு புன்னகையாய்ப் பூக்கும்.

கனகாவும் பஞ்சபாண்டவர்களும்

பிஸ்கோத்



[கல்லூரி காம்பௌண்ட். மணி பத்து-பதி னைந்து. காம்பௌண்ட் நிரம்ப 'அக்கவுண்ட்' உள்ள மாணவர்கள். ஒரு மூலையில் 'தலைவர்' பிரதாப், சோ. மாரி, நவீன், அன்புரோஸ். அவர்கள் முன்னே ஆவி விட்ட மக்கள். பரபரப்போடு சீனிவாச சங்கர சுப்பிரமணி வருகிறான்.]

சோ. மாரி: வாடா எறும்புத் தின்னி. என்னடா வேட்டு?

சீனி: அதை ஏன் கேட்கறே?

மாரி: சரி கேட்கலே.

சீனி (பிரதாப்பைப் பார்த்து): தலைவரே இன்னிக்கு என் மானமே போச்சு.

மாரி (விளையாட்டாக): அட, அப்படி ஒண்ணு உனக்கு இருந்ததா?

சீனி: சும்மா இருடா சோமாறி. தலையைப் பிய்ச்சுக்கலாம் போல் இருக்கு.

நவீன்: வேண்டாம்மா. அப்படியெல்லாம் செஞ்சுடாதே. இருக்கிற நாலையும் எடுத் திட்டா எங்களுக்குத்தான் கஷ்டம். அப் புறம் எங்க கண் கூசும்.

பிரதாப்: டேய் விடுங்கடா அவனை. விஷ யத்தைச் சொல்லட்டும்.

சீனி: காலேஜுக்கு நம்ம பஸ்லே வந்துகிட்டு இருந்தேன். அதே பஸ்ஸில நம்ம 'காலேஜ் சுந்தரி' கனகாவும் வந்துக்கிட்டு இருந் தாள்.

நவீன்: அவளுக்குத்தான் கார் இருக்கே! பஸ்ல எதுக்கு வரணும்?

சீனி (கடுப்புடன்): அதுவா? இன்னிக்கு பி.டி.சி. பஸ்ல வர்றேன்னு வேண்டிக் கிட்டாளாம்.

பிரதாப்: டேய் சும்மா இருங்கடா. நீ மேலே போ சீனி.

சீனி: பஸ் டிரைவர் நமக்கு ரொம்ப வேண் டியவர். போன வாரம்தான் அவர்கிட்டே இருந்து பத்து ரூபாய் கைமாத்து வாங்கி யிருந்தேன். 'சிட்டி மார்க்கெட்' கிட்டே வரும்போது டிரைவரைப் பார்த்து நைஸா கண்ணடிச்சேன். அவ்வளவுதான் 'சடார்'ன்னு பிரேக்கைப் போட்டாரு!

அம்பு: அது எப்படி? பின்னாலே இருக்கிற நீ கண்ணடிச்சது முன்னாலே இருக்கிற டிரை வருக்கு எப்படிடா தெரியும்?

சீனி: டேய்..டேய்... உன்கிட்டே நான் கைமாத்து வாங்கி இருக்கேன்னு இப்படி யெல்லாம் என்னைக் குறுக்குக் கேள்வி கேட்கிறியா?

பிரதாப்: நீ சொல்லு கண்ணு.

சீனி: அப்புறமென்ன? 'சர்ர்ர்ர்'ன்னுபோய் முன்னாலே இருந்த கனகா மேலே ஒட்டிக் கிட்டேன். இதுக்குப் போய்க் கனகா கோபிச்சுக்கிட்டாள். ஜெர்மன் கிளாஸ் போகிறாப் போல இருக்கு. அதிலேயே புடிச்சுத் திட்டிட்டா. பஸ்லே இருந்த அத்தனை பேரும் என்னையே பரிதாபமாக பார்த்தாங்க...



நவீன்: அப்புறமென்ன, துண்டை விரிச்சிட வேண்டியதுதானே?
சீனி: எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் செத்திடலாம்னு ஆயிடுச்சு, தலைவரே!
நவீன்: இந்தாம்மா, செய்யறதுதான் செய்யறே. காலேஜ் இருக்கிற நாளாப் பார்த்துச் சாவு. ஒரு நாள் லீவாவது கிடைக்கும்!
சீனி (சோகத்துடன்): ஏண்டா, ஒரு சக மாணவி உங்களுடைய உடன் பிறப்பை அவமரியாதைப் படுத்தியிருக்காள். உங்களுக்கு மீசை துடிக்கலியா?
அம்பு: இல்லையே!
சீனி: ஏன்?

அம்பு: நாங்கதான் மீசை வச்சுக்கலியே!

பிரதாப்: உன்னை அவமானப்படுத்தின கனகாவைப் பழிக்குப் பழி வாங்கணும். அப்படித்தானே?

நவீன்: டேய் சீனு! ஒண்ணு செய். கனகாவுக்கு நம்ப காலேஜ் கான்மேன் காப்பி ஒண்ணு வாங்கிக் குடுத்துடு. அவளைப் பழிவாங்கின மாதிரி இருக்கும்.
பிரதாப்: கவலைப்படாதே சீனு. இதே மாதிரி நம்ம சைமனைக் கூட அவமானப் படுத்தியிருக்காள். திமிரு பிடிச்சவள். சரியான ராங்கிக்காரி. அவளை இன்னும் ஒரு மாசத்திலே இந்த காலேஜை விட்டுத் துரத்தலே நான்...
நவீன்: தலைவரில்லே!
அம்பு: நீ தலைவரில்லேன்னு எங்களுக்குத் தெரியாதா?
பிரதாப்: அதுக்கு முன்னே நீங்க ஒவ்வொருத்தரும் அவளை 'வாட்ச்' பண்ணணும்.
எல்லோரும்: ஓ. கே. பாஸ்!
நவீன்: அதென்னடா ஓ. கே. பாஸ்?
மாரி: சினிமாவிலே அப்படித் தாண்டா சொல்லுவாங்க.

2

[சபையர் தியேட்டர். 'ஜெகன்மோகினி' படம் திரையிடப் பட்டிருக்கிறது. காசு கொடுத்து டிக்கெட் வாங்கி நவீனும் அம்புவும் உள்ளே உட்காருகிறார்கள்.]

நவீன் (தற்செயலாகப் பின்னால் திரும்பிப் பார்த்து): டேய் அம்பு, பின்னாலே பார்டா.

அம்பு: ஏண்டா, மூட்டை ஏதாவது கடிக்குதா?
நவீன்: மடையா, என் முதுகையா பார்க்கச் சொன்னேன்? பின்னாலே, கடைசி வரிசையில் யார் உட்கார்ந்து இருக்காங்கன்னு பாரு.

அம்பு (கண்ணாடியைக் கழற்றிவிட்டுப் பார்க்கிறான்): அட தேவுடா! நம்ம கனகா! ஹாய்... ஆமா, அதுக்குப் பக்கத்திலே இருக்கிறது யாருடா நவீன்?

நவீன்: உன் தாத்தாவாக்கும்!

அம்பு: டேய் நவீன், பொய் சொல்லாதேடா என் தாத்தா செத்து வெள்ளி விழா கொண்டாடிட்டோம். இது அவர் ஆவியாக இருக்கும்.
நவீன் (கடுப்புடன்): உம் மூஞ்சி. ஏண்டா ஜோக்கா அடிக்கிறே!
அம்பு: தப்பு....தப்பு... கோபிச்சுக்காதே. விஷயத்தைச் சொல்லு.

நவீன்: கனகாவோட இருக்கிறவனைப் பார்த்தால் அவளோட காதலன் மாதிரி தெரியுது. என்னு அடிக்கடி சிரிக்கிறான் பாரு. நமக்குத் தெரியாம, நம்மை யெல்லாம் விட்டு விட்டு கனகா வெளியிலே ஓரம் கட்டறான். இதை நம்ம தலைவர் காதிலே போட்டிடுவோம்.

3

[கல்லூரி கான்டீன். அதே பஞ்சபாண்டவர்கள். அதே ஆவி போன டீ.]

அம்பு: ஆமாம் தலைவரே, நவீனும் நானும் நேத்து காலேஜை 'கட்' அடிச்சிட்டு சபையருக்கு 'ஜெகன்மோகினி' ஏழாவது தடவையா பார்க்கப் போயிருந்தோம். அந்த ஷோவுக்குக் கனகாவும் வந்திருந்தாள். அவ கூட யாரோ ஒருத்தன் உட்கார்ந்துகிட்டு இருந்தான்.

பிரதாப்: அப்போ கனகா யாரையோ ஒருத்தனைக் காதலிக்கிறான். அதுவும் எப்படி? காலேஜை 'கட்' அடிச்சிட்டு ஜோடியா போறான். அப்போ, இந்த விவகாரம் வீட்டுக்குத் தெரியாமல் நடக்குது. நாம் செய்ய வேண்டியதுஒண்ணே ஒண்ணு...

நவீன்: இன்னொரு டீ சாப்பிடலாம்னு சொல்றியாம்மா?

அந்த நாள் ஞாபகம்

எங்கள் வகுப்பில் எங்களுக்கு ஆங்கில துணைப் பாடம் நடத்தி வந்த பேராசிரியரின் உச்சரிப்புக் கொஞ்சம் புரிந்து கொள்வதற்குக் கஷ்டமாக இருந்தது. ஒரு நாள் நானும் இன்னும் சில நண்பர்களும் கல்லூரி இடைவேளையில் காப்பி சாப்பிடுவதற்குக் கல்லூரி கான்டீனுக்குச் சென்றிருந்தோம். அங்கு நாங்கள் எப்போதும் எங்களுக்குப் பாடம் நடத்த வரும் பேராசிரியர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். அன்று நான், "நமக்கு ஆங்கில துணைப்பாடம் நடத்தி வரும் பேராசிரியரின் உச்சரிப்பே சரியாகப் புரியவில்லை. இவரைப் போய் போட்டிருக்காங்களே, நாம் இந்த வருஷம் கரும்பட்டா மாதிரிதான்" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே என் நண்பன் கையை அழுத்திச் சைகை காண்பிக்க அங்கு நான் யாரைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தேனோ அந்தப் பேராசிரியரே காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்தார். நான் திகைத்துப் போய்விட்டேன். கடைசியில் நான் அவரைத் தனியாகச் சந்தித்து "என்னை மன்னித்து விடுங்கள். தவறுதலாகக் கூறிவிட்டேன்" என்று கூற, உடனே அவர், "நோ... நோ... நீ கூறியதில் தவறில்லை. ஆனால் கூறிய இடம்தான் தவறு. என் குறையை நேரிடையாக என்னிடமே தெரிவித்திருக்கலாமே! எப்படியும் நாளை முதல் நன்றாகப் புரிந்து கொள்ளும் வகையில் ஒன்றுக்கு இரண்டு முறையாக விளக்கம் கூறிப் பாடம் நடத்த முயலுகிறேன்." என்று அவர் கூறினார். அவரது பதில் என்னை மெய் சிலிர்க்க வைத்து விட்டது.

-எஸ். கோபாலன்



பிரதாப்: நோ...நோ... கனகாவோட அப்பாவுக்கு ஒரு மொட்டை லெட்டர் எழுதுவோம். அதிலே கனகாவோட காதல் விவகாரத்தைப் புட்டுப் புட்டு வைப்போம். அதைப் படிச்சதும் அப்பனுக்குக் கோபம் பொத்துக்கிட்டு வரும். அப்புறம்? ஹ...ஹ...ஹ...

சீனி: கனகா கல்லூரிக்கு 'டாடா' சொல்லிடுவாள்.

மாரி: தலைவர் பாணியே தனி!

நவீன்: அவர் தலைவார்ற பாணியும் தனி!

4

[வகுப்பறை. தூரத்தில் லெக்சரர் ஏதோ நடத்திக் கொண்டிருக்கிறார்.]

நவீன்: ஏன் தலைவரே, நாம்ப போன வாரம் செய்த வேலைக்கு ஒரு ரியாக்ஷனும் காணுமே?

அம்பு: கனகா என்றைக்கும் போல காலேஜுக்கு வந்து போய்க்கிட்டுத்தானே இருக்கான்.

சீனி: அதுக்குத்தான் நான் அன்னைக்கே தலையிலே அடிச்சுக்கிட்டேன். ஸ்டாம்ப் ஒட்டாம அந்த லெட்டரை 'போஸ்ட்' பண்ணுதேன்னு!

பிரதாப்: டேய், நம்ம 'பி. அண்ட் டி.'யைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? ஸ்டாம்ப் இல்லாமப் போற லெட்டரெல்லாம் 'ரெஜிஸ்டர் தபால்'மாதிரி போய்ச் சேரும். பைன் வசூல் பண்ணணுமே?

அம்பு: கனகாவோட அப்பன் கஞ்சப் பிரபுவோ என்னவோ? 'பைன்' கட்டி லெட்டர் வாங்கப் பயந்து, திருப்பிக் கொடுத்திட்டானோ?

நவீன்: சார் மணி அடிச்சிடுச்சி சார்.

(லெக்சரர் போகிறார். சோ.மாரி, 'தடதட'வென்று ஓடி வருகிறான்.)

சீனி: ஏண்டா கடன்காரன் யாராவது துரத்துறானா?

மாரி (புஸ் புஸ் என்று மூச்சு விடுகிறான்)? உன்னைப் போல என்னையும் நினைச்சிட்டியா: தலைவரே, கண்டு பிடிச்சுட்டேன். கண்டு பிடிச்சுட்டேன்.

அம்பு: நம்ம கான்டீன் காப்பி ஏன் பினாயில் வாசனை அடிக்கிறதுன்னா?

மாரி: அடச்சே! கனகாவோட லீலைகளை!

பிரதாப்: நீ என்னடா சொல்றே?

மாரி: ஆமாம் தலைவரே, தினமும் லஞ்ச் நேரத்தில் பக்கத்துத் தெருவுக்குப் பக்கத்துத் தெரு. ஒரு பெரிய பங்களா. 'கோவிந்தா இல்லம்'னு பேர். லஞ்ச் நேரத்துல தினமும் கனகா அந்தப் பங்களாவுக்குத்தான் போறான். சாப்பிடப் போறானா?

சீனி: இதிலே ஏதோ விஷயம் இருக்கு, தலைவரே!

மாரி: அதுதான் சாப்பாட்டு விஷயம் இருக்குன்னு சொன்னேனே?

பிரதாப்: எனக்கு ஒரு 'ஐடியா' தோணுது. இதை வெச்சே கனகாவை ஒரு கலக்குக் கலக்கிடலாம்.

நவீன்: எப்படி?
பிரதாப்: நாளைக்கு காலேஜ் முழுதும் 'கனகாவின் காதல் லீலைகள்', 'கனகா கோவிந்தாவுக்குப் போவது ஏன்?' அப்படி இப்படின்னு எழுதிடணும். அதைப் படிச்சதும் அவ அசந்திடுவாள். அப்புறமென்ன? பழிக்குப் பழி!

5

[லைப்ரரி; அதே நபர்கள். 'சப்தம் செய்யாதே!' என்ற பலகை.]

சீனி: வெல்டன் தலைவரே! இப்படிக் கையைக் கொடுங்க.
நவீன்: நீங்க சொன்ன மாதிரி அன்னைக்கு ராத்திரி காலேஜ் கவர் பூரா கன்னு பின்னுன்னு கனகாவைப் பத்தி எழுதிட்டோம். மறுநாள் காலேஜுக்கு வந்த கனகா இதைப் பார்த்திட்டு உடனே திரும்பிப் போய்விட்டாள். இரண்டு நாளா காலேஜுக்கே அவள் வரலே.
மாரி: எல்லாம் உங்க 'ஐடியா'தான் தலைவரே!
(காலேஜ் பியூன் வருகிறான்.)
பியூன்: சார் என் பேரு பொன்னுசாமி. இந்த காலேஜ்லேதான் பியூனு வேலே பார்க்கிறேன். உங்க எல்லோரையும் பிரின்சிபால் வரச் சொன்னார்.
எல்லோரும் (ஆச்சரியத்துடன்): ஏன்? என்ன விஷயம்?
பியூன்: என்னைக் கேட்டா? நானு பிரின்சிபால்? வர்றீங்களா?
எல்லோரும் (முகத்தில் பயக் களையுடன்): வந்துதானே ஆகணும்? (போகிறார்கள்.)

[பிரின்சிபால் அறை. இருந்து மறைந்து போன மாஜி பிரின்சிபால்கள் படங்கள் நிகழ்கால பிரின்சிபால். அவர் எதிரே வருத்த கடலைத் தட்டு. பக்கத்தில் கனகா. கனகாவுக்குப் பக்கத்தில் ஒரு புதிய இளைஞன். யார்? தெரியவில்லை..]

பிரின்சிபால்: யெஸ். கம் இன்! (ஒவ்வொருவராக நுழைகிறார்கள்) ப்ளீஸ் உட்காருங்கள்.
எல்லோரும்: தாங்க்ஸ் சார் (எதிரே இருக்கும் கனகாவைப் பார்த்து ஆச்சரியப் படுகிறார்கள்.)
பிரின்: நீங்க தேங்ஸ் சொல்ல வேண்டாம். உங்களுக்குத் தாங்க்ஸ் சொல்லத்தான் கனகாவும் மிஸ்டர் கோவிந்தனும் காத்திருக்காங்க.
எல்லோ (ஆச்சரியத்துடன்): தாங்க்ஸா? எதுக்கு ஸார்? ஒன்னுமே எங்களுக்குப் புரியலே.
கனகா: ஆமாங்க மிஸ்டர்ஸ் பஞ்சபாண்டவர்கள்! நீங்க செய்த உதவிக்கு நன்றி சொல்லத்தான் நாங்க வந்திருக்கோம். (புரியாமல் அவர்கள் விழிக்கிறார்கள்) டை இடை இவர் என்னோட தாய் மாமா. பேர் கோவிந்தன். நம் கல்லூரி ஃபவுண்டரோட ஒரே மகன். இவரைத்தான் நான் கட்டிக்கப் போறேன்.
எல்லோ: சார்! நாங்க எந்தத் தப்பும் பண்ணலே,

அந்தநாள் ஞாபகம்



மாணவர்களே தூங்குங்கள்!

தமிழ் ஹானர்ஸ் வகுப்பில், அஞ்சல் துறையில் வேலை செய்யும் இருவர் சேர்ந்து படித்து வந்தனர். பகலில் கல்லூரிக்கு வருவார்கள். இரவில் அஞ்சல் துறையில் வேலை செய்வார்கள். அதனால் வகுப்பில் சில சமயம் தூங்கி வழிவதுண்டு.

ஒரு நாள் டாக்டர் மு. வ. வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மேற்குறிப் பிட்ட மாணவருள் ஒருவர் கண்ணை மூடித்தூங்கிக் கொண்டிருந்தார். மு.வ.வின் பார்வை அவர் மீது விழுந்ததைப் பார்த்த மற்றொரு மாணவர், அவரை எழுப்ப முயன்றார். உடனே ''வேண்டாம். அவரை எழுப்ப வேண்டாம்.'' என்று தடுத்த பேராசிரியர் தொடர்ந்து சொன்னார்: ''தூக்கம் வராமல் துன்பப்படும் எனக்குத் தூங்குபவரைப் பார்க்கும்போது பொறாமையாக இருக்கிறது. இயற்கையாகத் தூக்கம் வரும்போது அதை விரட்டிக் கண் விழித்தால் பின்னர் தூக்கமின்மை வரும். அதனால் பெரும் துன்பம் விளையும். மாணவர்களே! இரவில் கண் விழித்து அதிக நேரம் படிக்க வேண்டாம். தூக்கம் வந்தால் உடனே தூங்குங்கள்'' என்று அறிவுரை வழங்கினார்.

-பூவண்ணன்

கனகா: நீங்க தப்பா எதுவும் செய்யலே தான். கரெக்டாத்தான் செய்தீங்க. என்னை இவருக்குக் கட்டிக் கொடுக்க என் அப்பா ரொம்ப நாளா மறுத்துக்கிட்டு இருந்தார். இவரைத் தவிர வேற யாரையும் கட்டிக்க நான் விரும்பல்லே. என்ன செய்யறதுன்னு புரியாமல் தவிச்சிக் கிட்டு இருந்தேன். நல்லவேளை. கடவுள் மாதிரி நீங்க அஞ்சு பேரும் வந்தீங்க. நீங்க எல்லோரும் என்னைப் பத்திக் 'கன்னு பின்னு' என்று சுவரெல்லாம் எழுதி வச்சீங்க. அதையெல்லாம் என் அப்பாவைக் கூட்டிக்கிட்டு வந்து காட்டினேன். அதை எழுத்துக் கூட்டிப் படித்துப் பார்த்த என் அப்பா பதறிப்போய்விட்டார். என் மானமே போச்சுன்னு கதறினார். இனிமேல் தன் பொண்ணுக்கு யார் மாப்பிள்ளை கொடுப்பார்கன்னு நெனைச்சு, கடைசியா நான் அவரையே கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம் தந்திட்டார். நாங்க ரெண்டு பேரும் ஒன்னுச் சேர்றதுக்கு நீங்கதானே காரணம். ஒரு சக மாணவியின் கஷ்டத்தை எப்படியோ புரிஞ்சுக் கிட்டு எனக்கு உதவி செய்திருக்கீங்க. அதுக்காக உங்களுக்கு ரொம்ப தேங்க்ஸ்!
(எல்லோரும் மயங்கி விழுகிறார்கள்.)
பிரின்: டேய் பொன்னு, ஓடிப்போய் உன் கணக்கில் கோலி சோடா அஞ்சு வாங்கிட்டு வா! (பியூன் ஓடுகிறான்.)



கல்லூரிக்கு பெருமைதரும் இருவர்

தமிழ்நாட்டின் பெருமையை இந்திய அளவில் உயர்த்திக் கொண்டிருக்கும் இரண்டு இளம் கல்லூரி விளையாட்டு வீரர்களைச் சந்திக்க வைத்தபோது!

சாண்ட்ரா தாமஸ்: உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. நீங்கள் ஆரம்பத்திலிருந்தே கிரிக்கெட்தான் விளையாடுகிறீர்களா?

கே. ஸ்ரீகாந்த்: சிறு வயதிலிருந்தே கிரிக்கெட் என்றால் எனக்குப் பைத்தியம். நாளா வட்டத்தில் அதிகரிக்க ஆரம்பித்தது. எங்கள் குடும்பத்தில் இதற்கு முன் யாரும் கிரிக்கெட் விளையாடியதில்லை. ஆனால் இப்போது என் தம்பி, என் சகோதரியின் கணவர் என்று பலர் ஆடுகிறார்கள். நீங்கள் எப்படி விளையாட்டு வீராங்கனையாக மலர்ந்தீர்கள்?

சாண்ட்ரா: எனது பதினோராவது வயதிலிருந்தே நான் ஓட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல் ஆகியவைகளில் பங்குபெற ஆரம்பித்தேன். இதற்கு முக்கிய காரணம் என் தகப்பனார் அம்பி தாமஸ்தான். அவரே உயரத் தாண்டுதலில் உயர்ந்தவர். டான் பாஸ்கோ அதலடிக் கிளப்பில் நான் சேர்ந்து திரு ஏ. ஜே. டிசோஸா விடம் பயிற்சி பெற ஆரம்பித்ததிலிருந்து நான் பல வெற்றிகளைப் பெற்றேன். நீங்கள் எங்கெல்லாம் விளையாடச் சென்றிருக்கிறீர்கள்?

ஸ்ரீகாந்த்: நான் இந்தியாவில் உள்ள எல்லா கிரிக்கெட் மைதானங்களிலும் விளையாடி இருக்கிறேன். ஆனால் ஒன்றைத் தவிர கான்பூரில் மட்டும் நான் இதுவரை விளையாடவில்லை. நீங்கள் சாதித்த சாதனைகள் என்னென்ன?

சாண்ட்ரா: நானும் உங்களைப் போலத்தான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 1977ம் வருடம் சென்னையிலே மாநிலங்களுக் குள்ளான விளையாட்டுப் போட்டியில் சிறந்த வீராங்கனையாகப் பரிசு பெற்றேன். சமீபத்தில் மாஸ்கோவுக்குச் சென்று விட்டு வந்தேன். உங்களது அபிமான கிரிக்கெட் விளையாட்டு வீரர் யார்?

ஸ்ரீகாந்த்: விஸ்வநாத். பந்து வீச்சாளரிலே வெங்கட்ராகவன். உங்களது மறக்க முடியாத சாதனை என்று எதைக் கூறுகிறீர்கள்?

சாண்ட்ரா: இந்த வருடம் நான் இந்தியாவின் சார்பாக டில்லியில் நடைபெற்ற இந்தோ-சிலோன் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டேன். 100 மீட்டர் ஹார்டில்ஸிலும், நீளத் தாண்டுதல் போட்டியிலும் முதலாவதாக வந்தேன். இதில் நீளத் தாண்டுதல் போட்டியில் புதிய சாதனையை நிகழ்த்தினேன். 5.26 தமிழ் நாட்டிலிருந்து சென்ற ஒரே பெண் நான்தான். இந்தியாவின் சார்பாகச் சென்று 3 தங்கப் பதக்கங்களைப் பெற்று வந்திருக்கிறேனே! உங்களது மறக்க முடியாத பந்தயம் எது?

ஸ்ரீகாந்த்: இந்தியா வந்திருந்த பாகிஸ்தானிய கிரிக்கெட் வீரர்களுக்கு எதிராக நான் விளையாடி 90 ஓட்டங்கள் எடுத்தேன். ஆஸிப் இக்பால் தலைமையில் உலகப் புகழ் பெற்ற சுழல் வேகப் பந்து வீச்சாளர்களும் பந்து வீச, நான் 90 ரன்கள் எடுத்தது எனக்கு மறக்க முடியாதது. என்னுடைய பொழுது போக்குகள் ஆங்கில இசை கேட்பது. உங்களுக்கு?

சாண்ட்ரா: உங்களைப் போல் ஆங்கில இசையும் கேட்பேன். அதற்கு ஏற்ப நடனமும் ஆட விரும்புவேன். எப்பொழுதாவது புத்தகங்களும் படிப்பதுண்டு.
(இருவரும் வாழ்த்துக் கூறி விடை பெறுகின்றனர்.)

பேட்டி: **அசோக்குமார்**
படங்கள்: **யோகா**

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

பார்லே

உலகிலோர் ஒப்பிலா மணி யென அவளுக்கு உணர்த்திடும் அன்புறவே.



எல்லையற்றதம்மா உங்கள் இனிய கவனிப்பு... அவளுக்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டே அதன் தரமுரைக்கட்டுமே. திண்ணம் அதுவே. தீவிர சுகாதார முறையில் கைபடாத் தூய்மையோடு தயாரித்த பிஸ்கட்—சுவை மிக்கது, சத்தானது. அவளுடைய தேவைக்கு சீரான ஊட்டச்சத்து உள்ளது. எண்ணிப் பாருங்கள், தரத்திற்காக 7 உலக விருதுகளை வென்ற பிஸ்கட்—பார்லே க்ளுகோ—இந்தியாவின் அதி நவீன பிஸ்கட் தயாரிப்பாளர்களின் படைப்பு.



இந்தியாவின் அதிக விற்பனை கண்ட பிஸ்கட்

உலக விருதுகளை வென்றது

பார்லே
க்ளுகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

everest/80/PP/332-tm